2012, December 01 - 15

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

# சமகாலம்

Registered in the Department of Posts of Sri Lanka under No: QD/165/News/2012



## யார் என்ன செய்ய வேண்டும்?

## ராமதாஸ் கிளப்பிய திராவிட சர்ச்சை

## ஐ.தே.க.வும் ரணிலும்

| | | |
|---|---|---|
| INDIA..............IN₹ 50.00 | CANADA........CAN$ 10.00 | USA...........US$ 10.00 |
| SRI LANKA....SLR 100.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK.............GB£ 5.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS.............CHF 10.00 | EUROPE..EU€ 5.00 |

EXPRESS NEWSPAPRES (CEY) (PVT) LIMITED



NEWS ALERTS

வீரகேசரியின் விறுவிறுப்பான செய்திகள்...


உடனுக்குடன் உங்கள் கையடக்கத்தொலைபேசியில் தெரிந்துகொள்ளுங்கள்

**டயலொக் : reg (space) virakesari என type செய்து**

**77007 என்ற**

**இலக்கத்துக்கு அனுப்புங்கள்.**

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது. மாதாந்த கட்டணமாக ரூபா. 30/- + வரி அறவிடப்படும்.



ஒருபெரிய மலையில் ஏறிய பிறகு தான் நான் ஏறுவதற்கு மேலும் பல மலைகள் இருக்கின்றன என்பதைக் கண்டுகொண்டேன். என்னைச் சூழவுள்ள மதிப்புவாய்ந்த நெடுநீள் நிகழ்ச்சித் தொடர்களைப் பார்ப்பதற்காக அங்கு ஒரு கணம் தரித்து நின்றேன், நான் கடந்து வந்த பாதையின் தூரத்தை திரும்பிப் பார்த்தேன். ஆனால், ஒரு கணம் மாத்திரமே என்னால் தரித்து நிற்கமுடியும். ஏனென்றால், விடுதலையுடன் கூடவே பொறுப்புகளும் வந்துவிட்டன. எனது நீண்ட பயணம் இன்னும் முடிவுக்கு வந்து விடவில்லை என்பதால் நான் சுணங்கி நிற்கத் தயாரில்லை.

நெல்சன் மண்டேலா (1994)

# உள்ளடக்கம்


எமது விருந்தினர்
கலாநிதி ஜெஹான் பெரேரா 09

இலங்கைத் தமிழ் அரசியலும்
அரசியல் தீர்வுக்கான தேடலும் 12
சர்வதேச நெருக்கடிக்குழுவின் அறிக்கை

ரணிலின் தலைமைத்துவ இலட்சணம் 22
குசல் பெரேரா

தமிழ் அரசியல் கைதிகள்
விடுதலைக்கு வழி என்ன? 26

பத்திரிகைத்துறைக்கு நெருக்கடி? 29

பிரதம நீதியரசருக்கு எதிரான
சூனிய வேட்டை 32
குமார் டேவிட்

டாக்டர் ராமதாஸ்
கிளப்பிய திராவிடச்சர்ச்சை 39
எம்.காசிநாதன்

இந்தியாவில்
சிந்தனைச்சுதந்திரத்தின் நிலை 43
எம்.பி.வித்தியாதரன்

பாலஸ்தீனர்களின்
இராஜதந்திர வெற்றி 47
முத்தையா காசிநாதன்

பேராசிரியர் கைலாசபதி
ஆளுமையும் முழுமையும் 49

சினிமா - மணிரத்தினம் பற்றி... 52

போரும் இலக்கியமும் 57

குல்தீப் நாயர் கருத்து 58


அறிவியல் களரி 61
டாக்டர் எம்.கே.முருகானந்தன்

கடைசி பக்கம் 64
மு.பொ.







09



12



21



*Samakalam focuses on issues that affect the lives of people of*

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு
சமகாலம்
2012, டிசம்பர் 01-15



32


26


43


47


52


58


64


*Sri Lanka, the neighbourhood and the world*

ஆசிரியரிடமிருந்து...


# சட்டம், ஒழுங்கு மேலும் சீர்குலையும் ஆபத்து

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரணையை அடுத்து அண்மைய சில நாட்களாக நாட்டில் காணப்படக்கூடியதாக இருக்கின்ற நிகழ்வுப்போக்குகள் சட்டம் ஒழுங்கு நிலைவரத்தை மேலும் படுமோசமாக தாக்கிவிடக் கூடிய பேராபத்தைக் கொண்டிருக்கின்றன.

குற்றப்பிரேரணையில் பிரதம நீதியரசருக்கு எதிராகச் சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் செயற்பாடுகளைப் பொறுத்தவரை, வெளியில் இருந்து தெரிவிக்கப்படக்கூடிய கருத்துகளோ, தீர்ப்புகளோ செல்லுபடியற்றவை என்று சபாநாயகர் கூறியிருக்கிறார். பாராளுமன்றத் தெரிவுக்குழு செயற்படுகின்ற முறைமைக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுக்களை விசாரிக்கவிருக்கும் நீதிபதிகளினால் வழங்கப்படக்கூடிய தீர்ப்புகளை அல்லது உத்தரவுகளையே சபாநாயகர் அவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார் என்பது வெளிப்படையானது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் பாரப்படுத்தப்பட்ட மனுமீதான அரசியலமைப்பு வியாக்கியானத்தை தாங்கள் தெரிவிக்கும் வரை பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் செயற்பாடுகளைத் தாமதிக்குமாறு உச்ச நீதிமன்ற நீதிபதிகள் விடுத்த வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டிருக்கிறது. நீதித்துறையிடமிருந்து வரக்கூடிய எந்த உத்தரவையும் ஏற்று மதிக்கவேண்டிய அவசியம் இது விடயத்தில் பாராளுமன்றத்துக்கு இல்லை என்பது தெரிவுக்குழுவின் இந்த நடவடிக்கையினால் உணர்த்தப்பட்டிருக்கிறது.

அதேவேளை, நாடுபூராகவுமுள்ள நீதிபதிகள் பிரதம நீதியரசருக்கு எதிரான பிரேரணைக்கு எதிராக அணிதிரண்டிருப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது. பிரதம நீதியரசர் நீதிபதிகளை கொழும்புக்கு அழைத்து நிலைவரங்களை ஆராய்ந்திருக்கிறார். இது ஒரு புறத்தில் நிறைவேற்று அதிகாரபீடத்துக்கும் நீதித்துறை உயர்மட்டத்திற்கும் இடையிலும் மறுபுறத்தில் நாட்டின் அதியுயர் சட்டவாக்க நிறுவனமான பாராளுமன்றத்துக்கும் நீதித்துறைக்கும் இடையிலும் பெரும் இழுபறியைக் கொண்டுவரப்போகிறது. நீதித்துறை சட்டவாக்க நிறுவனத்துடனும் நிறைவேற்று அதிகாரபீடத்துடனும் இழுபறியில் இருந்தால் அரசாங்க நிருவாகச் செயற்பாடுகளில் தொடர்ச்சியான குளறுபடிகள் ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை.













# கடிதங்கள்

### சிவசேகரத்தின் கட்டுரை

சமகாலத்தின் 10ஆவது இதழில் பேராசிரியர் சி.சிவசேகரம் எழுதியுள்ள 'அடிக்கடி சிறைகளில் கலகம் மூளக் காரணம் என்ன?' எனும் தலைப்பிலான கட்டுரை உண்மையில் அருமையானது.

படித்தவர்கள் முதல் பாமரர்கள் வரை விளங்கக்கூடிய வகையில், சிறைக்கைதிகளின் நிலைப்பாடு தொடர்பான உண்மையான தரவுகளையும், அனைத்திற்கும் உரிமையற்றவர்களாகவே அவர்களை அரசாங்கம் பார்ப்பதனையும் இந்தக் கட்டுரை மூலம் விளங்கிக் கொண்டேன். "சிறைக்கைதிகளும் மனிதர்கள் தாம்" என சிறைச்சாலை சுவர்களிலே ஒட்டப்பட்டுள்ளமை வெறுமனே பெயரளவில் தான் என்பதை பேராசிரியர் சிவசேகரத்தின் கட்டுரைகளிலிருந்து புரிந்து கொண்டேன். இதுபோன்ற கட்டுரைகள் சமகாலத்துக்கு பெறுமதி சேர்ப்பதுடன், எல்லா மக்களுக்கும் பயனுடையதாகவே யுள்ளது. தொடர்ந்தும், நடைமுறையிலுள்ள பிரச்சினைகளை இதனூடாக வெளிக்கொணருவதன் மூலம் என்னைப்போன்ற குடும்பப் பெண்களும் பயனடைவர் என நம்புகிறேன்.

**எப்.ரிகாஷா, புதுக்கடை, கொழும்பு – 12.**

### ஆதங்கம்

சமகாலம் தமிழ் இதழியல்துறைக்கு புதுவரவென்றாலும், ஏதோ நெடுங்காலமாக வரும் ஓர் சஞ்சிகை போன்றே, அதனை வாசிக்கும் போது என் எண்ணத்தில் தோன்றுகின்றது. இந்தியாவிலிருந்து வெளிவரும் சஞ்சிகைகளுக்கு இணையாக எமது நாட்டிலும் முதன்முறையாக அனைத்து அம்சங்களையும் சுமந்து வருவதில் "சமகால"த்துக்கு நிகர் சமகாலமே.

சமகாலம் முதல் சஞ்சிகையைப் பார்த்த போது ஏற்பட்ட சுவாரஸ்யம், தரம், வாசிக்க வேண்டும் என்ற தூண்டல் பாராட்டப்பட வேண்டியது.

எமது நாட்டினதும், பிற நாடுகளினதும் அரசியல், சமூக வரலாற்றை விரிவாக மெருகூட்டி கட்டுரைகளாக வெளிவருவது வாசிப்பதற்கு இன்னுமின்னும் ஆர்வத்தைக் கூட்டுவதோடு, அடுத்த சஞ்சிகை எப்போது வரும் என்ற ஆதங்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

**நவம்.கலாநாயகி, கொழும்பு–15.**

### அரசியலுக்கு கூடுதல் முக்கியத்துவம்

சமகாலம் இதழ் புதுப்பொலிவு பெற்று வருவதை அவதானிக்க முடிகின்றது. எழுத்துரு மாற்றம் சமகாலத்தை மெருகூட்டுகின்றது. பக்க வடிவமைப்பும் இதழை வித்தியாசப்படுத்துகிறது. சமகாலத்தில் உள்நாட்டு, வெளிநாட்டு விடயங்கள் எல்லாமே அரசியலாகத் தான் இருக்கின்றது. உள்நாட்டில் மக்கள் சார்ந்த அரசியல் பின்புலத்தைக்கொண்ட சமூகப் பிரச்சினைகளுக்கும் கொஞ்சம் இடம்கொடுக்கலாம். தொழில்நுட்பம், அறிவியல், சினிமா, இலக்கியம், விளையாட்டு தொடர்பான விடயங்களையும் கொஞ்சம் கொஞ்சம் சேர்க்கலாம். அரசியல் ஆர்வலர்கள் என்ற ஒரு குறிப்பிட்ட வட்டத்துக்குள் சமகாலம் தரித்து நிற்பதை இவை தவிர்க்கும் என நம்புகின்றேன்.

**எஸ்.தனுஜா, சாவகச்சேரி.**

### வேண்டுகோள்

இந்தியாவில் போன்றே இலங்கையிலும் பயனுள்ள சஞ்சிகைகள் வெளிவருகின்றன என்பதை அண்மையில் கொழும்புக்கு வந்த போதே அறிந்து கொண்டேன்.

"சமகாலத்தில்" வருகின்ற ஒவ்வொரு கட்டுரைகள், அரசியல் தரவுகள் அனைத்தும் காலத்தின் தேவையே. எனவே, குறிப்பிட்ட ஒரு பகுதிக்கு மட்டுமன்றி, ஏனைய பகுதி மக்களும் பயனடையக்கூடியதாக சமகால சஞ்சிகையின் விற்பனை நிலையங்களை, விநியோகத்தை விஸ்தரிக்குமாறு எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டட்டுக்கு பணிவான வேண்டுகோளை விடுக்கின்றேன்.

**எஸ்.பைரவி, மாவனல்லை.**

## இதுதான் நல்லிணக்கத்தின் இலட்சணம்!

"சமகாலம்" கடந்த இதழில் (நவம்பர் 16-30) "நல்லிணக்கத்தின் இலட்சணம்" என்ற தலைப்பிலான ஆசிரியர் கருத்து நாட்டின் தற்போதைய யதார்த்த நிலையை நறுக்குத்தெறித்தால்போல கூறுவதாக இருந்தது. "ஆட்சியாளர்கள் போர்க் காலத்தில் கொண்டிருந்த மனோ நிலையிலேயே இப்போதும் செயற்படுகின்றார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் போர் இன்னமும் முடிந்துவிடவில்லை. அது வேறொரு வடிவில் முன்னெடுக்கப்படுகின்றது" என்ற ஆசிரியரின் ஆணித்தரமான கருத்து உண்மை நிலையைத் தெளிவாகப் படம் பிடித்துக்காட்டுவதாகவுள்ளது.

தமிழ் மக்களுக்கு இதுவரையில் எதுவித பலனையும் தராத 13ஆவது திருத்தத்துக்கு எதிராக வெறித்தனமாகக் கிளம்பியிருக்கும் அரசியல் சக்திகள் பற்றிய ஆசிரியரின் விமர்சனம் இந்த நாட்டில் தமிழர்கள் நியாயமான தீர்வு ஒன்றை எதிர்பார்க்க முடியாது என்ற செய்தியைச் சொல்வதாகவே இருக்கின்றது. இலங்கையின் "நல்லிணக்கத்தின் இலட்சணம்" இதுதானா? இந்த நிலைமையை தமிழ் மக்கள் மட்டுமன்றி, சர்வதேசமும் புரிந்துகொள்ள வேண்டும்.

வழமைபோலவே இந்த இதழிலும் அரசியல் கட்டுரைகள் ஆரோக்கியமான கருத்துகளை முன்வைக்கின்றன. "குற்றப் பிரேரணைக்குப் பின்னால் இருக்கும் அரசியல் நிகழ்ச்சி நிரல்" என்ற குசல் பெரேராவின் கட்டுரை தற்போதைய அரசியல் களத்தில் சூடாகப் பேசப்படும் பிரதம நீதியரசர் விவகாரம் தொடர்பான பல்வேறு புதிய தகவல்களையும் கருத்துகளையும் தருவதாக அமைந்திருக்கின்றது. "பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் பெரும்பாலானவர்கள் அரசாங்கத் தரப்பைச் சேர்ந்தவர்களே. குற்றப் பிரேரணை தொடர்பாக மட்டுமே இவர்கள் ஆராய்வார்கள். நீதித்துறையின் சுதந்திரம் தொடர்பான பிரச்சினையை அவர்கள் கிளப்பப்போவதில்லை" என ஆசிரியர் தெரிவித்திருக்கும் கருத்து கோடிட்டுக்காட்டப்பட வேண்டியது. முக்கியமானதொரு உண்மையை அவர் இலகுவாகப் புரியவைத்திருக்கின்றார்.

உள்நாட்டு அரசியல் விவகாரங்கள் மட்டுமன்றி, சர்வதேச மற்றும் இந்திய அரசியல் கட்டுரைகளும் தரமானவையாகவும், பயனுள்ள தகவல்களைத் தருவனவாகவும் உள் ளன. அரசியல் கட்டுரைகள் இடம்பெறும் அளவுக்கு ஏனைய துறைகள் தொடர்பிலான கட்டுரைகள் இடம்பெறாதது ஒரு குறைபாடாகவே எனக்குத் தெரிகின்றது. குறிப்பாக சினிமா, இலக்கியம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற துறைகளிலும் விடயங்கள் இடம்பெறுவதையே விரும்புகின்றோம். இதற்கும் சமகாலம் களம் அமைத்துக்கொடுக்க வேண்டும்.

மருத்துவத்துறையில் டாக்டர் எம்.கே.முருகானந்தன் ஏதோ ஒரு புது விடயத்தை ஒவ்வொரு இதழிலும் தந்து எம்மை அசத்துகின்றார். இந்த இதழிலும் "அலட்சியம் செய்ய முடியாத சத்தம் குழந்தையின் அழுகுரல் மட்டுமே" என்ற அவரது கட்டுரை பயனுள்ள பல புதிய தகவல்களைத் தருவதாக உள்ளது. இது போன்ற புதிய விடயங்களைத்தான் தமிழ் வாசகர்கள் விரும்பிப் படிப்பார்கள்.

**எம்.தனஞ்சயன், ஜெயா றோட், பம்பலப்பிட்டி.**




இருவாரங்களுக்கு ஒருமுறை

ISSN : 2279 - 2031

மலர் 01 இதழ் 11

**2012, டிசம்பர் 01 - 16**

A Fortnigtly Tamil News Magazine

**எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்**
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு-14,
இலங்கை.
**தொலைபேசி : +94 11 7322700**
**ஈ-மெயில்:** samakalam@expressnewspapers.lk

**ஆசிரியர்**
வீரகத்தி தனபாலசிங்கம்

**உதவி ஆசிரியர்கள்**
தெட்சணாமூர்த்தி மதுசூதனன்
துஷியந்தினி கனகசபாபதிப்பிள்ளை

**ஒப்பு நோக்கல்**
என்.லெப்ரின் ராஜ்



வாழ்க்கையில் எனது தெரிவு விபசார விடுதியில் பியானோ வாசிக்கும் தொழிலைச் செய்வதா அல்லது அரசியல்வாதியாகுவதா என்பதாகவே இருந்தது.

- ஹரி ட் ரூமன்

வாசகர் கடிதங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர்,
**சமகாலம்**
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு -14.
இலங்கை.
மின்னஞ்சல் : samakalam@expressnewspapers.lk

# வாக்குமூலம்....



எமது மலையகத் தமிழர்களை இந்திய வம்சாவளித் தமிழர்கள் என்று அழைப்பதை நான் விரும்பவில்லை. ஏனென்றால் அவர்களை அவ்வாறு அழைப்பது தேசிய பிரதான போக்கில் இருந்து பிரித்துப் பார்ப்பதாக அமையும். வங்காள இளவரசன் விஜயனின் வழித்தோன்றல்களான சிங்களவர்கள் இந்திய வம்சாவளியினர் என்று தாங்கள் அழைக்கப்படுவதை விரும்புவார்களா?

**டலஸ் அழகப்பெரும**
இளைஞர் விவகார, ஆற்றல் மேம்பாட்டு அமைச்சர்

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க என்ன கூறியிருக்கிறார் என்று பலர் என்னிடம் கேட்டார்கள். தனது ஆட்சிக்காலத்தில் உச்ச நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்புகளை முழுமனதுடன் ஏற்றுக் கொண்டதாக அவர் கூறியிருக்கிறார். அது சரியானதே. அவர் மாத்திரமல்ல, ஏனைய சகலரும் கூட நீதிமன்றங்களினால் வழங்கப்படும் தீர்ப்புகளை ஏற்றுக்கொண்டேயாக வேண்டும். நீதிமன்றத் தீர்ப்புகளை மதிப்பதைத் தவிர, இதில் விசேடமாக ஒன்றுமில்லை. அரசாங்கத்துக்கு எதிரான தீர்ப்புகளைக் கூட மதித்துச் செயற்பட்டதாக திருமதி குமாரதுங்க கூறியிருக்கிறார். தீர்ப்புகள் அரசாங்கத்துக்கு எதிரானவை என்று எவரும் கூறமுடியாது. அனேகமாக சகல அடிப்படை உரிமை மீறல் மனுக்களும் அரசாங்கத்துக்கு எதிரானவையே.



**சரத் என் சில்வா**
முன்னாள் பிரதம நீதியரசர்

இது எனது போராட்டம், எனக்கு ஒரு போராட்டம் மாத்திரமே இருக்கிறது. அது மகிந்த ராஜபக்ஷ ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான போராட்டமேயாகும். இதைவிட எனக்கு வேறு போராட்டமில்லை. கதைப்பதை நிறுத்தி காரியத்தில் இறங்க வேண்டிய நேரம் இது. 2014ஆம் ஆண்டு நான் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும்.



**ரணில்விக்ரமசிங்க**
எதிர்க்கட்சித் தலைவர்

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் நான் எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்கவை ஆதரிப்பேன். ஆனால், ஐக்கிய தேசியக் கட்சியின் தற்போதைய தலைமை அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவில்லையானால், இதே தலைமைத்துவத்தின் கீழ் செயற்பட்டுக் கொண்டு அத் தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளராக நான் போட்டியிட முன்வருவேன்.



**சஜித் பிரேமதாஸ**
ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர்

2010 ஜனாதிபதி தேர்தலில் செய்ததைப் போன்று எதிரணிக் கட்சிகளின் பொது வேட்பாளராக வெளியாள் எவரையும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் கொண்டு வருவது என்ற கேள்விக்கே இடமில்லை. ஏனென்றால், அதே தவறை நாம் மீண்டும் செய்யமாட்டோம்.




**திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி**
ஐக்கியதேசியக் கட்சி
பொதுச் செயலாளர்

போரின் இறுதிக் கட்டத்தின் போது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர்களைக் காப்பாற்றத் தவறியமைக்காக ஐக்கிய நாடுகளின் கொழும்பு அலுவலகத்துக்கு எதிராக எதிர்வரும் மார்ச்மாதம் அமெரிக்கா தீர்மானமொன்றைக் கொண்டுவரத் திட்டமிடுகிறது.



**விமல் வீரவன்ச**
வீடமைப்பு அமைச்சர்

செய்திச்சரம்



# இந்திய - மாலைதீவ உறவுகளில் முறுகல்

மாலைதீவின் தலைநகர் மாலேயில் உள்ள விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்கு இந்தியாவின் ஜி.எம்.ஆர்.நிறுவனத்துக்குக் கொடுக்கப்பட்ட ஒப்பந்தத்தை மாலைதீவு அரசாங்கம் இரத்துச் செய்ததையடுத்து இருநாடுகளுக்கும் இடையேயான உறவுகளில் முறுகல் ஏற்பட்டிருக்கிறது.

ஆத்திரமடைந்த இந்திய அரசாங்கம் மாலைதீவுக்கான உதவிகளை முடக்கியிருக்கிறது. நெருக்குதலின் கீழ் மாலைதீவு அரசாங்கம் அதன் முடிவை மாற்றிக் கொள்ளுமா என்பதே தற்போது எழுந்துள்ள கேள்வி.

இந்திய நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட ஒப்பந்தத்தை ரத்துச்செய்த தீர்மானம் மீது சிங்கப்பூர் நீதிமன்றமொன்று இடைநிறுத்த உத்தரவொன்றை பிறப்பித்திருந்தது. அந்த உத்தரவை அலட்சியம் செய்த மாலைதீவு அரசாங்கம் விமான நிலையத்தை நிருவகிக்கும் பொறுப்பை கையேற்குமாறு அரசுக்குச் சொந்தமான மாலே விமானநிலைய கம்பனிக்கு உத்தரவிட்டது.

இந்திய நிறுவனத்துடனான ஒப்பந்தத்தைச் செய்து கொண்டதில் பணம் கைமாறியிருப்பதாக குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்படுகின்றன. மாலைதீவு ஜனாதிபதியாக முஹமட் நஷீட் பதவியில் இருந்தபோதே இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

மாலைதீவு நிலைவரங்கள் தொடர்பில் இந்தியா குழப்பமடைவதற்கு காரணம் ஏதுமில்லை என்று சில இந்தியப் பத்திரிகைகள் அபிப்பிராயம் தெரிவித்திருக்கின்றன. மாலைதீவின் முன்னைய அரசாங்கத்துக்கு அவதூறை ஏற்படுத்துவதற்காக அரசியல் நோக்கத்துடனேயே ஜி.எம்.ஆர். ஒப்பந்தம் இரத்துச்செய்யப்பட்டிருக்கிறது போலத்தெரிகிறது என்பதே அந்தப் பத்திரிகைகளின் நிலைப்பாடாக இருக்கிறது.



ஆளும் கூட்டணிக்குள் இருக்கும் மதவாத மற்றும் இந்திய விரோத கட்சிகளின் செல்வாக்கு அதிகரிப்புக்கு தனது பிரதிபலிப்பை வெளிக்காட்டும் முகமாகவே ஜனாதிபதி வாஹிட் ஒப்பந்தத்தை இரத்துச் செய்தார் என்று கூறப்படுகிறது.

சீனாவுடன் வர்த்தக உறவுகளை மேலும் வலுப்படுத்த வேண்டுமென்று வலியுறுத்தும் பிரிவினரும் மாலைதீவின் கூட்டணி அரசாங்கத்திற்குள் இருக்கிறார்கள்.

இந்த இருதரப்பினரதும் கூட்டுநெருக்குதலுக்கு ஜனாதிபதி வாஹிட் அடிபணிந்து விட்டார் என்று இந்திய அரசாங்க வட்டாரங்கள் கவலைப்படுகின்றன.

நஷீட்டின் சர்ச்சைக்குரிய இராஜினாமாவைத் தொடர்ந்து வாஹிட் அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவிக்க இந்தியா விரைந்தோடிச் சென்றது. அதனால், இந்திய அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருக்கும் ஆத்திரம் விளங்கிக்கொள்ளக் கூடியதே என்று இந்துஸ்தான் ரைம்ஸ் பத்திரிகை கூறியிருக்கிறது. மாலைதீவுக்கான இந்தியத்தூதரை ஜனாதிபதி வாஹிட்டின் பேச்சாளர் சிலவாரங்களுக்கு முன்னர் மாலைதீவின் எதிரி என்றும் துரோகி என்றும் வர்ணித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு தனியார் நிறுவனத்தின் நலன்களைக் காப்பாற்றுவதற்காக இந்தியா அயல் நாடொன்றுடனான உறவுகளை ஆபத்துக்குள்ளாக்க வேண்டுமா என்றும் இந்தியாவில் சில தரப்பினர் கேள்வியெழுப்பியிருக்கிறார்கள்.

மாலைதீவுபோன்ற சிறியதொரு அயல்நாடே இந்தியாவை இந்தளவுக்கு அவமதிப்பதைத் தடுக்க முடியாவிட்டால் புதுடில்லி எதிர்காலத்தில் பரந்தளவிலான இராஜதந்திரச் செல்வாக்கை உலக அரசங்கில் எவ்வாறு செலுத் தப் போகிறது என்ற கேள்வியும் இங்கே எழுகிறது.



# சர்வாதிகார ஆட்சியின் இன்னொரு கட்டத்தை நோக்கி எகிப்து...?

ஜனாதிபதி முஹமட் முர்சியின் முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்துக்கும் முற்போக்கு எண்ணம் கொண்டவர்கள் மற்றும் மதச்சார்பற்ற சக்திகளுக்கும் இடையே எகிப்து இன்று படுமோசமாகத் துருவமயப்பட்டிருக்கிறது. கடந்த இருவாரங்களாக ஏட்டிக்குப் போட்டியான வீதி ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுவருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

நீதித்துறை உட்பட அரசாங்கத்தின் சகல கிளைகள் மீதுமான முற்றுமுழுதான கட்டுப்பாட்டை தன்கையில் எடுத்த ஜனாதிபதி முர்சியின் செயல் ஹொஸ்னி முபாரக்கின் 30 வருட கால சர்வாதிகார ஆட்சியை முடிவுக்கு கொண்டுவந்த அரபுவசந்தப் புரட்சியின் ஆதரவாளர்களைக் கொதிப்படைய வைத்திருக்கிறது. சர்வாதிகார ஆட்சியின் இன்னொரு கட்டத்திற்குள் எகிப்து பிரவேசிப்பதாக அவர்கள் கவலையடைந்திருக்கிறார்கள். ஆட்சியிலிருந்து விரட்டப்பட்ட முபாரக்கினால் முன்னர் நியமிக்கப்பட்ட நீதிபதிகளைக் கொண்ட "நீதித்துறையின் இறக்கைகளை கத்தரிக்கும்" நோக்குடனேயே முர்சி அதிகாரங்கள் முழுவதையும் தனதாக்கிக் கொண்டார்.

எகிப்துக்கென இஸ்லாமியவாதிகளின் ஆதிக்கத்திலான அரசியல் நிருணய குழு வரைந்த புதிய அரசியலமைப்பின் கதியை நீதித்துறை தீர்மானிப்பதை முன்கூட்டியே தடுக்கும் நோக்குடன் முர்சி எடுத்த நடவடிக்கைக்கு எதிராக நீதித்துறையும் கிளம்பியிருக்கிறது. புதிய அரசியலமைப்பு வரைவை அவசர அவசரமாக நிறைவேற்றிவிடுவதில் முர்சியும் அவரது முஸ்லிம் சகோதரத்துவ இயக்கமும் அக்கறை கொண்டு செயற்படுவதற்கு எதிராகமூண்ட ஆர்ப்பாட்டங்கள் காரணமாக முர்சி கெய்ரோவில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் இருந்து வெளியேற வேண்டியேற்பட்டது. ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிட்டிருந்தார்கள். புதிய அரசியலமைப்புக்கு மக்களின் அங்கீகாரத்தைக் கோருவதற்கான சர்வஜனவாக்கெடுப்பு டிசம்பர் 15ஆம் திகதி நடைபெறவிருக்கிறது.

சர்வஜன வாக்கெடுப்பை மேற்பார்வை செய்யும் பணிகளை பகிஷ்கரிக்கப் போவதாக நாடுபூராகவும் உள்ள நீதிபதிகளைப் பிரதிநிதித்துவப் படுத்தும் நீதிபதிகள் கழகம் தீர்மானம் மேற்கொண்டிருந்தது. ஆனால், சில சிரேஷ்ட நீதிபதிகள் வாக்கெடுப்பை மேற்பார்வை செய்ய நீதித்துறைப் பிரதிநிதிகளை நியமிக்கப்போவதாக அறிவித்ததாக பிந்திய செய்திகள் தெரிவித்தன.

ஒரேயொரு கடை மாத்திரம் இருக்கின்ற ஒரு கிராமத்திற்கு ஒப்பானதாக நாட்டின் இன்றைய நிலைவரம். மக்களுக்கும் வேறு தெரிவில்லை. பொருட்கள் தரமற்றவையாகவும் விலை கூடியவையாகவும் இருந்தாலும் மக்கள் அந்தக்கடைக்குத்தான் போகவேண்டிய நிலை.

## விருந்தினர் பக்கம்

# வன்முறைச் சக்கரத்தை வெற்றி கொள்வது எவ்வாறு

கலாநிதி ஜெஹான் பெரேரா

இலங்கை இன்று இரு முக்கிய சவால்களை எதிர்நோக்குகிறது. முதலாவது இனநெருக்கடியைக் கையாளுவதென்ற பழைய சவால், போரின் முடிவுக்குப் பிறகு அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டிருந்த கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு இலங்கையில் வன்முறைகளுக்கான பிரதான காரணம் பதவியில் இருந்த அரசாங்கங்கள் இனநெருக்கடிக்கு தீர்வொன்றைக் காணத்தவறியமையேயாகும் என்று தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறது. அரசாங்கம் சிறுபான்மை இனக்கட்சிகளின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி சகல தரப்புகளையும் திருப்திப்படுத்தக் கூடிய அரசியல் தீர்வொன்றைக் காணவேண்டியது அவசியமாகும். ஆனால், அது நடைபெறுவதாக இல்லை. இனநெருக்கடிக்கு அரசியல் தீர்வொன்றை நோக்கிய செயன்முறைகளில் முன்னேற்றம் இல்லாததால், அரசாங்கத்துக்கும் தமிழ் சிறுபான்மை இனத்துக்கும் இடையேயான துருவமயம் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. போருக்கான அடிப்படைக் காரணிகளான தமிழர்களின் இழப்புகளும் இடர்பாடுகளும் பாரபட்சத்துக்குள்ளாக்கப்படுவதாக நீண்டகாலமாக அவர்கள் மனதில் குடிகொண்டு விட்ட உணர்வுகளும் உரிய முறையில் கவனிக்கப்பட்டு பரிகாரம் செய்யப்படவில்லை.

இரண்டாவது சவால், முற்றுமுழுதான அதிகாரத்தைக் கையில் வைத்துக் கொண்டு தங்கள் விருப்பப்படி ஆட்சி செய்கிறவர்களின் அதிகார துஷ்பிரயோகங்களைக் கட்டுப்படுத்துவதற்கான பொறிமுறைகளை (System of checks and balances) பாதுகாத்துப் பலப்படுத்துவது பற்றியதாகும். அரசாங்கத் தலைமைத்துவத்தின் கைகளில் அதிகாரங்கள் தொடர்ந்து குவிந்து கொண்டிருப்பதே கவனத்தை ஈர்க்கும் இன்றைய இலங்கை அரசியலின் பிரதான அம்சம். ஒரு ஸ்திரத்தன்மை இருப்பது போன்ற எண்ணத்தை இது கொடுக்கிறது. ஆனால், பாரதூரமான ஜன நாயகப் பிரச்சினை தோன்றுகிறது. இங்கு தேர்தல்களையல்ல, அதிகார துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்கு இருந்து வந்திருக்கக்கூடிய பொறிமுறைகளுக்கு ஏற்படுகிற ஆபத்தையே கூறுகின்றோம். எதிர்க்கட்சிகள் மிகவும் பலவீனமானதாக இருக்கின்றன. அவற்றின் மத்தியில் ஐக்கியமில்லை. அரசாங்கத்துக்கு சவாலொன்றைத் தோற்றுவிக்கக்கூடிய வல்லமை எதிரணிக்கு கிடையாது. இன்றைய தருணத்தில் எதிர்க்கட்சிகளும் சிவில் சமூகமும் ஓரத்தில் ஒதுக்கிவிடப்பட்ட பாத்திரங்களாகவே காணப்படுகின்றன. கூறுபட்டுப் போயிருக்கிற எதிரணியிடம் மக்களைக் கவரக்கூடிய ஒரு தலைமைத்துவமும் இல்லை.



அரசாங்கத்தின் தலைமைத்துவத்தின் கைகளில் அதிகாரங்கள் தொடர்ந்து குவிந்துகொண்டிருப்பதே இலங்கை அரசியலின் பிரதான அம்சம். ஒரு ஸ்திரத் தன்மை இருப்பது போன்ற எண்ணத்தை இது கொடுக்கும். ஆனால் பாரதூரமான ஜனநாயக பிரச்சினை தோன்றிக்கொண்டிருக்கின்றது

இன்றைய நாட்டு நிலைவரத்தை ஒரேயொரு கடை மாத்திரம் இருக்கிற ஒரு கிராமத்துக்கு ஒப்பானதாகப் பார்க்கலாம். மக்களுக்கு வேறு தெரிவில்லை. பொருட்கள் தரமற்றவையாகவும் அதேவேளை மிகவும் விலை கூடியவையாகவும் இருந்தாலும், மக்கள் அந்தக் கடைக்குத்தான் போக வேண்டிய நிலை. அரசாங்கத்துக்கு எதிராக மக்களை அணிதிரள விடாமல் வைத்திருக்கிற ஒரு பீதிக் கலாசாரத்தையும் காணக்கூடியதாக இருக்கிறது. போர்க்காலத்தில் காணப்பட்டதைப் போன்று ஆட்கள் காணாமல் போகும் சம்பவங்கள், ஆட்கடத்தல்கள், கொலைகள் இன்று பெருமளவில் இல்லாவிட்டாலும், ஓரளவுக்கு இடம்பெறவே செய்கின்றன. அதனால் சிவில் சமூகம் அஞ்சி நடுங்கிக் கொண்டேயிருக்கிறது.

மூன்றரை வருடங்களுக்கும் கூடுதலான காலத்துக்கு முன்னர் போர் முடிவுக்கு வந்த போதிலும் கூட, இலங்கை இன்னமும் ஸ்திரத்தன்மை வாய்ந்த ஒரு ஜனநாயக நாடாக வருவதற்கான பாதையில் செல்லவில்லை. வடக்கு, கிழக்கில் இராணுவத்தினரின் பெருமளவிலான பிரசன்னம் தொடருகின்றது. அத்துடன் போரோ அல்லது தீவிரவாத நடவடிக்கைகளோ இனிமேலும் அங்கு இல்லாதபோதிலும் சிவிலியன் வாழ்க்கையில் அநாவசியமான முறையில் இராணுவத்தின் ஊடுருவல் இருக்கிறது. இலங்கையில் தமிழ்ப்பகுதிகளைப் பொறுத்தவரை, தீவிரவாத வன்முறை என்பது 1970 களின் பிற்பகுதியில், சிறுபான்மை இனத்தவர்கள் குறிப்பாகத் தமிழர்கள் பெரும்பான்மை இனத்தவர்களான சிங்களவர்களின் அரசியல் பிரதிநிதிகளினால் பாரபட்சத்துக்குள்ளாக்கப்பட்டு, எந்தவித உரிமையும் அதிகாரமும் அற்றவர்களாக்கப்பட்டதாக உணர்ந்த பின்புலத்திலேயே மூள ஆரம்பித்தது. பாராளுமன்ற மற்றும் ஜனநாயக வழிமுறைகள் ஊடாக தங்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியாமல் போனதையடுத்தே தமிழர்கள் கெரில்லாப்போர்முறை உட்பட வன்முறை மார்க்கங்களில் இறங்க வேண்டியேற்பட்டது. இறுதியில் அது மரபு வழியிலான போராகவும் மாறியது. தமிழ்க் கிளர்ச்சியை முன்னெடுத்து வன்முறை மார்க்கங்களில் விசேடத்துவமான வழிமுறைகளைக் கொண்ட விடுதலைப்புலிகள் இராணுவ ரீதியாக நிர்மூலஞ்செய்யப்பட்ட போதிலும், அரசியல் தீர்வெதுவும் வந்து சேருவதாக இல்லை. அதன் ஒரு விளைவாக, இன்னொரு வன்முறைச் சக்கரத்துக்கு வழிவகுக்கக் கூடியதாக நாட்டில் இனங்களுக்கிடையிலான துருவமயமாதல் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

வன்முறைச் சம்பவங்கள் அதிகரிக்கின்ற மட்டமும் அதன் கொடூரத்தன்மையும் போரில் இருந்து எமது சமுதாயம் குணப்பட்டு மீளவில்லை என்பதன் வெளிப்பாடுகளாகவே அமைகின்றன. கொள்ளைகளும் களவுகளும் எப்போதுமே ஒரு பிரச்சினையாக இருந்து வந்திருக்கின்றன. ஆனால், தற்போது மிகவும் கவலைக்குரியதாக இருப்பது இந்தக் கொள்ளைகள், களவுகளுடன் சேர்த்து கொலைகளும் இடம்பெறுகின்ற போக்கேயாகும். எமது போர் மிகவும் குரூரத்தனமும் காட்டுமிராண்டித்தனமும் நிறைந்ததாக இருந்தது என்பதை நாம் மறக்கக்கூடாது. எந்தத் தயவு தாட்சணியமும் காட்டப்படாமல் முன்னெடுக்கப்பட்டது என்றும் எமது போர் வர்ணிக்கப்படுகிறது. இருதரப்பினருமே இதற்குப் பொறுப்பு. போர் முடிவுக்கு வருமுன்னதாக பல வருடங்களாக கைதிகள் எந்த நீதி விசாரணையுமின்றி மரணதண்டனைக்குள்ளாக்கப்பட்டார்கள். ஏற்கனவே போரின் முடிவுக்கு முன்னதாக நடைபெற்றவற்றின் ஒரு முழுமையான தீவிரப்படுத்தலே போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்றது. தற்போது வன்முறை மட்டம் கணிசமானளவுக்குக் குறைக்கப்பட்டுவிட்டது. ஆனால், அது போதுமானதல்ல.


2007ஆம் ஆண்டிலே ஒவ்வொரு நாளும் 5 பேர் காணாமல் போனார்கள். இன்று ஒவ்வொரு 5 நாட்களுக்கும் ஒருவர் காணாமல் போகிறார்கள். இது ஆபத்தானது. அரசாங்கத்துக்கு விரோதமானது என்று கருதப்படக்கூடிய எந்தவொரு காரியத்தையும் செய்வதற்கு மக்கள் இன்னமும் கூட அஞ்சுவதற்கு இது ஒரு காரணமாகிறது. அரசாங்கத்தை விமர்சனம் செய்து சீர்படுத்த முயற்சிக்கிறவர்களின் செயற்பாடுகளைத் தணிப்பதற்கு வெள்ளைவான் அச்சுறுத்தல் பயன்படுத்தப்படுகிறது. இந்த அச்சுறுத்தலைப் பொறுத்தவரை மெய்யான வெள்ளைவானும் இருக்கிறது. கற்பனாவாத வெள்ளைவானும் இருக்கிறது.

பாதுகாப்புத்துறைக்கும் பாதுகாப்புப் படைகளுக்கும் பெருந்தொகை நிதி ஒதுக்கப்பட்டிருப்பதற்கு மத்தியிலும் வன்முறைகள் மூளுவது முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும். அண்மையில் நான் பாகிஸ்தானுக்கு சென்றிருந்தேன். அங்கு இடம்பெற்ற நிகழ்வொன்றில் அந்நாட்டின் பிரதம நீதி யரசர் ஆற்றிய உரை இலங்கை நிலைவரங்களுக்கும் கூட பொருத்தமானதாக இருந்தது. "அரசினால் பயன்படுத்தப்படக் கூடியதாக இருக்கும் ஏவுகணைகளினதும் டாங்கிகளினதும் எண்ணிக்கையின் அடிப்படையில் நாட்டின் ஸ்திரத்தன்மையையும் பாதுகாப்பையும் வரையறை செய்த நாட்கள் போய்விட்டன. அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் உச்ச உயர்நிலை மேலாண்மையை போற்றிப் பேணுபவர்கள் என்ற வகையில், அரசியலமைப்பின் பாதுகாவலர்கள் என்ற வகையில் உச்ச நீதிமன்ற நீதிபதிகளுக்கு பாரிய பொறுப்பு இருக்கிறது" என்று அவர் கூறியதைக் காணக்கூடியதாக இருந்தது. ஐயகோ, இலங்கையில் உச்சநீதிமன்றமே முற்றுகைக்குள்ளாகியிருக்கிறதையல்லவா காண்கிறோம்!

போர்க்காலத்தில் ஏற்பட்ட காயங்களை போருக்குப் பின்னரான காலகட்டத்தில் குணப்படுத்த வேண்டிய தேவை இருக்கிறது. அரசாங்கம் அதுவிடயத்தில் முன்னுதாரணமாகச் செயற்பட வேண்டும். நாட்டில் மிகவும் வல்லமை பொருந்தியதாகவும்

செல்வாக்கு மிக்கதாகவும் அரசாங்கமே விளங்குகிறது. தார்மீக ஒழுங்கை மீள நிலைநிறுத்துவதற்கு விசேட முயற்சிகளை அரசாங்கமே செய்யவேண்டும். போர்க்காலத்தில் நடந்தவற்றை கெட்டகனவாக விட வேண்டும். அரசாங்கத் தலைவர்கள் உதார புருஷர்களாகச் செயற்பட வேண்டுமேயன்றி, எதிராளிகளை ஒழித்துக்கட்டிவிடக்கூடிய வல்லமை கொண்ட பேர்வழிகளாக தோன்றக் கூடாது. அதிகாரமுள்ளவர்கள் சில சந்தர்ப்பங்களில் தாங்கள் நினைத்த விதத்தில் செயற்படுவதற்கு குண்டர் பலத்தையும் வன்முறையையும் பயன்படுத்துகிறார்கள். தாங்கள் விரும்பிய போது வன்முறைகளைப் பயன்படுத்துகிற அதே அரசாங்கத் தலைவர்களின் கீழ் பொலிஸார் நேர்மையாகச் செயற்பட முடியாதிருக்கிறது. வன்முறைச் சக்கரத்திலிருந்து எம்மை மீட்டெடுப்பதில் ஊடகங்களுக்கும் பெரும் பொறுப்பு இருக்கிறது.

பெரும்பாலான ஊடகங்கள் தற்போதைய அரசாங்கத்தின் கொள்கை வழியிலேயே செயற்படுகின்றன. போரை முடிவுக்குக் கொண்டுவந்து நாட்டில் அமைதியையும் வழமை நிலையையும் ஏற்படுத்தியது இந்த அரசாங்கமே என்பதால் அவ்வாறு ஆதரிப்பதாக நியாயம் கூறப்படுகிறது. மக்களுக்கு மனக்குறைகளே இல்லை என்று நிராகரிப்பதன் மூலமாக அரசாங்கம் மக்களின் பிரச்சினைகளை அலட்சியம் செய்கிறது. இதுவிடயத்தில் பெரும்பாலான ஊடகங்கள் அரசாங்கத்துக்குத் துணை போகின்றன. எதிர்ப்பவர்களின் வாயை அடைக்கக்கூடிய ஆற்றல் அரசாங்கத்துக்கு இருப்பதாக அஞ்சி ஊடகங்களும் நடுங்கிக் கொண்டிருக்கின்றன. இனரீதியாக துருவமயப்பட்ட அரசியல் தரப்புகளைப் போன்றே ஊடகங்களும் இனநெருக்கடிக்குள் அகப்பட்டிருக்கின்றன. ஊடகங்களுக்கும் சொந்த அதிகார நலன்கள் இருக்கின்றன. ஊடக வர்த்தகத்தையும் தங்கள் குடும்பங்களையும் உயிர்களையும் காப்பாற்றவேண்டியிருக்கிறது. ஊடகவியலாளர்களோ, பிரசுரகர்த்தாக்களோ, பத்திரிகை ஆசிரியர்களோ சமுதாயத்தில் இருந்து விடுபட்டவர்கள் அல்லவே! சமுதாயத்தின் அங்கமே அவர்கள். சமுதாயத்தின் பிளவுகளினதும் தப்பபிப்பிராயங்களினதும் அங்கமாக அவர்கள் இருக்கிறார்கள். இந்த இருண்ட நாட்களில், தலைவர்கள் மக்களுக்கு தார்மீகத் தலைமைத்துவத்தை வழங்கி, அவர்களுக்குப் போதனைகளை வழங்கவேண்டும். எமக்குச் சொந்தமானவர்களைக் கவனிப்பதைப் போன்றே மற்றையவர்களையும் நடத்த வேண்டும்!



# இலங்கைத் தமிழ் அர அரசியல் தீர்விற்கான




உள்நாட்டு அரசியல்

தமிழ் பேசும் மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாஷைகளை பூர்த்திசெய்யக்கூடிய அரசியல் தீர்வொன்றைக் காணும் நோக்கில் இலங்கை அரசாங்கம் தமிழ்த்தலைவர்களுடன் அல்லது பிரச்சினை சம்பந்தப் பட்ட ஏனையோருடன் பேச்சுவார்த்தைகளை நடத்த மறுத்துவருவது இனங்களுக்கிடையேயான பதற்ற நிலையை அதிகரிப்பதோடு, நிலைபேறான தீர்வொன் றைக் காண்பதற்கான சாத்தியப்பாடுகளையும் மோச மாகப் பாதித்து வருகின்றது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் காணப்பட்ட இணக்கப்பாடுகளை மதிக் கத் தவறியிருக்கிறது. அதுமாத்திரமல்ல உலகத்தலைவர் களுக்கு வழங்கிய வாக்குறுதிகளையும் அலட்சியம் செய்துவரும் அரசாங்கம், வடக்கு, கிழக்கு மாகாணங் களின் தமிழ்பேசும் பிரதேசங்களுக்கு குறைந்தபட்ச அதி காரப்பகிர்வை வழங்கும் அரசியல் அமைப்பு ஏற்பாடு களையும் கூட நடைமுறைப்படுத்தத் தவறிவிட்டது. தமிழ்ப் பிரதேசங்களில் இடம்பெற்று வருகின்ற இராணுவ மயப்படுத்தல் செயற்பாடுகள் அங்குள்ள மக்களுக்கு பெரும் சீற்றத்தை ஏற்படுத்தியிருப்பதுடன், மிதவாத தமிழ்த் தலைவர்கள் மீதான மக்களின் நெருக்குதல் களையும் அதிகரித்துவருகின்றன.

தமிழ் அரசியல் கட்சிகள் முஸ்லிம்களுடனும் மலைய கத் தமிழர்களுடனும் சிங்கள மக்களுடனும் நேரடியான தொடர்புகளை வளர்க்க வேண்டும். அதேவேளை பொறு மையையும் மிதவாதப் போக்கையும் கடைப்பிடிக்க வேண்டும். இலங்கை நெருக்கடியில் அக்கறை காட்டு கின்ற சர்வதேச சமூகத்தின் செயற்பாட்டாளர்கள் வடக்கு, கிழக்கின் தமிழ் மக்களினால் தெரிவு செய்யப்பட்ட சட்டபூர்வமான பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் என்று அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும். வடமாகாண சபைக்கு தேர்தலை நடத்தி அங்கு சிவில் நிர்வாகத்தை பூரணமாக மீட்டெடுப்பதற்கு அரசாங்கத்திற்கு சர்வதேச சமூகம் அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும்.

விடுதலைப்புலிகள் இராணுவ ரீதியாக தோற்கடிக்கப் பட்டு உள்நாட்டுப் போர் முடிவிற்கு கொண்டுவரப் பட்டதையடுத்து தமிழ் மக்கள் மத்தியில் அரசியல் விவாதங்கள் கூடுதலான அளவிற்கு இடம்பெறுவதற்கும்

# சியலும் தேடலும்

மிதவாத அணுகுமுறையில் அக்கறை காட்டுவதற்கும் வழி பிறக்கும் என்றும் யுத்தத்திற்கு ஆதரவ ளிக்கும் வகையில் அரசாங்கம் தென்னிலங்கையில் வளர்த்தெடுத்த தீவிர சிங்களத் தேசியவாதப் போக்கு நாளடைவில் கைவிடப் பட்டு வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அர்த்தமுள்ள வகையில் அதிகாரப்பகிர்வைச் செய்வதற்கான ஊக்கம் பிறக்கும் என்றும் பலரும் எதிர்பார்த்தனர். தமிழ் மக்கள் மத்தியில் ஜனநாயக மற்றும் மிதவாதக் குரல்கள் அதி கரித்த போதிலும் அரசாங்கம் அதையொத்த பிரதிபலிப்பை வெளிக்காட்டத் தவறிவிட்டது.


இத்தகைய செயற்பாடுகளில் இறங்குவதற்குப் பதிலாக அரசாங்கம் இனப்பிரச்சினை என்ற ஒன்று இல்லையென்று

## யார் யார் என்ன செய்ய வேண்டும்?

International
Crisis Group
WORKING TO PREVENT
CONFLICT WORLDWIDE

மறுப்புத் தெரிவித்து வருகிறது. இந்தியாவுடனும் அமெ ரிக்காவுடனும் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்துடனும் அரசாங்கத் தலைவர்கள் பேச்சுவார்த்தைகளை நடத்திய போது தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர் வொன்றை காண்பதற்காக உருப்படியான அதிகாரப் பகிர்வைச் செய்வதில் அக்கறை காட்டுவதாக வாக்குறுதி களை வழங்கியபோதிலும், அவர்கள் சிங்கள மக்களுடன் பேசும் போது தமிழ் மக்கள் பிரச்சினை எதுவும் இருப்பதாக காட்டிக்கொள்வதில்லை.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை மீண்டும் மீண்டும் மதிக்கத் தவறிய அரசாங்கம் அவர்களுடனான பேச்சுவார்த்தை களை 2012 ஜனவரியில் முறித்துக் கொண்டது. தங்களுக்கு இருக்கும் பொறுப்பை நன்றாகக் குறைப்பதற்கும் காலத்தை இழுத்தடிப்பதற்குமென்றே வகுத்துக் கொண்ட செயன்முறையான பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் இணையுமாறு அரசாங்கத் தலைவர்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரை வலியுறுத்தி வருகின்றனர். போர் முடிவிற்கு வந்து மூன்றரை வருடத்திற்கும் கூடுதலான



காலம் கடந்துவிட்ட போதிலும் வட மாகாண சபைக்கான தேர்தலை ஜனாதிபதி ராஜபக்ஷ தொடர்ந்து இழுத்தடித்துக் கொண்டு வருகிறார். வடக்கில் தேர்தலை நடத்தினால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெறும் என்பது நிச்சயமானதாகும். தன்னால் வழங்கப்பட்ட முன்னைய வாக்குறுதிகளை மீறும் வகையில் ஜனாதிபதி அரசியலமைப்பிற்கான 13ஆவது திருத்தத்தில் குறித்துரைக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களைக் கூட வழங்குவதற்கு ஜனாதிபதி மறுத்துவருகிறார். இது போதாதென்று 13ஆவது திருத்தத்தை இல்லாதொழித்து அதைவிடக் குறைவான அதிகாரங்களைக் கொண்ட ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று ஜனாதிபதியும் சிரேஷ்ட அமைச்சர்களும் பேசத் தொடங்கியிருக்கிறார்கள்.

அதிகாரப்பகிர்வு குறித்த நீண்ட கால கோரிக்கைகளை நிறைவேற்ற மறுத்துவருகின்ற அதேவேளையில், அரசாங்கம் வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல் அதிகாரத்திற்கும் அடையாளத்திற்கும் அடிமேல் அடி அடிக்கும் கைங்கரியங்களை தீவிரமாக முன்னெடுத்துக்கொண்டுவருவதை காணக்கூடியதாக இருக்கிறது. வடக்கு, கிழக்கு மாகாணங்கள், தமிழ் பேசும் மக்கள் தொடர்ச்சியாக வாழ்ந்துவந்த பாரம்பரிய பிரதேசங்கள் என்பதை அடிப்படையாகக் கொண்டதே அரசியல் சுயாட்சி குறித்த கோரிக்கை என்று தமிழ்த் தலைவர்களும் தேசியவாதச் சிந்தனை கொண்ட அறிவுஜீவிகளும் கூறிவந்த போதிலும், வடமாகாணத்திற்கு அத்தகைய எந்தவிதமான பலம்வாய்ந்த தமிழர் பண்பும் கிடையாதென்று ஜனாதிபதியின் சகோதரரும் பலம் வாய்ந்த பாதுகாப்புச் செயலாளருமான கோதாபய ராஜபக்ஷ வெளிப்படையாகவே மறுத்துவருகின்றார். அரசாங்கத்தின் புள்ளிவிபரங்களும் அவரின் நிலைப்பாட்டிற்குச் சார்பான முறையில் முன்வைக்கப்படுகின்றன. இந்தக் கோட்பாட்டை தீவிரமான முறையில் நிறுவனமயப்படுத்தும்

# அதிகார பரவல் நான்கு அடுக்கிலா?



என்.சத்திய மூர்த்தி

எதிர்வரும் 2013ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் முன்வைத்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலான அரசின் பழக்கத்தில் இருந்து மாறவில்லை. கடந்த எண்பதுகளில் இருந்து பட்ஜெட்டில் செலவினங்களும் புதிய வரிகளும் குறிப்பிடப்படுகின்றனவோ இல்லையோ இனப்பிரச்சினை குறித்தும் பின்னர் இனப்போர் குறித்தும் அவற்றிற்கான தீர்வுகள் குறித்தும் நிச்சயம் அரசின் கவலைகளும் கருத்துகளும் இடம்பெற்று வந்துள்ளன. இந்த முறையும் நிதி அமைச்சர் பதவியில் இருந்து கொண்டு ஜனாதிபதி ராஜபக்ஷவின் பட்ஜெட் உரையும் இதற்கு விதி விலக்கல்ல.

இனப்பிரச்சினை குறித்து பட்ஜெட்டில் பெரிதாக ஒரு கருத்தும் தெரிவிக்கப்படவில்லை. இனப்போர் முடிந்து மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக காலம் கடந்த பின்னர் இது எதிர்பார்க்கக்கூடிய விடயமே. என்றாலும் இனப் பிரச்சினைக்கு அரசியல் முகம் கொடுத்து வந்துள்ள அதிகாரப் பரவல் முறை குறித்து பட்ஜெட் உரையில் ஜனாதிபதி தற்போதைய அரசின் தற்போதைய மனோநிலையை கோடிட்டுக்காட்டி உள்ளார். இதுவும் ஆண்டாண்டு காலமாக மாறிவந்துள்ள விடயமே. ஒன்றில் அரசு தனது எண்ணங்களை திடப்படுத்திக் கொண்டுள்ளது என்று இதனைக் கொள்ளலாம். அல்லது தனது நிலையில் இருந்து மீண்டும் ஒரு முறை வழுக்கியிருக்கிறது என்றும் எண்ணலாம். இதுவும் ஆண்டுக்கு ஆண்டு ஆட்சிக்கு ஆட்சி தலைவருக்குத் தலைவர் மாறிவந்துள்ளது.

இந்த முறை அதிகாரப் பரவல் குறித்து பேசிய ஜனாதிபதி ராஜபக்ஷ, மூன்று முக்கிய விடயங்களை குறிப்பிட்டுப் பேசினார். அல்லது கோடிட்டுக் காட்டினார். அவர் கோடிட்டுக் காட்டிய விடயம் தற்போதைய மாகாணங்களை மையப்படுத்திய அதிகாரப் பரவல் முறை ஒழிக்கப்பட மாட்டாது என்பது அவர் குறிப்பிட்டு பேசிய விடயம் தற்போதைய முறையில் மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என்பது. தற்போதைய அதிகாரப் பரவல் முறையினால் அவசியமில்லாத அரசு கட்டமைப்புகளும் அவற்றின் பெயரில் அனாவசிய செலவுகளும் மேற்கொள்ளப் படுகின்றன என்பது இது குறித்து ஜனாதிபதி சுட்டிக்காட்டிய மற்றொரு விடயம்.

மாகாண சபை விவகாரம் குறித்து ஜனாதிபதி ராஜபக்ஷ தெளிவாக எதையும் கூறிவிடவில்லை என்று விமர்சனம் செய்யலாம். ஆனால், அந்த முறை ஒழிக்கப்படும் என்றும் அவர் கூறவில்லை. இன்றைய அரசியல் சூழ்நிலையில் இதுவே தமிழ்

சமுதாயத்திற்கு முதல் வெற்றி என்றே எடுத்துக் கொள்ளவேண்டும். ஆனால் உண்மை என்னவோ ஜனாதிபதி தொடர்ந்து தற்போதைய மாகாண சபைத் திட்டங்களில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்று கூறினாரே தவிர அந்த மாகாண சபைகளையே இல்லாமல் செய்ய வேண்டும் என்று கூறி விடவில்லை.

ஜனாதிபதியின் பட்ஜெட் உரையின் சில நாட்களுக்குப் பின்னர் பத்திரிகையாளர்களிடம் பேசிய உள்துறை அமைச்சர் ஜோன் செனவிரத்ன இது குறித்து சிறிது தெளிவாகவே கருத்துக் கூறியுள்ளார். அவற்றின்படி மாகாண சபைகளுக்கு அதிகாரம் அளிக்கும் பதின்மூன்றாவது சட்ட திருத்தத்தை செயல் இழக்கச் செய்யும் எண்ணம் எதுவும் அரசிற்கு இல்லை என்று தெளிவுபடுத்தி உள்ளார். மாறாக தற்போதைய அதிகாரப் பரவல் முறை மக்களுக்கு பயனளிக்கும்வகையில்திருத்தியமைக்கப்படும் என்று அவர் தெளிவுபடுத்தி உள்ளார்.

## பரவலாக்கப்படும் அதிகாரங்கள்

இதன் பொருள் என்ன? தற்போதைய அதிகாரப்பரவல் முறை எப்படி மக்களுக்கு பயன் அளிக்கும் விதத்தில் செயல்பட முடியும்? அப்படி என்றால் பதின்மூன்றாவது திருத்தம் மக்களுக்கு பயன்படவில்லையா? பதின்மூன்றாவது திருத்தத்தின் மூலம் பயன் அடைபவர்கள் என்று தமிழர்களும் அவர்களது மாகாணங்களுமே கருதப்பட்டனர். ஆனால் அந்த சட்ட திருத்தத்திற்கு அடிப்படையான இந்திய-இலங்கை ஒப்பந்தம் கையெழுத்து இடப்பட்டதோடு, விடுதலைப் புலிகள் இயக்கமும் மிதவாத தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணியும் அதனை நிராகரித்து விட்டன. அதே நிலைமையையே இனப்போர் முடிந்த காலத்திற்குப் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் எடுத்து வந்துள்ளது.

> சிங்கள, தமிழ் வேதாளங்கள் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறப் போகின்றனவா? அல்லது தரையிலிருந்து பிரச்சினைகளைப் பேசித் தீர்க்கப் போகின்றனவா?

எதிரணியில் சிங்கள மாகாணங்களில் பதின்மூன்றாவது திருத்தத்தின் அடிப்படையிலான மாகாணங்களுக்கான அதிகாரங்கள் குறித்து யாருமே கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அவர்களைப் பொறுத்தவரையில் மாகாண சபைகள் மொத்தமாக சில நூறு இரண்டாம் நிலை அரசியல் தலைவர்களையும் அவற்றிற்கான அமைச்சர்களையும் பதவி கொடுக்காமலே கொடுத்ததாகக் காட்டி கட்சி அரசியலில் அமைதியை நிலைநாட்ட மட்டுமே உதவி உள்ளது.

தேசிய அளவில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இரு வேறு கட்சிகள் ஆட்சியில் பங்கு வைத்திருந்த போதும் அவர்களது மாகாண கிளைகளின் தலைவர்களோ முதலமைச்சர் உட்பட்ட அமைச்சர்களோ தங்களது திரிசங்கு நிலை குறித்து பேசியதே இல்லை. அது போன்ற கருத்துகளை கடந்த முறை கிழக்கு மாகாண சபையில் பிள்ளையான் முதலமைச்சராக இருந்த போது மட்டுமே அவ்வப்போது எழுப்பினார். என்றாலும் அதனால் எந்தப் பயனும் ஏற்படவில்லை.

சந்திரிகா- ரணில் இருதுருவ ஆட்சி அமுலில் இருந்த காலத்திலும் சரி அல்லது ஒரே கட்சி தலைமையிலான கூட்டணி ஆட்சி தேசிய அளவில் இருந்த போதும் சம கட்சித் தாவல்களும் ஆட்சி மாற்றங்களும் மத்திய அரசைச் சுற்றியே வந்த வண்ணம் இருந்தன. மாகாண அபிவிருத்தி திட்டங்கள் என்று மட்டுமல்ல கட்சி மாற்றம், ஆட்சி மாற்றம் என்பவற்றில் மாகாணங்களை அரசியல் கட்சித் தலைமைகள் கண்டு கொள்ளவில்லை வகையில் அரசாங்கத்தில் இராணுவ மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் தமிழ்ப்பகுதிகளில் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன.

வடமாகாணத்தில் இடம்பெறுகின்ற இராணுவ ஆக்கிரமிப்பும் பாரபட்சமான பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகளும் தமிழர்கள் வடக்கு, கிழக்கை தங்களது பாரம்பரிய தாயகமாக உரிமை கோருவதை இல்லாமல் செய்யும் நோக்கில் வடிவமைக்கப் பட்டவையாகவே இருக்கின்றன. விடுதலைப் புலிகளின் போராட்டம் காரணமாகவே இலங்கை அதன் அரசியல் நிகழ்ச்சி நிரலில் அதிகாரப் பகிர்விற்கான தேவையை சேர்த்து வைத்திருந்தது என்ற தமிழ்மக்களின் நம்பிக்கையைப் பலப்படுத்துபவையாகவே அரசாங்கத்தின் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன. நீதியான பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வைக் காண்பதற்கு அரசாங்கம் மறுத்துவருவதால் மேலும் மோதல் தன்மை வாய்ந்த வார்த்தைப் பிரயோகத்தையும் தந்திரோபாயங்களையும் மேற்கொள்ளுமாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் மீது தமிழ் மக்கள் அழுத்தங்களைப் பிரயோகிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். தமிழினத்திற்கு சுயநிர்ணய உரிமை வேண்டுமென்ற கோரிக்கை அதிகாரிப்பும் பிரிவினைவாத இலக்கு இன்னும் கைவிடப்படவில்லை என்ற தொனியில் தெரிவிக்கப்படுகின்ற கருத்துகளும் சிங்களத் தலைவர்கள் மத்தியில் இருந்து கடுமையான பிரதிபலிப்புகள் வருவதற்கு வழிவகுக்கின்றன.

அண்மைய எதிர்காலத்தில் பேச்சுவார்த்தைகளில் பாரிய முன்னேற்றம் எதுவும் ஏற்படக்கூடிய வாய்ப்பில்லாத சூழ்நிலையில் நிலைவரம் சிக்கலானதாகவே இருக்கப்போகிறது. 2013 மார்ச்சில் ஜெனீவாவில் இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்திற்கு முன்னதாக வடக்கில் இராணுவத்தின் எண்ணிக்கையையும் செல்வாக்கையும் கணிசமாகக் குறைக்க வேண்டும் என்றும் நம்பகமான

முறையில் வடமாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்றும் இந்தியா, அமெரிக்கா உட்பட்ட சர்வதேச சமூகம் ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு நெருக்குதலைக் கொடுக்க வேண்டும்.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் தாங்கள் இணைந்து கொள்வதற்கு முன்னதாக அரசாங்கம் நிறைவேற்ற வேண்டுமென்று தமிழ்த்தேசியக்கூட்டமைப்புத் தலைவர்கள் முன்வைத்து வரும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளுமாறும் 13ஆவது திருத்தத்தை அர்த்தமுள்ள வகையில் நடைமுறைப்படுத்தும் வகையில் ஆரம்பிக்குமாறு ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்கப்படல் வேண்டும். பயனுறுதியுடையதும் நீடித்து நிலைக்கக் கூடியதுமான அதிகாரப் பகிர்வுக்கு தற்போதைய ஒற்றையாட்சி வரையறைக்கு அப்பால் செல்ல வேண்டிய தேவையிருக்கிறது. ஆனால் திறமையாகக் கையாளப்பட்டால் தற்போதைய உள்நாட்டு மற்றும் சர்வதேச சூழ்நிலையின் கீழ் கணிசமான அதிகாரப்பரவலாக்கலுக்கு அரசாங்கத்தை இணங்கச் செய்யக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன.

அரசிடமிருந்து நியாயமான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்புகளை அதிகரிக்கும் வகையிலும் அதிகாரப்பகிர்வை அவசியமாக்கும் வகையில் தமிழ் மக்களுக்கு இருக்கக்கூடிய மனக்குறைகளை சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களுக்கு அவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தெளிவாக எடுத்துரைப்பது அவசியமாகும். குறிப்பாக சுயாட்சி குறித்த கோரிக்கையைப் பொறுத்தவரை பிரிவினைவாத அச்சுறுத்தல் இனிமேலும் இல்லையென்று சிங்கள மக்களில் கணிசமான பிரிவினர் திருப்திப்படக் கூடிய முறையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரின் அரசியல் செயற்பாடுகள் அமைதல் வேண்டும். விடுதலைப்புலிகள் செய்த கொலைகள் மற்றும் 1990ஆம் ஆண்டில் வடக்கில் இருந்து முஸ்லிம்களை வெளியேற்றிய செயல் காரணமாக ஏற்பட்ட விரிசல்களை நீக்கும் வகையில் முஸ்லிம்களுடனான உறவுகளை சீர்செய்வதற்கு தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அனைவரும் முன்வரவேண்டும். அதிகாரப் பகிர்வு சம்பந்தமான பேச்சுவார்த்தைகள் விஸ்தரிக்கப்படக்கூடிய வாய்ப்புகள் ஏற்படும்போது முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு முக்கிய பாத்திரம் வழங்கப்படல் வேண்டும் என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்த வேண்டும்.

இறுதியாக, தமிழ் மக்களின் உரிமைகளுக்கும் அதிகாரப்பகிர்விற்குமான போராட்டத்தில் தமிழ்த் தலைமைத்துவம் கடைப்பிடிக்க வேண்டிய முக்கியமான தந்திரோபாயம் இருக்கிறது. அதாவது ராஜபக்ஷ அரசாங்கத்தின் ஊழல் மற்றும் அதிகாரத் துஷ்பிரயோகத்திற்கு எதிராக சிங்கள மக்கள் மத்தியில் வளர்ந்து வருகின்ற அமைதியின்மையை தங்களது போராட்டத்துடன் இணைத்துக்கொள்ளும் வகையிலான நடைமுறை மற்றும் பிரசார வழிவகைகளை தமிழ்த் தலைமைத்துவம் கண்டறிதல் வேண்டும். நீதித்துறையும் பொலிஸும் அரசியல் மயப்படுத்தப்படாதிருப்பதை உறுதிசெய்வதற்கும் ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சியை மீட்டெடுப்பதற்காகவும் முன்னெடுக்கப்படக்கூடிய பரந்த தேசிய ரீதியிலான போராட்டம் கணிசமான வெற்றியை ஈட்டிக்கொள்ளும்போது மாத்திரமே தமிழர்களின் உரிமைகள்

**வட மாகாணத்தில் இடம்பெறுகின்ற இராணுவ ஆக்கிரமிப்பும் பாரபட்சமான பொருளாதார செயற்பாடுகளும் தமிழர்கள் வடக்கு, கிழக்கை தங்களது பாரம்பரிய தாயகமாக உரிமை கோருவதை இல்லாமல் செய்யும் நோக்கில் வடிவமைக்கப்பட்டவையாகவே இருக்கின்றன**

என்பதே உண்மை. அவ்வாறு ஏதாவது கட்சித் தாவல்கள் அரங்கேறினாலும் அதனால் மாகாண அரசியலில் எந்தவித பெரிய மாற்றங்களும் ஏற்பட்டுவிடவில்லை.

இந்தப் பின்னணியில் மாகாண சபை ஆட்சியின் பயன்பாடு மக்களைச் சென்று அடைந்ததா? என்ற கேள்வி எழுந்தால் இல்லை என்றே பதில் வரும். அப்படியானால் மாகாண சபைகள் வெத்து வேட்டுகளா என்ற கேள்வியும் எழுகிறது. இதற்கு நேரடியான பதில் இல்லை. காரணம் மாகாண சபைகளுக்குத் தேவையான அதிகாரங்கள் கொடுக்கப்படவில்லை என்ற குறைபாடு தமிழ்ச் சமுதாயத்திற்கும் அரசியல் கட்சிகளுக்கும் மட்டுமே உள்ளன. சிங்களக் கட்சிகளும் மக்களும் மாகாண அரசுகளை ஒரு பொருட்டாகவே கருதவில்லை. அந்த விதத்தில் கடந்த 25 வருட மாகாண சபை ஆட்சி முறை மக்களைச் சென்றடையவில்லை என்றே கூற வேண்டும். அவற்றினால் ஏற்படும் பயன்கள் குறித்துப் பேசவே தேவையில்லை.

## காணாமல் போன அதிகார அமைப்புகள்

ஜனாதிபதியின் பட்ஜெட் உரைக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, தற்போதைய அதிகாரப் பரவல் முறைக்கு மாற்றாக அரசு பல்வேறு திட்டங்களை பரிசீலிக்கும் என்று கூறியுள்ளார். இதில் தற்போது மாகாண சபைகளோடு ஒட்டி நிலவில் உள்ள பிராந்திய சபைகளுக்கும் அதிகாரங்கள் வழங்கும் முறையும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

பதின்மூன்றாம் திருத்தத்தின்படி அதிகாரங்கள் மத்தியமாகாண அரசுகளுக்கு இடையே பிரித்து அளிக்கப்பட்டு உள்ளன. தற்போதைய அமைப்பில் மாற்றங்கள் கொண்டு வர வேண்டும் என்று தமிழ் மற்றும் சிங்கள அரசியல் கட்சிகள் கூறிவருகின்றன. கூட்டமைப்பு போன்ற தமிழ்க் கட்சிகளைப் பொறுத்தவரையில்

மத்தியில் இருந்து மாகாணங்களுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை துவக்க நாள் முதலே இருந்து வருகிறது. தமிழ்க் கட்சிகளைப் பொறுத்தவரை யில் தமிழ் மாகாணங்களுக்கும் தமிழ் மக்களுக்கும் பொருந்தும் எந்த அரசு அமைப்பும் சிங்கள மாகாணங்களா லும் மக்களாலும் ஏற்றுக் கொள்ளப் பட வேண்டும்.

இதற்கு எதிராக தற்போதைய அமைப்பின் கீழ் மாகாணங்களுக்கு அதீத அதிகாரங்கள் கொடுக்கப்பட் டுள்ளன என்பது சிங்களப் பேரின வாத கட்சிகளின் வாதம். அவர் களைப் பொறுத்தவரையில் அதிகாரப் பரவல் முறை தனி நாடு கோரும் தமிழர்களுக்கு ஏதுவாக அமையும். மாகாணங்களுக்கு அதிகாரம் பகிர்ந்து அளிக்கும் முறையினால் நாடு தழுவிய முறையில் அனைத்து மக்களுக்கும் பயன் உண்டாகும் என்றோ அரசியல் ரீதியாக தங்களது நிலை ஏதோ ஒரு வகையில் ஸ்திரப்படும் என்றோ எண்ணிப் பார்க்க மறுக்கிறார்கள்.

அதேசமயம், இரு சாராருமே மாவட்டம் மற்றும் கிராம அளவில் பிரதேச சபை மற்றும் கிராம சபை போன்ற அமைப்புகள் இருக்க வேண் டும் என்பதிலும் தெளிவாக இருக்கி றார்கள். அதிலும் குறிப்பாக ஆளும் கூட்டணி அமைச்சர் திஸ்ஸ விதாரண தலைமையிலான அனைத்துக் கட்சி குழுவிற்கு அளித்த கோரிக்கை மனு வில் மாவட்டம் சார்ந்த அதிகாரப் பரவல் முறையே நாட்டிற்கு ஏற்றது என்ற கருத்தை முன் வைத்திருந்தது.

இலங்கை அரசு ஆகட்டும், சிங்கள பேரினவாதக் கட்சிகள் ஆகட்டும் மாகாண ரீதியிலான அதிகாரப் பரவல்முறை வெற்றி பெறவில்லை என்ற வாதத்தை தொடர்ந்து முன் வைத்துள்ளனர். உண்மை. இதற்கு காரணம் அந்த அமைப்பில் இல்லை. மாறாக அந்த அமைப்பை சரியாக செயல்படுத்தாததே காரணம். அதே சமயம் மாகாண சபைகள் இருந்தும் அவற்றுக்கான அரசியல் சட்ட ரீதி யான அதிகாரங்கள் இருந்தும் அவ மற்றும் சுதந்திரம் குறித்த போராட்டம் வெற்றிபெறுவது சாத்தியமாகும். "தேசிய பிரச்சினையின்" இருவேறுபட்ட வடிவங்களுக்கு தீர்வுகாணும் முயற்சிகளை ஒன்றி ணைப்பதே தமிழர் உரிமைகளுக்கான போராட்டத்தின் முக்கிய பகுதியாதல் வேண்டும்.

## இலங்கை அரசுக்கான பரிந்துரைகள்

1. தமிழ்த்தேசியக் கூட்டமைப்புட னான இருதரப்பு பேச்சுவார்த்தை களை உடனடியாக ஆரம்பிக்க வேண் டும். இந்த பேச்சுவார்த்தைகள் பாரா ளுமன்றத் தெரிவுக்குழுவின் கவனத் திற்கு சமர்ப்பிப்பதற்கான ஒரு அடிப் படை கருத்தொற்றுமையை உருவாக் கும் நோக்கத்தில் அமைதல் வேண் டும்.

2. பாராளுமன்றத் தெரிவுக்குழு வென்பது ஒரு காலவரையறையுடன் கூடிய செயல்முறை என்பதையும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் ஒரு கலந்துரையாடலை வளர்த்தெடுப்ப தற்கான விதிமுறையான நிகழ்ச்சி நிரலைக் கொண்டதென்பதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். தெரிவுக் குழுவில் இடம்பெறும் கருத்தாடல் கள் வடமாகாண சபைத்தேர்தலை தாமதப்படுத்தக்கூடாதென்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த கருத்தாடல்களின் விளைவுகள் மேலும் கூடுதலான அதிகாரப் பகிர் விற்கும் ஏனைய அதிகாரப்பகிர்வு வடிவங்களுக்கும் வடிவமைப்பதாக இருக்க வேண்டும். 2013 ஆரம்பத் தில் வடமாகாண சபைக்குச் சுதந்திர மும் நீதியுமான தேர்தலை நடத்த வேண்டும்.

3. சகல மாகாணங்களுக்குமான அதிகாரங்களை கூடுதல் பட்சமான தாக்கும் வகையில் 13ஆவது திருத் தத்தை நடைமுறைப்படுத்த வேண் டும். இதை வடக்கு, கிழக்கு மாகாண ங்களில் மாகாண சபைகளின் ஆதர வைப்பெற்ற சிவிலியன்களை ஆளு நர்களாக நியமிப்பதன் மூலம் ஆரம் பிக்க வேண்டும். ஆளுநரின் அதிகா ரங்களைக் குறைப்பதற்கான சட்ட வாக்கங்களை கொண்டுவர வேண் டும். வடமாகாண சபைக்கு போதிய நிதி மூலங்களை வழங்கி, இறை வரியை பெற்றுக்கொள்வதற்கான புதிய அதிகாரங்கள் மற்றும் அபி விருத்தி செயற்திட்டங்கள் சம்பந்த மாக அவர்களுடன் அர்த்தபுஷ்டியான கலந்தாலோசனைகளைச் செய்ய வேண்டும்.

4. திவிநெகும (வாழ்வெழுச்சி) சட்ட மூலத்தை வாபஸ்பெற்று அத ற்குப் பதிலாக உள்ளூராட்சிக்கு மூல வளங்கள் கருத்திட்டங்களில் கணிச மான அளவு உள்ளீடு மற்றும் கட்டுப்பாட்டை உறுதிசெய்யும் வகை யில் பொருளாதார அபிவிருத்தியு டைய தீர்மானங்களை மேற்கொள் ளும் அதிகாரத்தை வழங்கவேண்டும்.

**ராஜபக்ஷ அரசின் ஊழல் மற்றும் அதிகார துஷ்பிரயோகத்திற்கு எதிராக சிங்கள மக்கள் மத்தியில் வளர்ந்து வருகின்ற அமைதியின்மையை தங்களது போராட்டத்துடன் இணைத்துக்கொள்ளும் வழிவகைகளை தமிழ்த் தலைமைத்துவம் கண்டறிதல் வேண்டும்**

5. வடக்கு, கிழக்கில் துருப்பினர் களின் எண்ணிக்கை மற்றும் பகிரங் கப் பிரசன்னத்தைக் குறைப்பதன் மூலம் விரைவாக இராணுவத்தை அகற்றி சிவில் நிர்வாகத்திற்கு முழுமையாகத் திரும்ப ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். அபிவிருத்தி மற்றும் மனிதாபிமானப் பணிகளிலும் ஏனைய சிவிலியன் நடவடிக்கைகளி லும் இராணுவத்தின் செல்வாக்கை இல்லாமல் செய்து சட்டத்தை நடை முறைப்படுத்துவதை பூரணமாக பொலிஸாரிடம் ஒப்படைக்க வேண் டும்.

6. வடக்கு, கிழக்கில் பாரம்பரிய முஸ்லிம் பிரதேசங்களில் குடிசனப்

பரம்பலின் பண்பை பாதிக்கும் வகையில் அரசின் அனுசரணையுடனான சிங்கள மயமாக்கல் முயற்சிகள் இடம்பெறாதென்று பகிரங்கமாக உறுதியளிக்க வேண்டும்.

7. காணி உரிமைகளைப் பாதுகாத்து காணிக்கொள்கைகள் மற்றும் கொடுக்கல், வாங்கல்களில் ஒளிவு மறைவற்ற செயல்முறைகளை உறுதி செய்தல் வேண்டும். இராணுவத்தினரால் பறித்தெடுக்கப்பட்ட சொத்துகளை திருப்பிக்கொடுக்க வேண்டும்.

8. இந்துக்கள் மற்றும் கிறிஸ்தவர்களான தமிழ் மக்களினதும் முஸ்லிம்களினதும் கலாசார மற்றும் மத உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும். வடக்கு, கிழக்கில் இராணுவ ஆதரவுடன் புத்தர் சிலைகள் மற்றும் புத்த கோயில்கள் நிர்மாணிக்கப்படுவதை நிறுத்துவதும் இந்தச் செயன்முறைகளில் அடங்கவேண்டும். புனித தலங்களுக்கு ஏற்படும் சேதங்கள் மற்றும் நாசங்கள் தடுக்கப்பட வேண்டும்.

9. விடுதலைப்புலிகளுடன் தொடர்பு கொண்டிருந்தவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் ஆட்களை கடத்தி வைத்திருக்கும் முகவர் நிலையங்கள் அவர்களின் பெயர்களையும் இருக்கும் இடங்களையும் குடும்ப அங்கத்தவர்களுக்கு வழங்க வேண்டும். மரணமடைந்தவர்களுக்காக பகிரங்கமாக துக்கம் அனுஷ்டிப்பதற்கு அனுமதிக்க வேண்டும். இறந்தவர்களின் சடலங்களை மீளப்பெற்றுக்கொள்ள உதவ வேண்டும்.

10. போரின் இறுதிக் கட்டத்தில் தமிழர்களை பரவலான முறையில் வலுக்கட்டாயமாக காணாமல் போகச் செய்தது குறித்த நம்பத்தகுந்த சான்றுகளை ஏற்றுக்கொண்டு சுயாதீன விசாரணையொன்றை ஆரம்பிக்க வேண்டும்.

11. தமிழ் பேசும் பிரதேசங்களில் இலங்கையின் தேசிய கீதம் தமிழில் பாடப்படுவதற்கும் தேசிய நிகழ்வுகளில் சிங்களத்திலும் தமிழிலும் பாடுவதற்கும் அனுமதி வழங்க வேண்டும்.

12. தமிழ் அரசியல் செயற்பாட்டாற்றை பயன்படுத்த விழையாத, அவற்றை செயல்படுத்தக் கோராத சிங்கள மாகாணங்கள் இருக்கும் வரை அந்தத் திட்டம் தற்போதைய ரீதியில் வெற்றி பெறும் என்று எதிர்பார்ப்பது தொடர்ந்து ஏமாற்றத்தையே அளிக்கும்.

ஆனால் பேரினவாதக் கட்சிகள் கூறுவது போல் மாவட்ட ரீதியிலான அதிகாரப் பரவல் முறையும் இலங்கையில் செயல்பட்டதாகச் சரித்திரம் இல்லை. மாறாக தமிழர் பகுதிகளில் போராளிக் குழுக்கள் பின்னர் விடுதலைப்புலிகள் இயக்கம் மட்டும் என்ற நிலை உருவானது இந்த காலகட்டத்தில் தான். தெற்கில் சிங்களப் பகுதிகளில் ஜே.வி.பி.யின் இரண்டு வன்முறைப் போராட்டங்கள் நிகழ்ந்ததும் அவ்வாறே. பேச்சுக்கு வேண்டுமானால் ஜே.வி.பி.யின் 1987-89 காலகட்டத்தில் நிகழ்ந்த இரண்டாவது போராட்டத்தை மாகாண திட்டத்தின் கீழ் நடந்ததாகக் கூறலாம்.

ஜே.வி.பி.யின் இரண்டாவது போராட்டமே மாகாண ரீதியிலான அதிகாரப் பரவல் முறைக்கு எதிராகத் தொடங்கப்பட்டது என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். மேலும் இடைப்பட்ட காலத்தில் ஜெயவர்த்தன அரசு மாவட்ட ரீதியிலான ஆட்சி முறையை அமுல்படுத்த முயன்றதையும் நினைவில் கொள்ள வேண்டும். அதனை தமிழ் மக்கள் பெயரில் முதலில் மிதவாதக் கட்சிகளும் பிற்பட்ட காலகட்டத்தில் விடுதலைப் புலிகள் இயக்கமும் ஏற்றுக் கொள்ளவில்லை. அந்த விதத்தில் மாகாண, மாவட்ட ரீதியிலான அதிகாரப் பரவல் முறைகள் ஏற்றுக் கொள்ளப்படாமலே இல்லாமல் போனது என்பதே உண்மை.

## மூன்றும் நான்கும்

இந்தப் பின்னணியில் இனப் பிரச்சினைக்கான அதிகாரப் பரவல் முறை தமிழர்களுக்கிடையே அடிப்படை கோரிக்கைகளுக்கு இடம் கொடுக்கும் அதேநேரத்தில், பேரினவாதிகள் உட்பட்ட பல்வேறு சிங்கள அரசியல் கட்சிகளுக்கும் ஏற்புடையதாக இருக்க வேண்டும். இத்தகைய அணுகு முறையால் மட்டுமே எந்த ஒரு அரசியல் தீர்வும் வெற்றி பெறும் வாய்ப்பு ஏற்படும். இதற்கு செவி மடுக்காமல் முன் வைக்கப்படும் எந்த ஒரு தீர்வுத் திட்டமும் படிப்பதற்கு நன்றாக இருந்தாலும் செயல்பாட்டில் இல்லாமல் ஆக்கப்பட்டு விடும். பதின்மூன்றாம் திருத்தத்தின் தலையெழுத்தும் இதுவே.

அந்த விதத்தில் தற்போதைய மாகாண சபை ரீதியிலான அதிகாரப் பகிர்வு முறையை இன்னும் பரவலாக்குவதும் ஒரு தீர்வுத் திட்டத்தின் பகுதியாக அமையலாம். மத்திய அரசிற்கு கொள்கை மற்றும் சட்டம் இயற்றும் அதிகாரங்கள் மாகாணங்களுக்கு அவற்றை நிர்வகித்து நிதி வழங்கும் அதிகாரங்கள் அடுத்த மூன்றாவது மற்றும் நான்காவது மட்டங்களில் மாவட்ட மற்றும் கிராம அமைப்புகளின் மூலம் மத்திய அரசின் கொள்கைகளை மாநில அரசின் திட்டம் மற்றும் நிதிநிர்வாகத்தின் கீழ் செயல்படுத்தலாம். இத்தகைய அமைப்பே அதிகாரப் பரவல் முறைக்கு முழு அளவில் உயிர் மற்றும் பொருள் கொடுக்கும்.

இவ்வாறான அரசியல் பேச்சுவார்த்தைகள் நிகழும் போது பழையதும் புதியதுமான பல்வேறு பிரச்சினைகள் முன்வைக்கப்படலாம். இனப் பிரச்சினை அடிப்படையில் மாகாணங்களுக்கான காவல் துறை மற்றும் நிலம் (காணி) குறித்த அதிகாரங்கள் பேச்சுவார்த்தைகளில் முக்கிய இடம் பெறும் என எதிர்பார்க்கலாம். அது போன்றே மாகாண சபைக்கான சட்டம் இயற்றும் அதிகாரங்கள் குறித்தும் சர்ச்சை தொடரலாம். இது தவிர இனப்பிரச்சினையோடு ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தையான வடக்கு- கிழக்கு இணைப்பும் அரசியல் தீர்விற்கான அடிமட்டத்தையே ஆட்டிப் பார்க்கலாம்.

## அரசியல் தலைமைகளுக்கு பரீட்சை

இன்றைய நிர்வாக அமைப்பின்படி ஆட்சியின் அனைத்து அதிகாரங் களும் தலைநகர் கொழும்பில் உள்ள அமைச்சர்களின் கையில் உள்ளது என்பதே உண்மை. அவர்களிடம் கேட்டால் நிலவில் உள்ள நிர்வகிக் கும் ஜனாதிபதி முறையின் கீழ் தங் களுக்கு எந்த அதிகாரமும் இல்லை என்று முனகுவார்கள். ஆனால் தங் களது அதிகாரங்களை மாகாணங் களில் உள்ள தங்களது துறை அமைச்சர்களுடன் பகிர்ந்துகொள் ளத் தயாராகமாட்டார்கள். மாகாண அளவில் அதிகாரப் பரவல் முறை செயல்படாமல் போனதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணம். ஏற்றுக் கொள் ளப்பட வேண்டிய காரணமும்.

அதேசமயம் மாகாணங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்று குரல் எழுப்பும் அரசியல்வாதி களில் எத்தனை பேர் அந்த அதி காரங்களை அடுத்த கட்டத்தில் உள்ள மாவட்டம் மற்றும் கிராம சபைகளு டன் பகிர்ந்து கொள்ளத் தயாராக இருக்கிறார்கள்? அதிகாரப் பரவல் குறித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் கோரிக்கைகள் கொள்கை ரீதியா னது. மாகாணங்களுக்கு தெளிவு படுத்தப்பட்ட, நெறிப்படுத்தப்பட்ட அதிகாரங்களை வழங்குவதன் மூலம் மட்டுமே ஒன்று சேர்ந்த இலங்கையில் தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே ஆட்சி செய்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படும் என்பதே அந்தக் கொள்கை யின் தாக்கம்.

இது கொள்கை வடிவானது மட் டுமே அன்றி தனி நபர் ஆசைகளுக் கும் அபிலாசைகளுக்கும் ஒரு வடி கால் அல்ல என்பதை கூட்டமைப்பு தலைமை தெளிவுபடுத்த வேண்டும். அவ்வாறு அவர்கள் தெளிவாக இருந்தால் தங்களது நிலையையும் தெளிவுபடுத்தினால் மாகாணங்களு க்கு அடுத்த மாவட்டம் மற்றும் கிரா மம் ஆகிய மட்டங்களில் உள்ள பிற தமிழர்களுடன் தங்களுக்கு கிடைத்த அதிகாரங்களை பகிர்ந்து கொண்டு ஆட்சி செய்வது என்பது இயலாத காரியம் அல்ல. மாறாக இதுவே வர வேற்கப்பட வேண்டிய விடயமாக அமைந்துவிடும். இன்றைய சூழ் நிலையில் சிங்களப் பேரினவாதி களின் எதிர்ப்பிற்கும் எதிர்பார்ப்பு களுக்கும் இது பதிலாக அமைந்து விடும்.

இவ்வாறான திட்டம் ஏற்றுக் கொள் ளப்படுமேயானால் அதனால் தமிழ் மக்களுக்கும் தமிழ் மாகாணங்களுக் கும் தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் அது மிகுந்த பயன் அளிக்கும் காரண ங்கள் பல. தேசிய அளவில் இனப் பிரச்சினைக்கு சர்வதேசத்தின் உதவி மூலம் அரசியல் முடிவு காண்பதில் தீவிரம் செலுத்தும் கூட்டமைப்பு போன்ற தமிழ் அரசியல் தலைமைகள் கீழ் மட்டத்தில் அடிமட்ட மக்களின் அன்றாடத் தேவைகள் குறித்து மட்டுமே கவலைப்பட்டு வருவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. அத் தகைய எதிர்பார்ப்புகளில் நியாயம் இல்லை.

இனப் போருக்குப் பின்னர் தங்கள் வீடுகளிலும் கிராமங்களிலும் முடங் கிக் கிடக்கும் அப்பாவித் தமிழ் மக்க ளின் அன்றாட வாழ்க்கைப் பிரச் சினை குறித்து அவர்களில் ஒன்றாக அவர்களோடு வாழ்ந்து வரும் இரண்டாம் கட்ட அரசியல் தலை வர்களுக்கும் தொண்டர்களுக்குமே அந்தப் பிரச்சினைகளின் தாக்கமும் அவற்றிற்கான அரசு மற்றும் அரசி யல் வழியிலான பதில்களும் பரிகா ரங்களும் தெரிந்திருக்கும். அந்தப் பிரச்சினைகளுக்கான முடிவுகளை செயல்படுத்த அவர்களுடைய அள வில் கிராமம் மற்றும் மாவட்ட ரீதியி லான அரசு அதிகாரிகள் மூலம் தொடர்ந்து முயற்சி செய்ய முடியும். அதற்கான அரசியல் அவசியமும் நேரமும் இருக்கும்.

இனப் போரின் காரணமாகவும் அதனை காரணமாகக் காட்டி பிற நாடுகளுக்கு குடி புகுந்த தமிழ் மக் கள் மீண்டும் இலங்கைப் பக்கம் தலைவைத்து படுக்கப்போவதில்லை என்பதே வருத்தமான உண்மை. இதனால் இன்றைய தமிழ் அரசியல் ளர்களுக்கு தொல்லை விளைவிப் பதை முடிவுறுத்தி வடக்கு, கிழக்கில் உள்ள சகல பிரஜைகளும் வன்செயல் அல்லது காணாமல் போகச் செய்தல் போன்ற அச்சுறுத்தல் எதுவுமின்றி அரசாங்கத்தையோ இராணுவத் தையோ விமர்சிப்பதற்கும் சுதந்திர மாக எதிர்ப்பு தெரிவிப்பதற்கும் அனு மதிக்க வேண்டும்.

13. மனிதாபிமான பணிகள் மற்றும் சனசமூக குழுக்கள் மீதான மட்டுப் பாடுகள் மற்றும் தொல்லைகளை குறைத்து தங்களுக்குரிய முன்னுரி மைகளை அவர்களே தீர்மானிக்க அனுமதிக்க வேண்டும்.

14. அரசியலமைப்பிற்கான 13 ஆவது திருத்தத்தின் அடிப்படைப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். சட்டமா அதிபர் மற்றும் நீதித்துறை மீதான ஜனாதிபதியின் அதிகாரங்கள் சம்பந்தமான அரசியல மைப்பு மட்டுப்பாடுகளை வாபஸ் பெற வேண்டும். மனித உரிமைகள், பொலிஸ், தேர்தல்கள், இலஞ்சம், நீதி மற்றும் பொதுச்சேவைகள் சம்பந்த மான சுயாதீனமான ஆணைக்குழுக் களை மீண்டும் தாபிக்க வேண்டும். பொலிஸை பாதுகாப்பு அமைச்சிலிரு ந்து பிரித்து வேறாக்குதல் வேண்டும். நீதித்துறையை பயமுறுத்துவதை நிறுத்துவதன் ஒரு ஆரம்பமாக பிரதம நீதியரசருக்கெதிரான அரசியல் குற்ற விசாரணையை வாபஸ்பெற வேண் டும்.

15. ஐக்கிய நாடுகள் மனித உரி மைகள் பேரவையின் 2012 மார்ச் தீர்மானத்தை நடைமுறைப்படுத்து வது தொடர்பில் ஐ.நா.வுடனும் ஏனைய சர்வதேச நிறுவனங்களுட னும் பூரணமாக ஒத்துழைக்க வேண் டும். 2013 மார்ச் கூட்டத்தொடருக்கு முன்னதாக ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைகள் அலுவலர்கள் இலங்கைக்கு வர வகைசெய்ய வேண்டும். ●

தலைமைகளுக்கு அடுத்த இரண்டாவது மற்றும் மூன்றாவது கட்டங்களில் குறிப்பிடத்தக்க வகையிலான தலைவர்கள் உருவாகவில்லை என்பது குறித்து தமிழ்ச் சமுதாயம் கவலைப்பட வேண்டும். இதற்கு விடுதலைப் புலிகள் இயக்கமும் வெகுவாக பொறுப்பெடுக்க வேண்டும்.

தற்போது முன்னணியில் இருக்கும் தலைவர்களுக்கு எடுபிடியாக மட்டுமே இருந்து பதவிகளை அடைந்து வருவோரால் எதிர்காலத்தில் தமிழ் சமுதாயத்திற்காக உருப்படியாக எதுவும் செய்துவிட முடியாது. அதற்கான தனிநபர் திறமைகள் கடைத் தெருவில் விற்கப்படுவதில்லை. பணம் கொடுத்து பதவிகளை மட்டுமே வாங்க முடியும். அறிவையும் திறமையையும் அல்ல. இது போன்ற காரணங்களினால் தமிழ் மாகாணங்களில் இரண்டாவது மற்றும் மூன்றாவது நிலைகளில் கிராமங்கள், மாவட்டங்கள் என்ற அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட தொண்டர்களுக்கு வாய்ப்புகள் கிடைக்கப் பெறுமேயானால் அதுவே பின்னர் அவர்களில் சிலர் மாகாணம் மற்றும் தேசிய அளவில் சிறப்பான அரசியல் தலைவர்களாக உருவாவதற்கு வழி வகுக்கும்.

ஆனால், இத்தகைய அரசியல் விவாதங்களுக்கு ஏதாவது அர்த்தம் இருக்க வேண்டுமென்றால் அது அரசின் முயற்சியினாலும் அதிகாரப் பரவல் முறை குறித்து அரசு முன் வைக்கும் திட்டத்தினாலும் மட்டுமே முடியும். ஜனாதிபதி ராஜபக்ஷவும் அமைச்சர் சேனரத்னவும் குறிப்பிட்டபடி பதின்மூன்றாவது திருத்தத்தில் மாற்றங்கள் மட்டுமே ஏற்படுத்தப்படும் என்பதில் உண்மை இருந்தாலும் அதனை செயலாக்குவதில் அமைச்சர் ரம்புக்வெல கோடிட்டுக் காட்டியபடி மூன்றாவது மற்றும் நான்காவது அடுக்கும் உட்படுத்தப்படுமேயானால் அது குறித்து தமிழ்ச் சமூகமும் தமிழ் அரசியல் தலைமைகளும் என்ன கூறப்போகின்றன. சிங்கள, தமிழ் வேதாளங்கள் மீண்டும் முருங்கை மரம் ஏறப்போகிறதா அல்லது தரையில் இருந்து பிரச்சினைகளைப் பேசி தீர்த்துக்கொள்ளப் போகின்றனவா?

பாரம்பரிய

பெருமைமிக்க

எங்கள்

மண்ணின்

உணர்வுகள்

இணையத்தில்...



யாழ் மண்
Yarl Mann Connect with Jaffna
www.yarlmann.lk

# ராதிகாவுக்கு விசேட ஜூரி விருது

முன்னாள் பிரெஞ்சு ஜனாதிபதி ஜாக்ஷிராக்கின் பெயரில் நிறுவப்பட்ட ஜாக்பவுண்டேசன் வருடாந்தம் வழங்கும் விசேட ஜூரி விருது (Special Jury Prize 2012) இவ்வருடம் ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் இணைச்செயலாளர் நாயகமும் சிறுவர்கள் மற்றும் ஆயுத மோதல் விவகாரங்களுக்கான விசேட பிரதிநிதியுமான செல்வி ராதிகா குமாரசுவாமிக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

பிரெஞ்சு தலைநகர் பாரிஸில் கடந்த மாதம் 22ஆம் திகதி நடைபெற்ற வைபவத்தில் வைத்து ராதிகா இவ்விருதைப் பெற்றுக்கொண்டார். அதில் முன்னாள் பிரெஞ்சு ஜீன் பியர் ரஃபாரின், முன்னாள் பிரெஞ்சு பொருளாதார அமைச்சர் பிராங்கோயிலப் பரோயின், மற்றும் பிரெஞ்சு அரசியல்வாதிகள், தூதுவர்கள் கலந்துகொண்டனர். முன்னாள் ஜனாதிபதியின் மனைவி பேர்னடேற் ஷிராக் பிரசன்னமாகியிருந்தார். பாரிஸுக்கான இலங்கைத் தூதுவர் கலாநிதி தயான் திலகவும் திருமதி சன்ஜா ஜெயதிலகவும் கலந்து கொண்டனர்.

ஆயுத மோதல்களின் போது சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதிலான செயற்பாடுகளுக்கு ராதிகா வழங்கியிருக்கும் பங்களிப்பைக் கௌரவித்தே இந்த விருது அவருக்கு வழங்கப்பட்டது.

விருதை அவருக்கு கையளித்து உரையாற்றிய ஜெனரல் நாட்டின் முன்னாள் ஜனாதிபதியும் பிரெஞ்சு மொழி பேசும் நாடுகளின் அமைப்பான "லா பிராங் கோ போனி" யின் செயலாளர் நாயகமுமான அப்டோ டியோவ், ஆயுத மோதல்களின்போது சிறுவர்களைப் பாதுகாப்பதற்கு ராதிகா குமாரசுவாமி வழங்கிய பங்களிப்பை வியந்து பாராட்டினார்.

"அன்புக்குரிய ராதிகா குமாரசுவாமி அவர்களே, ஆயுத மோதல்களில் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உதவுகின்ற அதேவேளை, அவர்களின் சமூக உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்வதற்கு தங்கள் ஆற்றலையும் சக்தியையும் அர்ப்பணித்த துணிச்சல் மிகு பெண்களின் வரிசையில் நீங்கள் காணப்படுகிறீர்கள்'' என்று அப்டோ டியோவ் குறிப்பிட்டார்.




விருதைப் பெற்றுக் கொண்டு ஏற்புரை நிகழ்த்திய ராதிகா, தனது வாழ்க்கைப் போக்கில் தன்னை உற்சாகப்படுத்தியவர்களுக்கு நன்றி கூறினார்.

"எனது ஆசான் கலாநிதி நீலன் திருச்செல்வத்துக்கு நான் முதலில் நன்றி கூறவேண்டும். 1999 ஜூலையில் கொடூரமான முறையில் கொலை செய்யப்படும்வரை, சமாதானம், உண்மை மற்றும் நீதி ஆகிய விழுமியங்களுக்காகப் பாடுபடக் கூடிய ஒரு இலங்கையர் சந்ததியை உற்சாகப்படுத்தியவர் நீலன். போராட்டத்தின் முக்கியத்துவத்தை நான் விளங்கிக் கொண்டு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் மனிதகுலத்துக்காகவும் மனித உரிமைகளுக்காகவும் போராடுவதற்கு என்னைத் தூண்டிய இலங்கையிலும் தெற்காசியாவிலும் உள்ள சமாதானம் மற்றும் மனித உரிமைகள் ஆர்வலர்கள் சமூகத்துக்கும் நன்றி கூறுவதற்கு நான் கடமைப்பட்டவள்.

இறுதியாக எனது குடும்பத்தினருக்கு, எனது தாயாருக்கு, எனது தந்தைக்கு, எனது சகோதரனுக்கு நன்றி கூறுகிறேன். இந்த விருதை எனது தாயாருக்கும் முன்னேற்றத்தை அடை வதற்காக, உலகை ஒரு சிறப்பான இடமாக்குவதற்காக கனவுகளைக் காண்பதற்காக சம்பிரதாயங்களை மீறுவதற்கு தங்கள் மகன்மாருக்கு உற்சாகத்தைக் கொடுத்த உலகம் பூராகவுமுள்ள தாய்மாருக்கும் அர்ப்பணம் செய்கிறேன்'' என்று ராதிகா குமாரசுவாமி குறிப்பிட்டார்.

# பாரம்பரிய அரசியலுக்கு தலைமைத்துவத்தை தேட



குசல் பெரேரா

இரண்டாவது மட்டத்தலைமைத்துவம் கட்சிக்குள் வளருவதை ரணில் ஒருபோதும் அனுமதித்ததில்லை. தன்னை பாதுகாப்பற்றவராக உணருகின்ற காரணத்தினால்தான் கட்சியில் அரசியலமைப்புக்கு சர்வாதிகாரத்தனமான திருத்தங்களை அவர் கொண்டுவந்திருக்கிறார். சஜித் பிரேமதாஸ ஆற்றல் இல்லாத, விவேகம் இல்லாத ஒரு உள்ளூர் தலைவர் மாத்திரமே



நல்ல பகிடி... டிசம்பர் 1ஆம் திகதி சிறிகொத்தாவில் நடைபெற்ற ஐக்கிய தேசியக்கட்சியின் வருடாந்தக் கூட்டத்தில் வைத்து சஜித் பிரேமதாச இலங்கையின் ஜனாதிபதியாவதற்கான உரிமைக்கு பந்தயம் கட்டியிருக்கிறார். ஐக்கியதேசியக் கட்சியின் தலைமைத்துவத்தை கைப்பற்றுவதற்கு பரிதாபகரமாக முயன்று படு தோல்வியடைந்த அவர் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க போட்டியிடாவிட்டால் ஐ.தே.க.வின் வேட்பாளராக தான் போட்டியிடப் போவதாக அறிவித்திருக்கிறார். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் செய்ததைப் போன்று "பொதுவேட்பாளர்" ஒருவர் தொடர்பில் விட்டுக்கொடுப்பைச் செய்யாமல் கட்சியை முன்கூட்டியே தடுப்பதற்கு பிரேமதாச மேற்கொண்ட ஒரு வலுவற்ற முயற்சி என்றே இதை வர்ணிக்க வேண்டியிருக்கிறது. அத்துடன் விக்ரமசிங்கவிற்குப் பதிலாக அந்த இடத்திற்கு வேறு ஒருவர் வருவதை தடுப்பதும் பிரேமதாசாவின் உள்நோக்கமாகவிருக்கலாம்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் மூன்றுவருடங்கள் அல்லது கூடுதலான காலம் இருக்கிறது. மக்களுக்கு இது இப்போது முக்கியமானதொன்றல்ல. அடுத்த 6 வருடங்களுக்கு "கேள்விக்கிடமின்றிய" தலைவரின் கீழ் ஐ.தே.க அதன் புதிய செயல்திட்டத்தை முன்னெடுப்பதில் எத்தகைய பாத்திரத்தை வகிக்கப்போகிறதென்பதே முக்கியமானதாகும். இரண்டு அரசியலமைப்புத் திருத்தங்கள் - ஒன்று 18ஆவது திருத்தம். அது ஜனாதிபதி மீண்டும் எத்தனை தடவையும் தேர்தலில் போட்டியிடுவதற்கு வகைசெய்திருக்கிறது. மற்றையது ஐ.தே.க.வின் வருடாந்த மகாநாட்டில் அதன் அரசியலமைப்பிற்கு கொண்டுவரப்பட்ட திருத்தத் தீர்மானம். அது எதிர்க்கட்சித் தலைவர் ஐ.தே.க.வின் தலைவராக நீண்டகாலம் இருப்பதற்கு வகை செய்திருக்கிறது. நாட்டின் அரசியலமைப்பிற்கான திருத்தம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையினாலும் ஐ.தே.க.மாநாட்டு தீர்மானம் 4640 வாக்குகளினாலும் அமோக ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டாலும் இவை எந்த அளவிற்கு ஜனநாயக ரீதியானவை? சூழ்ச்சித் திறத்தால் பெறப்பட்ட பெரும்பான்மைகள் இவை. பாராளுமன்றத்தில் என்றால் என்ன, ஒரு அமைப்பில் என்றால் என்ன இரண்டில் எதுவுமே ஜனநாயகத் தன்மை கொண்டவை அல்ல. அவை அரசியல் ரீதியில் செல்லுபடியற்றது.


இலங்கை இப்பொழுது போரின் முடிவிற்குப் பின்னரான சமூக, பொருளாதார மற்றும் அரசியல் இடர்பாடுகளுக்கூடாக சென்றுகொண்டிருக்கிறது. நெருக்கடிகளில் இருந்து மீளுவதற்கு அதற்கு ஜனநாயக அரசியல் மேடையில் ஒரு மாற்றுத் தலைமைத்துவம் தேவைப்படுகிறது. "பிரிவினைவாத பயங்கரவாதிகள்" என்று கூறிக்கொண்டு விடுதலைப்புலிகளை

# வெளியே மாற்று ஜனநாயக வேண்டிய நிலையில் நாட்டு மக்கள்

ஒழிப்பதற்காக சிங்கள இனவாத வெறியுடன் முன்னெடுக்கப்பட்ட போர், இந்த குடும்ப ஆட்சி மட்டுப் பாடில்லாத அதிகாரங்களை அபகரித் துக்கொள்வதற்கு உதவியிருக்கிறது. இப்போது அது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியினூடாக அரசிய லமைப்பு ஆட்சியுடன் முரண்பட்டுக் கொண்டிருக்கிறது. நாட்டின் சட்ட வாக்க அமைப்பு என்ற வகையில் பாராளுமன்ற ஜனாதிபதியினால் வழங்கப்படுகிற ஆணைகளுக்கு கீழ்ப்படிகின்ற ஒரு மன்றமாகச் செயற் பட்டுக் கொண்டி ருக்கிறது. அதற்கு எதிர்க்கட்சித் தலைவரும் ஒத்து ஊதி துணைபோய்க்கொண்டி ருக்கிறார். கடுங்கொடிய ஊழல் ஆட்சியின் கீழ் சமுதாயம் சட்டம் ஒழுங்கில்லாததாக காணப்படுகிறது.

அரசியல் மேல்மட்டத்தவர்கள் பகி ரங்கமாக குற்றஞ்சாட்டப்படுகிற கிரி மினல்களாகவும் மோசடிக்காரர்களா

**ராஜபக்ஷ ஆட்சியை மாற்றுவதற்கு மக்களுக்கு ஒரு மாற்று ஜனநாயக தலைமைத்துவத்தை வழங்குவதற்கு சரியான ஆளாக ரணில் ஒரு போதும் இருக்கப்போவதில்லை. ஐ.தே.க.விற்குள் தலைமைத்துவப் போட்டியில் அவர் வெற்றி பெற்றிருக்கலாம். ஆனால் அவர் மக்களை நிராதரவாகவே விட்டிருக்கிறார்**




கவும் இருக்கிறார்கள். நாட்டின் பொருளாதார வாழ்வின் இரு முக் கிய பதவிகள் மோசமானவர்களின் கைகளில் விடப்பட்டிருக்கின்றன. சகல வல்லமையும் கொண்ட ஆளும் குழுவினரின் கால்களின் கீழ் கொண்டுவரப்படுவதற்காக நீதித் துறை பகிரங்கமாகவே அவமதிப்புக் குள்ளாக்கப்படுகிறது. போருக்குப் பின்னரான "ஜனநாயகம்" பாது காப்புத்துறையின் ஆதிக்கத்தின் கீழ் இருக்கிறது. பாராளுமன்றத்திற்கு மேலாக கொள்கைகள் தீர்மானிக்கப் படுகின்றன. சிங்கள அரசியல் தரம் கெட்டதாக போய்க்கொண்டிருக்கி றது. அதுபெரும் பாரதூரமான குழப்பநிலைக்குள்ளாகி இருக்கிறது. ஆனால் சர்வதேச சதித்திட்டங்கள் மற்றும் புலம்பெயர்ந்த தமிழர்களின் மத்தியில் இருப்பதாகக் கூறப்படு கின்ற விடுதலைப்புலிகளின் எச்ச சொச்சங்கள் வசதியான சாக்குப் போக்குகளாக அமைந்திருக்கின்றன. இந்த வகையான சஞ்சலமானதும் சீரழிந்துகொண்டுபோகிறதுமான சமூக வாழ்வு புதிய நெருக்கடிக்குள் மூழ்குகிறது. அதனால் மதச்சார்பற்ற, ஜனநாயக வேலைத்திட்டத்தைக்

கொண்ட மாற்று அரசியல் தலைமைத்துவம் ஒன்று இலங்கைக்கு தேவைப்படுகிறது. சகல அரச நிறுவனங்களையும் பொதுவாழ்வையும் இராணுவ மயத்தில் இருந்து விலக்கி ஜனநாயகமயப்படுத்துவதே முதல் செய்யப்பட வேண்டிய பணியாகும். அடுத்து உடனடியாக நீண்டகாலமாக அலட்சியப்படுத்தப்படுகின்ற தமிழ் சமுதாயத்தின் அரசியல் அபிலாசைகளை கௌரவிப்பதில் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. சமுதாயத்தில் காணப்படக்கூடியதாகயிருக்கின்ற துருவமயமாதலை தகர்க்கக் கூடிய மதச்சார்பற்ற ஜனநாயக செயற் திட்டமொன்று இல்லாவிட்டால் சிங்களச் சமுதாயம் அதன் சொந்தத்தில் எந்தவொரு ஜனநாயக வாழ்க்கை முறையையும் கொண்டிருக்க முடியாது. அத்தகைய செயற் திட்டமொன்றை முன்னெடுப்பதற்கு தங்களது சொந்த அரசியல் ஸ்தாபனங்களுக்குள் ஜனநாயக வழிமுறைகளின் கீழ் செயற்படக்கூடிய தலைமைத்துவம் தேவை.

ஐக்கிய தேசியக் கட்சி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் இருந்து பெரிதும் வேறுபட்டதல்ல. அது டட்லி சேனநாயக்க, பிரேமதாச போன்ற மக்கள் செல்வாக்குடைய தலைவர்களை நாட்டுக்கு வழங்கிய போதிலும் அமைப்பு ரீதியிலும் ஜனநாயகத் தன்மை கொண்ட அரசியல் கட்சியாக ஒருபோதுமே இருந்ததில்லை. ஆட்சி முறையைப் பொறுத்தவரையில் அவ்விருவரும் தோல்வியைத் தழுவினார்கள். ஜனநாயகத் தலைவர்களாக அவர்கள் இருந்ததில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் ஐ.தே.க.வும் நாடு காலனித்துவ ஆட்சியிடமிருந்து சுதந்திரத்தைப் பெற்ற பின்னரான கடந்த 6 தசாப்தங்களாக தோல்வி கண்ட அரசியல் தலைவர்களை நாட்டுக்கு தந்திருக்கின்றன. ரணில் விக்கிரமசிங்க ஒரு தலைவர் என்ற வகையில் மேற்கூறப்பட்டவர்களிலிருந்து வேறுபட்டவர் அல்ல. மாமனாரான ஜே.ஆர்.ஜெயவர்தனாவினாலேயே ரணில் விக்கிரமசிங்க அரசியலுக்கு கொண்டுவரப்பட்டவர். இவரின் தந்தையார் 1964ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான கூட்டரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட சதி முயற்சியின் சூத்திரதாரியாக இருந்ததால் அதற்கு பிரதியுபகாரமாக ஜெயவர்தனா இதைச் செய்திருக்கலாம். ஐக்கியதேசியக் கட்சியின் முக்கிய தலைவர்களாக இருந்தவர்களை ஒவ்வொருவராக விடுதலைப் புலிகள் உலகில் இருந்து அப்புறப்படுத்திய காரணத்தினால் விக்கிரமசிங்க தற்செயலாகவே ஐ.தே.க.வின் தலைவராக வந்தார். அவர் ஜே.ஆரைப் போன்று கூர்மதியுடைய ஒரு தந்திரசாலியுமல்ல டட்லி சேனநாயக்காவைப் போன்று மக்கள் செல்வாக்குடைய தலைவருமல்ல. இவர் பிரேமதாசாவைப்போன்று ஒரு எதேச்சாதிகாரமான சிங்களத் தலைவருமல்ல.

எனவே இவர் யார்? இவர் ஒரு தற்செயலான சாதாரண தரத்திலான தலைவரேயாவார். நாட்டின் தலைவர் பதவிக்கான தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்னதாக சூழ்ச்சித்திறத்தின் மூலமாகவே கட்சியின் தலைமைத்துவத்தை இவரினால் காப்பாற்றிக் கொள்ளக் கூடியதாக இருந்திருக்கிறது. தனது சொந்தக் கட்சிக்குள் எதேச்சாதிகாரமான அரசியல் அமைப்பொன்றை வைத்துக்கொண்டு மக்கள் கவர்ச்சியியோ அதிகாரப்பிடியோ இல்லாத தலைவர் ரணில். உறுதிப்பாடில்லாத தலைவர் ஒருவர் எப்போதுமே இரண்டாவது மட்டத் தலைமைத்துவம் கட்சிக்குள் வளர்வதை அனுமதித்ததில்லை. ஆனால் ஜே.ஆர்.ஜெயவர்தனா அத்துலத் முதலியையும் காமினி திசாநாயக்காவையும் வளர்த்தபோதிலும் பிரேமதாசா தனது சொந்த முயற்சியால் தன்னை வலுப்படுத்திக்கொண்டார்.

தன்னைப் பாதுகாப்பற்றவராக உணருகின்ற காரணத்தினால் தான் ரணில் விக்கிரமசிங்க கட்சியின் அரசியலமைப்பிற்கு சர்வாதிகாரமான திருத்தங்களைக் கொண்டுவந்து கூடுதலான அதிகாரங்களை தன்வசமாக்கினார். ஜனநாயகத்தைப் பற்றியே எப்போதும் உச்சாடனம் செய்து கொண்டு எதேச்சாதிகாரமான முறையில் நடந்துகொள்கிற வேறு தலைவர் ஐ.தே.க. சரித்திரத்தில் இருந்ததில்லை. கட்சிக்குள் அவருடைய சர்வாதிகார தலைமைத்துவம் ஜனாதிபதியாகவோ அல்லது பிரதமராகவோ நாட்டின் தலைமைத்துவத்தை கையேற்கக்கூடிய ஜனநாயகவாதியாகவோ வருவதற்கு அவருக்கு வாய்ப்பைக் கொடுக்காது புதிய வேலைத்திட்டத்தைப் பற்றி ரணில் விக்ரமசிங்க பேசுவது வெறுமனே மக்களை கவருவதற்குத் தான். அந்தச் செயல்திட்டம் ஐ.தே.க. ஆட்சியொன்றின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுமேயானால் அது மட்டுப்படுத்தப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்களாக இருக்குமே தவிர ஜனநாயக சீர்திருத்தங்களாக இருக்கப்போவதில்லை.

ஒரு நாட்டின் ஜனநாயகத் தலைவராக வருவதற்கு ஒருவர் தனது சொந்த அரசியல் வாழ்க்கை முறையில் ஜனநாயக பாரம்பரியம் ஒன்றை பின்பற்றுபவராக இருக்க வேண்டும். ஜனநாயக சீர்திருத்தங்களை ஆதரிக்கக்கூடிய சமூகத்தளமொன்றைக் கொண்டவராக இருக்க வேண்டும். ஆனால் ரணில்விக்கிரமசிங்க ஜனநாயக சீர்திருத்தங்களினால் நியமிக்கப்படும் ஒருவரல்ல. அரச அனுசரணைக்காக ஏங்குகின்ற வர்த்தக மூலதனத்தின் பிரதிநிதி அவர். ரஷ்ய ஜனாதிபதி புட்டின் இத்தகைய ஒருவரே. சீனாவின் ஹுஜின்டாவோவும் ஒன்றும் சிறப்பானவரல்ல. ஆனால் இருவரும் ஜனநாயகத்தைப் பற்றிப் பேசுவார்கள். இவர்கள் பேசுகின்ற ஜனநாயகத்தில் ரஷ்ய மக்களோ கம்யூனிஸ்ட் கட்சியின் கீழ் சீன மக்களோ எந்தச் சுதந்திரமும் இல்லாதவர்களாகவே இருக்கிறார்கள்.

பாராளுமன்றத்தில் ரணிலின் செயற்பாடுகள் ஜனநாயக ஆட்சியாளராக வரக்கூடிய ஒருவரிடம் எதிர்பார்க்கப்படுகின்றவற்றிற்கு இணையானதாக இல்லை. 2011 ஏப்ரலில் பாராளுமன்றத்தில் எந்த

விதமான முன்னறிவித்தலுமின்றி தனியார்துறை ஊழியர்களுக்கான ஓய்வூதியச் சட்டமூலம் தாக்கல் செய்யப்பட்டது. அறிவித்தலின்றி எவ்வாறு அதை விவாதிக்க முடியும் என்று எதிர்க்கட்சி ஒருபோதும் கேள்வியெழுப்பவில்லை.

கட்டுநாயக்காவில் வீதிகளில் இறங்கிய சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்களே அந்த ஓய்வூதிய சட்டமூலத்தை தோற்கடித்தார்கள். பாராளுமன்றத்தில் அரசாங்கத்திற்கு இருந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் அர்த்தமற்றதாகியது. 2013ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் அரசியலமைப்பிற்கு இசைவானதாக அமைய வேண்டுமேயானால் மூன்று திருத்தங்கள் கொண்டுவரப்படவேண்டுமென்று உயர் நீதிமன்றம் அதன் தீர்ப்பில் கூறியது. ஆனால், ஐ.தே.க.உட்பட முழு எதிரணியும் அந்த திருத்தங்கள் இன்றியே வரவு-செலவுத் திட்டத்தை விவாதிக்க இணங்கிக் கொண்டன. அதைப்போன்றே சர்ச்சைக்குரிய திவிநெகும சட்டமூலமும் மீண்டும் பாராளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் இடம்பெற்றன.

ரணிலின் தலைமையின் கீழான ஐ.தே.க. அரசியலமைப்பிற்கு விரோதமான ஒவ்வொரு செயற்பாட்டையும் சட்டபூர்வமானதாகக் காட்டுவதற்கு அரசாங்கத்திற்கு துணைபோய்க் கொண்டிருக்கிறது. பாராளுமன்றம் அரசியல் தெருக்கடையாகிப் போய் விட்டது. செல்வாக்குமிக்க சந்தைகளைக் கைப்பற்றுவதற்கான போட்டியிடுகின்ற இரு அரசியல் "முதலாளிகளின்" ஆதிக்கத்திலான கடைத்தெரு அது. ரணில் இந்த மாதிரியேதான் தொடர்ந்து செயல்படுகிறார். ராஜபக்ஷ ஆட்சியை மாற்றுவதற்கு மக்களுக்கு ஒரு ஜனநாயக மாற்று தலைமைத்துவத்தை வழங்குவதற்கு சரியான ஆளாக ரணில் ஒருபோதும் இருக்கப்போவதில்லை. ஆனால் வேறு யார் அங்கு இருக்கிறார்கள்? சஜித் பிரேமதாச. ஆற்றல் இல்லாத, விவேகம் இல்லாத ஒரு உள்ளூர்த் தலைவர். ரணிலினால் சூழ்ச்சித்தனமாக பெறக்கூடியதாக இருந்த 4900இற்கும் அதிகமான வாக்குகளுக்கு எதிராக வெறுமனே 330 வாக்குகளையே கட்சிக்குள் பிரேமதாச கொண்டிருக்கிறார்.

கடந்த 18 வருடமாக தனக்குப் போட்டியாக தகுதிவாய்ந்த ஜனநாயக ரீதியான புத்திஜீவித்தலைமைத்துவம் ஒன்று ஐ.தே.க.விற்குள் வளராதிருப்பதை ரணில் உறுதிசெய்து கொண்டார். அவர் கட்சிக்குள் தலைமைத்துவப்போட்டியில் வெற்றிபெற்றிருக்கலாம். ஆனால் மக்களை நிராதரவாகவே விட்டிருக்கிறார். இந்த நாடு இப்போது பிரதான பாரம்பரிய அரசியலுக்கு வெளியே மாற்று ஜனநாயக தலைமைத்துவமொன்றை தேடவேண்டியிருக்கிறது.

சிக்கலான பாதை எமக்கு முன்னால் இருக்கிறது. ●

GET சமகாலம் DELIVERED TO YOUR HOME

3 months 600/-

6 months 1200/-

1 Year 2,400/-

Please complete the form given below, along with your Cheque/Money Order written in favour of 'Express Newspapers (Ceylon) (Pvt) Limited' and send it to our Head Office at No185,Grandpass Road, Colombo 14,Sri Lanka.
Tel:+94-11-7322700 / 7738046 Fax:+94-11-7767700

*For more details, please contact :*
Overseas & Local Subscriptions
**S.Surainie** - E-mail : subscription@kalaikesari.lk
Tel:+94 11 7322783

Subscription rates (inclusive postage) and delivery within Colombo.

ORDER FORM :

சமகாலம்

**Manager Subscriptions**
**Samakalam**
**No. 185, Grandpass Road, Colombo - 14,**
**Sri Lanka.**
**Tel : +94-11-7322783 / +94-11-7322741**
**Fax : +94-11-4614371**

FOLD HERE

SUBSCRIBER INFORMATION :

Title :..................... Last Name :........................................
First Name :........................................................................
Organization :.....................................................................
Address :...........................................................................
.........................................................................................
Phone :.............................. Mobile :...............................
Fax :................................. E-mail :...............................
Payment : Amount Rs.........................
☐ Cash ☐ Cheque
Payable to : **Express Newspapers (Cey.) (Pvt) Ltd.**
Bank :............................... Cheque No :............................
Signature :.............................



தமிழ் அரசியல் கைதிகள்

# விடுதலைக்கு வழி என்ன?

உ. லிப்பிக்கா

தமிழ் அரசியல் கைதிகளை பெரும்பான்மைச் சிங்கள வர்கள் அரசியல் கைதிகள் என்று ஏற்றுக்கொண்டு அவர்களின் விடுதலை தொடர்பிலான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கக்கூடிய நிலையில் இல்லை

இலங்கையில் அரசியல் கைதிகள் அவசரகாலச் சட்டத்தின் கீழும், பயங்கரவாதச் சட்டத்தின் கீழும் கைது செய்யப்பட்டும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் அரசுக்கெதிரான ஆயுத ரீதியான எதிர்ப்பு நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்டிருந்தார்கள் என்ற சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டவர்களாவர். இவர்களில் பெரும்பாலானோர் 2009 மே மாதம் வன்னியில் முன்னெடுக்கப்பட்ட அரச படைகளின் இராணுவ நடவடிக்கைகளின் போதே கைது செய்யப்பட்டனர். சிறைகளில் உள்ளவர்களின் எண்ணிக்கை 800 என உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதைத்தவிர ஆயிரக்கணக்கானோர் பற்றிய தகவல்கள் எதுவுமில்லாத நிலையில் அவர்கள் பூசா போன்ற தடுப்பு முகாம்களிலும் வெலிகந்த போன்ற இராணுவ முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் இருந்தே வருகிறது.

ஆயுத நடவடிக்கையை அடிப்படையாகக் கொண்டு கைது செய்யப்பட்டவர்களில் 98 அல்லது 99 சதவீதமானவர்கள் தமிழர்களாவர். இவர்கள் ஆகக் கூடியது 10 வருடகாலமும் குறைந்தது 3 வருட காலமுமாக சிறைகளில் இருக்கின்றனர். இவர்கள் பொதுவான குற்றச் செயல்களுக்காக கைது செய்யப்பட்டவர்கள் அல்ல. தமிழ் மக்களுடைய அரசியல் உரிமைகளுடன் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளுடன் தொடர்பு கொண்டிருப்

பதாகச் சொல்லப்படுவதே இவர்களை அரசியல் கைதிகள் என கொள்ளப்படுவதற்கு போதுமான அடிப்படையாகும்.

வழக்கு விசாரணை முடிவுறாத நிலையிலும், வழக்கு விசாரணை இல்லாத நிலையிலும் தண்டனைக்காகவும் சிறைகளில் இருக்கும் இவர்களின் நிலை மிகவும் அழுத்தங்களுக்கும், அடக்குமுறைகளுக்கும், பாரபட்சங்களுக்கும் உட்பட்டதாகும். இவர்களுடைய விடுதலை பற்றி குரல் எழுப்பப்படுகின்ற போதெல்லாம் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்படுவதாக காட்டப்படும் நிகழ்ச்சிகளையே பதிலாக அரசாங்கம் விளங்கிக்கொண்டிருக்கிறது. இவர்களினுடைய விடுதலை தொடர்பாக சில அரசியல் கட்சிகளும் அரசசார்பற்ற நிறுவனங்களும், வெகுஜன அமைப்புகளும், புத்தி ஜீவிகளும் நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்ற போதும் அர்த்தமுள்ள நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டதாக தெரியவில்லை. எனவே இவ்விடயம் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுவது அவசியம்.

இதில் ஒன்று சிறைகளில் அவர்களுக்கு இருக்கும் உரிமை தொடர்பானது, இரண்டாவது அவர்களின் விடுதலை தொடர்பானது மூன்றாவது அவர்கள் விடுதலை செய்யப்பட்ட பிறகு அவர்களது சமூக வாழ்வும் பாதுகாப்பும் தொடர்பானது. இவர்களுடைய விடுதலை தொடர்பான நடவடிக்கைகளில் இறங்குகின்ற போது, இவர்கள் பயங்கரவாதிகளா, அரசியல் கைதிகளா என்ற அடையாளப் பிரச்சினை ஏற்படுகின்றது. இலங்கை அரசாங்கம் மட்டுமன்றி அதில் அங்கம் வகிக்கும் இடதுசாரி அமைச்சர்களும் இலங்கையில் அரசியல் கைதிகளென்று எவருமில்லை என்று கூறுகின்றனர்.

அரசியல் நோக்கங்களுக்காக ஒரு நாட்டின் நடைமுறையில் உள்ள சட்டங்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற போது அவர்கள் அரசியல் அடிப்படையில் செயற்பட்டுள்ளனர் என்பதும், அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் அரசியல் ரீதியானவை என்பதும் அவர்கள் கைதாகின்ற போது அரசியல் கைதிகளாகின்றனர் என்பதும் மிகவும் இலகுவான புரிதல்கள்.

ஐக்கிய நாடுகள் சபைகளின் ஆரம்ப கால ஆவணங்கள், பொருத்தனைகளில் உரிமைகளுக்காக மேற்கொள்ளப்படும் ஆயுத நடவடிக்கைகள் நெறிமுறையானதாக கூறப்பட்டுள்ளன. இந்நிலைப்பாடு தேசிய அரசுகளின் பாதுகாப்பு என்ற அடிப்படையில் மாற்றமடைந்துள்ளது என்பதை அவதானிக்க முடியும்.

அந்த அடிப்படையில் ஐ.நா. சபையின் ஆவணங்களில் காலத்துக்கு காலம் அரசியல் கைதிகள் பற்றிய வரைவிலக்கணங்கள் வழங்கப்பட்ட போதும், அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் அரசியல் கைதிகள் என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட வரன்முறையாகும்.

ஐ.நா.வின் போக்கு இவ்வாறு தேய்வடைந்திருக்கும் போது சர்வதேச மன்னிப்புச் சபையானது ஒருவரின் இனம், மதம் மற்றும் அவர் கொண்டிருக்கும் அரசியல் நிலைப்பாடு காரணமாகவும் அவர் மேற்கொள்கின்ற அஹிம்சை நடவடிக்கைகளினாலும் அவர் கொண்டிருக்கும் மனச்சாட்சி சம்பந்தப்பட்ட நம்பிக்கைகள் காரணமாகவும் கைதியானால் அவர் மனச்சாட்சி அடிப்படையிலான காரணங்களுக்கான கைதியென வகைப்படுத்தியுள்ளது.

9/11 சம்பவத்தையடுத்து அமெரிக்கா உட்பட வல்லரசு நாடுகள் எல்லா விடுதலைச் செயற்பாடுகளையும் பயங்கரவாதம் என்றும் அதில் ஈடுபட்டுள்ளவர்களை பயங்கரவாதிகள் என்றும் பிரகடனப்படுத்தி இன்று நிலை நிறுத்தியுள்ளது. இதனையே எல்லா தேசிய அரசாங்கங்களும் ஏற்றுக் கொண்டு செயற்படுகின்றன. விடுதலைக்கான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளோரும் அவற்றை ஆதரிப்போரும் மனித உரிமை செயற்பாட்டாளர்களும், அவற்றை அரசியல் செயற்பாடுகள் என்றும் அச்செயற்பாடுகளுக்காக கைது செய்யப்படுபவர்கள் அரசியல் கைதிகள் என்றும் வலியுறுத்தி தொடர்ச்சியாகச் செயற்பட்டு வருகின்றனர்.

இலங்கையில் பிரிட்டிஷ் கால னித்துவத்தின் கீழ் அரசியல் கைதிகள் இருந்திருக்கிறார்கள். பின்னர் 1948 ஆம் ஆண்டு வேலை நிறுத்தப் போராட்டம், 1953ஆம் ஆண்டின் ஹர்த்தால், 1960 சதிப்புரட்சி போன்றவற்றின் போது கைது செய்யப்பட்டவர்களும் அரசியல் கைதிகளே என்று அடையாளப்படுத்தப்பட்டனர்.

1971, 1988 ஜே.வி.பி கிளர்ச்சிகளின் போது கைது செய்யப்பட்டவர்களை அரசியல் கைதிகளென்று அக்காலகட்ட அரசாங்கங்கள் ஏற்றுக் கொள்ளாத போதும், இலங்கை மக்களில் பெரும்பாலானோர் அவர்களை அரசியல் கைதிகள் என்று ஏற்றுக் கொண்டு அவர்களை விடுதலை செய்யும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்தனர்.

ஆனால், தமிழ் அரசியல் கைதிகளின் விடயத்தில் பெரும்பான்மை சிங்கள மக்கள் அவர்களை அரசியல் கைதிகள் என்று ஏற்றுக் கொண்டு அவர்களின் விடுதலை தொடர்பான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பை வழங்கக்கூடிய நிலையில் இல்லை. அந்தளவுக்கு தமிழ் மக்களின் போராட்டம் சிங்கள மக்களுக்கு எதிரான போராட்டமாக சித்தரிக்கப்பட்டு நிலை நிறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையானது அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள சிங்கள மொழி பேசும் செயற்பாட்டாளர்களுக்குக் கூட பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்துகிறது.

எனவே தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான செயற்பாடுகளின் ஆரம்பமே பெரும் முட்டுக்கட்டையைச் சந்திக்கிறது. இதனால் தமிழ் அரசியல் கைதிகளின் விடயத்தை மட்டும் தனியாக எடுத்துக் கொண்டு சிங்கள மக்கள் மத்தியில் செல்ல முடியாதுள்ளது.

சட்டவிரோதக் கைதுகள், கொலை

கள், காணாமல் போதல், ஜனநாயகத் துக்கும், மனித உரிமைகளுக்கும் எதி ரான அரசின் செயற்பாடுகள், அடக்குமுறைச் சட்டங்கள், ஊடகங் கள், நீதித்துறை என்பவற்றின் மீதான கெடுபிடிகள் போன்றவற்றுக்கு எதி ரான போராட்ட மக்கள் இயக்கத்தின் நிகழ்ச்சி நிரலில் ஒரு அம்சமாக தமிழ் அரசியல் கைதிகளின் விடயங்களை இணைத்துக்கொண்டு மக்கள் மத்தி யில் செல்வது பற்றி புத்தி ஜீவிகள் கலந்துரையாடுவதையும் அதற்கான செயற்பாடுகளை வகுப்பதையும் அறிய முடிகிறது.

தமிழ் அரசியல் கைதிகளின் விடு தலை என்பது தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வின் ஒரு பகுதியாகவும் பார்க்கப்படலாம். 1971 கிளர்ச்சியின் போது கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களை 1977 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த அர சாங்கம் பொது மன்னிப்பின் அடிப் படையில் விடுதலை செய்தது. அவர் களில் பலர் அரசின் உயர் அதிகாரிகளாகவும், அமைச்சர்களா கவும் இருந்திருக்கிறார்கள், இருக்கி றார்கள். 1988 கிளர்ச்சியின் போது கைது செய்யப்பட்டவர்களும் அதே போன்று 1994ஆம் ஆண்டுக்குப் பிறகு விடுதலை செய்யப்பட்டனர்.

1987ஆம் ஆண்டு இலங்கை-இந்திய சமாதான உடன்படிக்கையை அடுத்து அதுவரையிலும் கைது செய் யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் பொது மன்னிப் பின் அடிப்படையில் விடுதலை செய் யப்பட்டனர்.

அதற்கு பின்னர் முன்னெடுக்கப் பட்ட ஆயுத நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்டவர்களாக கைது செய்யப்பட்டவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்குவது பற்றி கவனம் செலுத்தப்படவில்லை.

யுத்தம் முடிவடைந்து 3 வருடங்கள் கடந்த நிலையில் இன்னும் அரசியல் கைதிகள் இருக்கின்றனர். விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைமைத்து வத்திலிருந்த கருணா பிரதியமைச்ச ராக இருக்கின்றார், பிள்ளையான் முதலமைச்சராக இருந்தார், கே.பி சுதந்திர பிரஜையாக கிளிநொச்சியில் சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார். சிலர் அரச உயர் பதவிகளிலும் இருக்கின்றனர். புனர் வாழ்வளிக்கப்பட்டு விடுதலையான வர்கள் பலர் இருக்கின்றனர். இவை அரசியல் அடிப்படையில் எடுக்கப் பட்ட நடவடிக்கைகள். இந்த அடிப் படையில் சிறைகளிலும் முகாம் களிலும் இருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை அரசியல் தீர்வின் ஒரு பகுதியாக அல்லது தற்போதைய அரசாங்கம் சொல்லி வருகின்ற நல்லிணக்க நடவடிக்கை களில் ஒன்றாக அணுகப்படலாம்.

இவர்களின் விடுதலை தொடர்பாக பலவாக்குறுதிகள் கொடுக்கப்பட்டன. விசேட நீதிமன்றங்கள் அமைப்பது, நீதி விசாரணைகளை துரிதப்படுத்து வது போன்றன அவர்களை பயங்கர வாதிகளாகப் பார்க்கின்ற பார்வை யாகும். ஆகவே அவற்றினால் அர சியல் கைதிகள் விடுதலை பெற முடி யாது. எங்களது நாட்டுச் சட்டங்களின் கீழும் நீதிமன்றங்களின் முன்னிலை யிலும் எத்தனையோ ஆயிரம் நட வடிக்கைகள் எடுக்கப்பட்டுவிட்டன. அவற்றினால் எவ்வித பிரயோசன மும் ஏற்படவில்லை.

எமது அரசியல் அமைப்பின் ஏற் பாட்டின் படி நீதிமன்றமொன்றினால் குற்றத் தீர்ப்பு அளிக்கப்படும் வரை ஒருவர் குற்றமற்றவர் என்ற அநுமா னம் மிக முக்கியமானது. அவசர காலச் சட்ட ஒழுங்குவிதிகள், பயங் கரவாத தடுப்புச்சட்ட ஏற்பாடுகளின் கீழ் கைது செய்யப்படுபவர்களுக்கு எதிரான நீதிமன்ற விசாரணைகள் கடுமையானது என்றாலும் குற்றமற் றவர் என்ற அநுமானம் அவ்வழக்கு களில் கூட நிராகரிக்கப்படவில்லை. கைதிகளுக்கு சாதாரண மனிதர் களைப் போன்று சுதந்திரமாக வெளி யில் நடமாடும் சாதாரண நட வடிக்கையில் ஈடுபடும் சந்தர்ப்பங்கள் மறுக்கப்பட்டு இருந்தாலும் அவர் களின் உணவு, சுகாதாரம், பாதுகாப்பு போன்ற அடிப்படை வசதிகள் மறுக் கப்பட முடியாதவை. அவர்கள் கௌரவமாக நடத்தப்பட வேண்டும். இது 1949ஆம் ஆண்டு ஐ.நா. பொருத்தனைகளிலும் இலங்கையின் சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டம் போன்றவற்றில் உறுதி செய்யப்பட் டுள்ளது. சிறை என்பது அரசின் அட க்குமுறை நிறுவனமாகும். அங்கு பொதுவாக எல்லாக் கைதிகளும் அடக்கப்படுகின்றனர். ஆனால் இல ங்கையில் சிறைகளுக்கு வெளியில் உள்ளது போன்றே சிறைகளுக்கு உள்ளும் தமிழர்கள்- தமிழ் அரசியல் கைதிகளுக்கு பாரபட்சம் காட்டப் படுவதுடன், விசேடமான அடக்கு முறைகளுக்கும் உள்ளாகின்றனர்.

இவ்வருட முற்பகுதியில் வவு னியா சிறையில் நடத்தப்பட்ட கைதி களின் போராட்டமும் அது அடக்கப் பட்டவிதமும் அதனால் கைதிகளுக்கு ஏற்பட்ட பாதிப்பும் பாரபட்சங்களு க்கு சிறந்த சான்றாகும்.

அங்கு தாக்கப்பட்டு இறந்த நிமலரூபன், டில்ருக்ஷன் ஆகியோ ரின் சடலங்களை பெற்றுக் கொண்டு இறுதி நிகழ்வுகளை நடத்துவதற்கு அவர்களின் குடும்பத்தினர் பட்ட பாடுகள் தெரிந்தவையே.


பொதுவாக தமிழ் பெண் கைதி களுக்கு எதிராக சிறை அதிகாரிகளால் புரியப்படுகின்ற துஷ்பிரயோகங்கள், தொந்தரவுகள் பற்றி நிறையவே செய்திகள் பதிவாகியுள்ளன. ஆகவே சிறைக்கைதிகளுக்கு உரித்தான குறைந்தபட்ச உரிமைகள், சலுகைகள் கூட தமிழ் அரசியல் கைதிகளுக்கு மறுக்கப்படுகின்றன என்பது தெட்டத் தெளிவாகின்றது.

அவர்களின் விடுதலை தொடர்பாக நீதிமன்றங்களிலும், வெளியிலும் சர் வதேச ரீதியாகவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதும், இலங்கை அரசாங்கம் அதற்கு வசதியான பதில் களையும், விளக்கங்களையும் கூறி வருகிறதே தவிர இன்னும் பெரும் எண்ணிக்கையானவர்கள் அரசியல் கைதிகளாக சிறைகளில் வாழுகின்ற னர். தேசிய ரீதியாக உத்தியோக பூர்வமான நீதிமன்ற நடவடிக்கைகள், அரசியல் நடவடிக்கைகள்

***(30ஆம் பக்கம் பார்க்க...)***

புதிய சிந்தனைகளையும் புத்தாக்கங்களையும் தழுவுகிறவர்களுக்கே எதிர்காலம் சொந்தமானது. தரமான இதழியல் கோட்பாடுகளை பின்பற்றுபவர்களும் தொழில்நுட்பத்தை சிக்கென பிடித்துக்கொள்பவர்களுமே புதிய யுகத்தில் தப்பிப்பிழைத்து வெற்றிகரமானவர்களாக விளங்கக்கூடியதாக இருக்கும்

# பத்திரிகைத்துறைக்கு நெருக்கடி?



பத்திரிகைத் தொழில்துறை அதன் மூல ஆரம்பத்திலிருந்தே நிலைமைக்குத் தக்கபடி மாறும் பண்புத்திறத்துடன் 400 வருடங்களுக்கும் அதிகமான காலமாக மீளெழுச்சி பெற்று வந்திருக்கிறது. எமது தொழிற்துறை முற்றுமுழுதான ஒரு நெருக்கடியில் இருக்கிறது என்று எண்ணுவது மிகவும் தவறானதாகும். இத்தகைய பிரசாரங்களுக்கு நாமே அடிக்கடி பொறுப்பாக இருக்கிறோம். எமது ஊடக வரைபடத்தை நீங்கள் பார்ப்பீர்களேயானால், அதிகரிக்கும் விநியோகத்துடன் ஆசியாவில் பத்திரிகைத்துறை உலகளாவிய பத்திரிகைத்துறைக்கே ஒரு பிரகாசமான கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்து வந்திருக்கிறது.

இந்தியா போன்ற நாடுகளில் பல்கிப் பெருகும் அச்சு நிலையங்களுடனும் பதிப்புகளுடனும் செய்திப்பத்திரிகைகள் உண்மையில் உத்வேகம் பெற்றிருக்கின்றன. சில சந்தர்ப்பங்களில் அவை ஒப்பந்த அடிப்படையில் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றன. இப்பத்திரிகைகள் விளம்பர பிரசுர வடிவங்களையும் புத்தாக்கமான முறையில் பரீட்சித்துப் பார்க்கின்றன. இவை சில சமயங்களில் ஆசிரியர்களின் விருப்பத்துக்குரியவையாக இருப்பதில்லை. துணிச்சலானவையாகவும் அதிர்ச்சி தருபவையாகவும் இருக்கின்றன. விநியோகத்தையும் விளம்பரத்தின் பருமன்களையும் அதிகரிப்பது செலவுகளைச் சமாளிக்க தற்போது ஆதரவாக உதவுகிறது. ஒரு மந்த நிலைக்கான சில அறிகுறிகளையும் காணக்கூடியதாக இருக்கின்றபோதிலும், இதுவே தற்போதையநிலை.

இலங்கையைப் போலன்றி, விலையைக் குறைந்ததாக வைத்திருப்பது இந்தியாவில் வர்த்தக மாதிரியாக இருக்கிறது. இது குறித்துப் பெருமளவு விவாதம் இருக்கவே செய்கிறது. இலாபத்தைத் தருபவையாக இருக்கின்ற அதேவேளை, செய்திப் பத்திரிகை மாதாந்த இன்டர்நெற் இணைப்புக்கான செலவை விடவும் குறைவானதாகவே இருக்கிறது. ஊடகத் தொழில்துறையில் நாம் நம்பகத்தன்மையை விற்பனை செய்கிறோம். நல்ல உள்ளடக்கத்துடன் நிலையானதாகவும் நம்பகத்தன்மையைக் கொண்டதாகவும் இருக்கின்ற பத்திரிகைகள் சுறுசுறுப்பான ஊடக உலகில் முக்கியத்துவம் வாய்ந்த பாத்திரத்தைத் தொடர்ந்து வகிக்கும்.

என்னைப் பொறுத்தவரை, நல்ல செய்திகள், செய்திகளை எடுத்துச் சொல்வதில் கடைப்பிடிக்கக் கூடிய நல்லமுறைகள், செய்தியின் மனப்பாங்கிற்கு ஏற்றமுறையில் படவிளக்கங்களுடனான எழுத்துமுறை ஆகி

யவை வாசகர்களைக் கவரும். எமது ஆற்றலையும் தகுதியையும் பற்றி அக்கறையில்லாதவர்களாக நாம் ஒரு போதும் இருக்கக்கூடாது. நம்பகத் தன்மையுடைய பத்திரிகைகள் ஒரு மகத்தான மரபின் பாதுகாவலர்கள் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. புகழ்பெற்ற நாடகாசிரியர் ஆர்தர் மில்லர் ஒரு தடவை சொன்னார் “ஒரு தலைசிறந்த பத்திரிகை என்பது ஒரு நாடே பேசுவது போன்றதாகும்” என்று. எமது பார்வையாளர்கள் எம் மிடமிருந்து நேர்மை வாய்ந்த நல் லறிவுடைய தீர்மானங்களையே எதிர் பார்க்கிறார்கள். எவ்வாறெனினும், பொருளாதார நிர்ப்பந்தங்களும் நெறி முறை அடிப்படையின்மையும் சில நாடுகளில் சில பத்திரிகைகளை பண த்துக்காகச் செய்திகளைப் பிரசுரிக்கும் நிலைக்குத் (Paid News) தள்ளிவிடு கின்றன. இலங்கையில் அப்படி யில்லை என்று அறிகிறேன்.

விளம்பரதாரர்கள் ஆசிரிய பீட சுதந்திரத்தைக் கொள்வனவு செய்யக் கூடியவர்களாக இருக்கும்போது சம நிலையான-பக்கச்சார்பில்லாத இதழி யற்துறை மலினப்படுத்தப்பட்டுவிடு கிறது. இவ்வாறு நேரும் போது இந்தப் பொல்லாங்கின் வேரில் நாம் தாக்க வேண்டும். கேடுகெட்ட நடைமுறை யைக் கண்டனம் செய்யவேண்டும்.

அச்சு ஊடகம் சவால்களைத் துடிப் புடன் எதிர்கொண்டு, வெளிக்கிள ம்பும் வாய்ப்புகளைப் பயன்படுத்தும் என்பதில் நான் மிகுந்த நம்பிக்கையு டையவனாக இருக்கிறேன். முன்னெப் போதையும்விட ஒரு செய்தியாளர் தனக்கு ஒப்படைக்கப்பட்ட பணியை செய்துமுடிப்பதற்கு இருக்கக்கூடிய நேரம் மிகவும் குறுகியதாக மாறிவிட் டது. நம்பிக்கையுடனான எதிர்கால மொன்றை நாம் கொண்டிருக்கிறோம். ஆனால், அதைச் சரியான முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

டிஜிற்றல் உலகம் இன்று ஊடக நிறுவனங்கள் புத்தாக்க முயற்சிகளில் ஈடுபடுவதற்கும் வளர்வதற்கும் ஒரு வாய்ப்பை வழங்குகிறது. புதிய சிந்த னைகளையும் புத்தாக்கங்களையும் தழுவுபவர்களுக்கே எதிர்காலம் சொந்தமானதாகும். நல்ல தரமான இதழியல் கோட்பாடுகளைப் பின்பற் றுகிறவர்களும் தொழில்நுட்பத்தை சிக்கெனப்பிடித்துக் கொள்பவர்க ளுமே புதிய யுகத்தில் தப்பிப்பிழை த்து வெற்றிகரமானவர்களாக விளங் கக் கூடியதாக இருக்கும்.

ஒரு செய்தி நிறுவனம் உயிர்த் துடிப்புள்ள சுதந்திரக் குரலைப் பேணிக்காப்பாற்ற வேண்டுமென் றால் அது, இலாபகரமானதாக இருக்க வேண்டும். நிலைத்து நின்று வளரு வதற்கு செய்திப் பத்திரிகைத் தொழிற் துறை மேலதிக வருவாய்களுக்கான மார்க்கங்களையும் நாடவேண்டும். சாத்தியமானளவுக்கு பயனுறுதியுடை யதாகவும் தரத்தை மேலும் மேலும் மேம்படுத்துவதாகவும் இருக்க வேண்டும்.

இதைச் சாதிக்க ரொக்கெட் விஞ் ஞானம் எதுவும் இல்லை. சில மாதங் களுக்கு முன்னர் காலஞ்சென்ற நியூ யோர்க் ரைம்ஸின் முன்னாள் பிரசுரகர்த்தா ஒக்ஸ் சுல்ஸ் பேர்கர் தனது ஊழியர்களுக்கு வழங்கிய சிறு குறிப்பொன்றின் சுருக்கத்தை உங்களுக்கு அறியத்தருகிறேன்.

“முழுநிறைவான நிதிவளத்தைக் கொண்ட நியூயோர்க் ரைம்ஸும் செய்திப் பத்திரிகைத்துறைக்கு நல்ல தேயாகும். நொந்துபோன பத்திரிகை துடிப்பான செய்தி அறிவித்தல் பணி க்கு ஆதரவளிக்கக் கூடியதாக பணத் தைச் செலவு செய்ய இயலாததாகவே இருக்கும்.”

(இலங்கைப் பத்திரிகை நிறுவனத் தின் பத்திரிகையாளர் கழகத்தின் (Srilanka Press Institute’s press club) ஏற்பாட்டில் 2012 நவம்பர் 20 கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட் டலில் இடம்பெற்ற நிகழ்வில் உலகச் செய்திப் பத்திரிகைகள் மற்றும் பிரசு ரகர்த்தாக்கள் சங்கத்தின் தலைவரான ஜாக்கோப் மத்தியூ நிகழ்த்திய “இன்றைய ஊடகங்கள் - சவால் களும் வாய்ப்புகளும்” என்ற தொனிப்பொருளிலான சொற் பொழிவில் இருந்து)

**தமிழ்...**
**(28ஆம் பக்கத்தொடர்ச்சி...)**

என்பதற்கு அப்பால் அவர்களை விடுதலை செய்வதற்கான உத்தி யோகப்பற்றற்ற நடவடிக்கைக ளும் மேற்கொள்ளப்பட வேண் டும். அதாவது கைதிகளின் குடு ம்பத்தினர், பொது மக்கள் அவர் களின் விடுதலைக்கான செயற் பாட்டாளர்கள்(சட்டத்தரணிகள், மனித உரிமைக்கான செயற்பாட் டாளர்கள்) ஆகியோர் இணைந்த அல்லது ஆகியோருக்கிடையில் இணக்கப்பாட்டைக்கொண்ட அரசுக்கு அழுத்தங்கொடுக்கும் வெகுஜன போராட்டங்கள் முன் னெடுக்கப்பட வேண்டும். அவர் களின் விடுதலை தொடர்பான தேசிய ரீதியான ஒத்துழைப்பு நட வடிக்கைகள் அவசியமாகும் (1971, 1988 காலகட்டங்களில் போன்று).

சர்வதேச ரீதியாகவும் ஐ.நா. நிறு வனங்களைச் சுற்றி வருவது மட்டு மன்றி, உத்தியோகப் பற்றற்ற வகையில் ஏனைய நாடுகளில் அரசியல் கைதிகளின் விடுதலைக் காகப் போராடும் அமைப்புகளுட னும், அரசியல் கைதிகளை விடு தலை செய்வதற்காக சர்வதேச ரீதியாக இயங்கும் அமைப்புகளு டனும் தொடர்புகளை ஏற்படுத்தி அவற்றுக்கு ஒத்துழைப்பு வழ ங்குவதும் எமக்கு ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதும் அவசிய மாகும். அதாவது அரசியல் கைதி களை விடுதலை செய்வதற்கான அமைப்புகளின் சர்வதேச வலைப் பின்னலுடன் எம்மை இணைத்துக் கொள்ளவேண்டும்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை ஒரு சட்டத்தரணி யின் வாதத்திறமை,அரச சார்பற்ற நிறுவனமொன்றின் செயற்திட்டம் போன்றவற்றுக்குள் வரையறுக்க முடியாது என்பது தெளிவானா லேயே இப்பிரச்சினைக்கு அரை வாசி தீர்வு கிடைத்த மாதிரியாகும்.

# ஜோசப் எட்வேர்ட் முரே

## (ஏப்ரல் 01, 1919 - நவம்பர் 26, 2012)

உலகின் முதன் முதல் சிறுநீரக உறுப்பு மாற்றுச் சிகிச்சையை வெற்றிகரமாகச் செய்து முடித்து மருத்துவ உலகை வியக்கச் செய்த மருத்துவ நிபுணர் டாக்டர் ஜோசப் ஈ.முரே கடந்தமாதம் 26 ஆம் திகதி அவரது 93ஆவது வயதில் காலமானார்.

தனது மருத்துவச் சாதனைக்காக நோபல் பரிசைப் பெற்ற டாக்டர் முரே, அமெரிக்காவின் பொஸ்ரன் நகரில் உள்ள தனது இல்லத்தில் சில தினங்களுக்கு முன்னர் பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார். பிரிங்ஹாம் அன்ட் வுமன்ஸ் ஆஸ்பத்திரியிலேயே மரணம் சம்பவித்தது.

முதலாவது சிறுநீரக மாற்றுச் சிகிச்சை ஒரேமாதிரியான தோற்றத்தைக் கொண்ட இரட்டையர்களில் செய்யப்பட்டதற்குப் பிறகு உலகம் பூராகவும் ஆயிரக்கணக்கில் பல்வேறு வகையான உறுப்பு மாற்றுச் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுவிட்டன. 1990 ஆம் ஆண்டு மருத்துவத் துறைக்கான நோபல் பரிசை டாக்டர் ஈ.டொன்னால் தோமஸுடன் கூட்டாகவே டாக்டர் முரே பெற்றுக் கொண்டார். எலும்பு மச்சை மாற்றுச் சிகிச்சையை வெற்றிகரமாகச் செய்வதற்கு டாக்டர் தோமஸ் வழங்கிய பங்களிப்புக்காகவே அவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது.

நோபல் பரிசைப் பெற்றுக் கொண்ட பிறகு நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகைக்கு பேட்டியொன்றை அளித்த முரே, "சிறுநீரக உறுப்பு மாற்று சிகிச்சை தற்போது ஒரு நடைமுறையாகி விட்டது. ஆனால், முதலாவது சிறுநீரக மாற்று சிகிச்சை லிண்ட் பேர்க் விமானத்தில் சமுத்திரங்கள் மேலாகப் பறந்ததைப் போன்றதாகும்" என்று குறிப்பிட்டிருந்தார்.

டாக்டர் முரேயின் சாதனை கண்டன விமர்சனங்கள் இல்லாமல் வந்த ஒன்றல்ல. ஆஸ்திகர்களும் மதத்தலைவர்களும் டாக்டர் முரேயின் சிகிச்சையை கடுமையாக ஆட்சேபித்தார்கள்.


"சிலர் நாம் கடவுளின் வேலையைச் செய்வதாக நினைக்கிறார்கள். மனிதப் பிறவிகளில் பரிசோதனைகளை நாம் செய்யக் கூடாது என்று இவர்கள் கூறுகிறார்கள்" என்று 2004 ஆம் ஆண்டு அசோசியேட்டட் பிரஸுக்கு அளித்த பேட்டியொன்றில் டாக்டர் முரே கூறியிருந்தார். ஸ்ரெம் செல் ஆராய்ச்சிக்கு ஆதரவாகவும் இதே பேட்டியில் அவர் கருத்துத் தெரிவித்திருந்தார்.

1950களின் முற்பகுதியில் எந்தவொரு மனித உறுப்பு மாற்று சிகிச்சையும் வெற்றிகரமாக மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. பொஸ்டனின் பீட்டர் பென்ற் பிரிக்ஹாம் ஆஸ்பத்திரியில் (இப்போது பிரிக்ஹாம் அன்ட் வுமன்ஸ் ஆஸ்பத்திரி) டாக்டர் முரேயும் அவரது சகாக்களும் நாய்களில் சிறுநீரக மாற்றுச் சிகிச்சைகளைச் செய்து பார்த்து அதன் மூலம் பெற்ற அனுபவங்கள் வாயிலாக புதியதொரு சத்திரசிகிச்சை நுட்பத்தை வகுத்துக் கொண்டார்கள்.

அவர்களுக்கு 1954 ஆம் ஆண்டில் சிறுநீரக மாற்றுச்சிகிச்சையை மேற்கொள்வதற்கு பொருத்தமான நோயாளிகள் கிடைத்தார்கள். ஒரே மாதிரியான தோற்றத்தைக் கொண்ட இரட்டையர்களான 23 வயதான றிச்சர்ட் ஹெரியும் றொனாள்ட் ஹெரியுமே அவர்கள். றிச்சர்ட் ஹெரியின் சிறுநீரகம் செயலிழந்து இறுதிக் கட்டத்தை அடைந்து கொண்டிருந்தது.

அவர்கள் இருவரினதும் ஒரே மாதிரியான மரபணுப் பின்புலம் சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்கு பெரும் வசதியாக இருந்தது. எந்தப் பிரச்சினையும் ஏற்படவில்லை. வழமையாக உறுப்பு மாற்றுச்சிகிச்சைகளைப் பொறுத்தவரை நோயாளியின் நோய்த்தடுப்புமுறை அந்நிய இழையங்களை நிராகரிப்பது பெரியதொரு பிரச்சினையாக இருக்கிறது.

டொனால்ட்டின் சிறுநீரகம் ஒன்று றிச்சர்ட்டுக்கு பொருத்தப்பட்டது. றிச்சர்ட் அதே ஆஸ்பத்திரியில் சந்தித்த தாதியொருவரை திருமணம் செய்து இரு பிள்ளைகளுக்குத் தந்தையானார். உறுப்பு மாற்றுச் சிகிச்சைக்குப் பிறகு



றிச்சர்ட் 8 வருடங்கள் உயிர் வாழ்ந்தார்.

உறுப்பு மாற்றுச் சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கென்று நடத்தப்படும் Transplant Games போட்டிகளின்போது 2004ஆம் ஆண்டில் டாக்டர் முரே கௌரவிக்கப்பட்டார். தனது இரணைச் சகோதரனுக்கு அரை நூற்றாண்டுக்கு முன்னர் தனது ஒரு சிறுநீரகத்தை தானம் செய்த றொனால்ட் ஹெரியும் இப்போட்டிகளில் பங்கேற்றார்.

ஓய்வு பெற்ற பின்னரும் பிரிக்ஹாம் அன்ட் வுமன்ஸ் ஆஸ்பத்திரியின் பணிகளுக்கு டாக்டர் முரே தனது ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்கி வந்தார் என்று ஆஸ்பத்திரியின் தலைவி டாக்டர் எலிசபெத் நேபல் தெரிவித்தார்.

ஆஸ்பத்திரியின் நூலகத்தில் டாக்டர் முரேயின் நோபல் பரிசு வைக்கப்பட்டிருக்கிறது. "நாம் இந்த பூமிக்கிரகத்தில் வாழ்வதற்காக செலுத்துகின்ற வாடகையே சமூகத்துக்குச் செய்கிற சேவையாகும்". (Service to society is the rent we pay for living on this planet) என்ற டாக்டர் முரேயின் சொந்த வாசகங்கள் பொறிக்கப்பட்ட படச் சட்டத்திற்குள்ளேயே அந்த நோபல் பரிசு வைக்கப்பட்டுள்ளது.

டாக்டர் முரே எப்போதுமே நல்லது நடக்கும் என்ற நம்பிக்கையுணர்வுடன் வாழ்ந்தவர். அவரது மேசையில் எப்போதுமே "இடர்பாடுகள் வாய்ப்புகளே' (Difficulties are opportunities) என்ற மேற்கோள் வாசகம் பொறித்த அட்டை காணப்படும் என்று அவரது மகன் நிக் முரே கூறினார்.

*(அசோசியேட்டட் பிரஸ்)*

# பிரதம நீதியரசருக்கு எதிரான சூனி மிகப்பெரிய சூழ்ச்சித்திட்டத்தின் ஒ




பிரதம நீதியரசரை வீட்டுக்கு விரட்டுவதற்கு ராஜபக்ஷ ஆட் உறுதிபூண்டுவிட்டது. அதற்கு போதுமான இலக்கங்கள்-சிந்தனையற்ற ஆட்கள்-பாராளுமன்றத்திலும் குழுக்களிலும் இருக்கின்றன. அதனால், பிரதம நீதியரசரின் கதி தீர்மானிக்கப்பட்டுவிட்டது என்றே நான் நம்புகிறேன்.

ராஜபக்ஷ ஆட்சி இப்போது வேறு இரு செயற்பாடுகளையும் அழுத்தி முன்னெடுத்துக்கொண்டிருக்கிறது. திவிநெகும சட்ட மூலம், அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தச் சட்டத்தை முற்றாக ஒழித்தல் அல்லது கணிசமான அளவுக்கு அதை மாற்றியமைத்தல் ஆகியவையே அவையாகும். இவற்றில் எதையுமே தனித் தனியாக விளங்கிக் கொள்ள முடியாது. ஆனால், மூன்றையும் ஒன்று சேர்த்துப் பார்க்கும்போது தன் விருப்பம் போல ஆளுகிற ஒரு எதேச்சாதிகார ஆட்சியை நிறுவுவதற்கு ராஜபக்ஷ ஆட்சி கங்கணம் கட்டுகிறது என்பதைப் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும். சிலி நாட்டில் பினோசோ செய்ததைப் போன்று இராணுவச் சதிப்புரட்சி மூலமாகவோ, அல்லது ஜேர்மனியில் நாஜிகள் செய்ததைப் போன்று பாசிச வீதி வன்முறைகள் மூலமாகவோ இல்லாமல், கட்டங்கட்டமாக, படிப்படியாக அரசியல் அணுகுமுறையும் அரசியலமைப்பு ரீதியான அணுகுமுறையும் கலந்த ஒரு வழிவகையினூடாக (அதிகாரம் முழுவதும் ஒரு குழுவுக்கேயுரியதாக) சர்வாதிகார ஆட்சியொன்றை உருவாக்குவதற்கு முயற்சி மேற்கொள்ளப்படுவதாக நான் திடமாக நம்புவதால் இக்கட்டுரையில் அதை வர்ணிப்பதற்கு எதேச்சாதிகாரம் என்றபதத்தை நான் பயன்படுத்துகிறேன். விரிவடைகின்ற ஆபத்தையும் அதை எவ்வாறு தோற்கடிப்பது என்பதையும் ஆராய்வதே எனது நோக்கம்.

ராஜபக்ஷ ஆட்சியின் மும்முனைத் தாக்குதலை ஆராய்வதற்கு முன்னதாக எதேச்சாதிகார கோட்பாட்டுக்கான அரசியல் மற்றும்

# ியவேட்டை
# ஒரு அங்கம்



குமார் டேவிட்

அரசியலமைப்பு அணுகுமுறைப் பாதையை (The political – cum- constitutional road to autocracy) சிறிது விளக்க விரும்புகிறேன். இலங்கை ஒரு இராணுவ சர்வாதிகார நாடு அல்ல. அத்தகையதொரு நாடாக மாறக்கூடிய பாதையிலும் அது இல்லை. இங்குள்ள ஜெனரல்கள் கட்டிவைத்து வளர்க்கப்படும் சடை நாய்க் குட்டிகள், அவை ராஜபக்ஷ ஆட்சியின் தாளத்துக்கு ஆடுகின்றவை. இந்த ஜெனரல்களுக்கு சுயாதீனமான தேசிய ஆதரவுத் தளமொன்று இல்லை. அத்தகைய தள மொன்றை அவர்கள் ஒருபோதுமே- போரின் முடிவை அண்டிய அல்லது அதற்குப் பின்னரான மாதங்களில் கூட- கொண்டிருந்ததில்லை. இலங்கை ஒரு பாசிச நாடு மில்லை. அத்தகையதொரு நாடாக மாறக்கூடிய பாதை யிலும் அது இல்லை. ராஜபக்ஷ ஆட்சி சிங்கள குட்டி முதலாளித்துவ சக்திகளின் ஆதரவை தொடர்ந்தும் தன் வசம் வைத்திருக்கின்ற போதிலும், இளைஞர்கள், முற்போக்குவாதிகள், மதத்தலைவர்கள், வர்த்தகர்கள் வர்க்கங்கள் மற்றும் தொழிலாளர் வர்க்கத்தின் மத்தியில் அதற்கு கணிசமான எதிர்ப்பு இருக்கிறது. இத்தகைய சூழ்நிலை அப்பட்டமான பாசிசத்தை தோற்றுவிக்கும் எந்தப் பரீட்சார்த்தத்தையும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. சர்வதேச சூழ்நிலையும் (என்னதான் குழப்பகரமானதாக இருந்தாலும்) இந்திய ஜனநாயகமும் காக்கி அணிந்த இராணுவ ஆட்சியொன்றையோ அல்லது அப்பட்டமான பாசிச ஆட்சியொன்றையோ இலங்கையில் நிலை பேறானதாக இருக்கவிடப்போவதில்லை.

**சர்வதேச சூழ்நிலையும் இந்திய ஜனநாயகமும் காக்கியணிந்த இராணுவ ஆட்சி ஒன்றையோ அல்லது அப்பட்டமான பாசிச ஆட்சி ஒன்றையோ இலங்கையில் நிலைபேறானதாக இருக்க விடப்போவதில்லை**

சகோதரர்கள் நினைக்கிற பாதையில் அவர்களால் "வெற்றிகரமாகச்" செல்லக்கூடியதாக இருக்குமேயானால், முசோலினியின் "தொழிலதிபர்கள் குழுவின் ஆதிக்கத்திலான" (Corporatist State) அரசுடன் முதலில் அடையாளப்படுத்தப்பட்ட (ஒரு குழுவசமே முழு அதிகாரமும் இருக்கப்போகிறது) ஒரு எதேச்சாதிகார (A Type of totalitarianism) ஆட்சியை நோக்கியே நாம் சென்று கொண்டிருக்கிறோம் என்றாகிறது. பாசிசம் என்ற சொல் இத்தாலிய மூலத்தைக் (Fasco இறுக்கிக் கட்டப்பட்ட பொதி) கொண்டிருந்தாலும், அசல் பாசிசம் நாஜிகளுடனேயே அடையாளப்படுத்தப் படுகிறது. முசோலினி கோட்பாட்டின் மூல வடிவம் சற்று மென்னயம் வாய்ந்தது. ஆர்வமிக்க தேசியவாதம், நெறி கோணிய அரசு கட்டமைப்பு, தவறான சோசலிசம், தொழிற்சங்கங்கள், பொலிஸ், இராணுவம், நீதித்துறை மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றின் கட்டுப்பாடு ஆகியவற்றின் ஒரு கலவையே அதுவாகும். முசோலினி அரசு தொழிலாளர் வர்க்கத்தின், திருச்சபையின், படித்த வர்கள் சமூகங்களின் மற்றும் அறிவியல் அமைப்புகளின் சுதந்திரத்தின் ஒவ்வொரு தடயத்தையும் நிர்மூலம் செய்யவில்லை. ஆனால், நாஜிகள் அவ்வாறு செய்தனர். அதனால் முசோலினி ஆட்சிமுறை Syndicalism என்று அழைக்கப்பட்டது. அதாவது கவர்ச்சி அரசியல் செய்கிற அமைப்புகள், கம்யூனிஸ்ட் விரோத யூனியன்கள், வர்த்தகர்கள், ஊடகம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருந்தது. முக்கியமான அறிவுஜீவிகளும் இதற்கு ஆதரவளித்தார்கள்.

முசோலினி அரசில் பலம்வாய்ந்த போசகர்-வாடிக்கையாளர்அல்லது சார்ந்திருக்கிறவர்கள் (Patron –Client relationships) உறவுமுறைகள் இருந்தன. பெரோலின் ஆர்ஜன்டீனாவிலும் மார்க் கோஸின் பிலிப்பைன்ஸிலும் அரசுகள் இத்தகையவையாகவே இருந்தன. ராஜபக்ஷ ஆட்சியில் போசகர்-சார்ந்திருக்கிற வர்கள் உறவுமுறைக் கட்டமைப்பு பின்வருமாறு விரிகிறது;

ஐந்துக்கும் பத்துக்கும் இடையிலான ஒரே வம்சக் "கடவுளர்களின்" சொர்க்கத்தை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், அமைச்சுகள் மற்றும் கூட்டுத்தாபனங்களில் உயர் பதவிகளில் அமர்த்தப்பட்டவர்கள் என்று சுமார் மூவாயிரம் பேர் தாங்கிக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் உச்சமட்டத்தில் உள்ளவர்கள். தங்களது அதிகாரத்தைச் செயற்படுத்துவதற்கான மார்க்கமாக அமைகின்ற இந்த துடிப்பான ஒரு நடு அடுக்காக இந்த மூவாயிரம் பேரும் இருக்கிறார்கள். இந்த நடு அடுக்கைச் சார்ந்தவர்கள் அடிமட்ட மக்களுக்கு தங்களால் செய்யப்படுகின்ற காரியங்களுக்காக -அதாவது ஏதாவது ஒரு அலுவலுக்கு பொலிஸ் நிலையத்துக்கு தொலைபேசியில் பேசுதல், ஒரு அறிமுகக் கடிதத்தைக் கொடுத்தல், தொழில் வாய்ப்பைத் தேடிக் கொடுத்தல், காணி உறுதியை முறைகேடான வழியில் முடித்துக் கொடுத்தல் போன்ற காரியங்களைச் செய்து கொடுப்பதற்காக -சலுகைகளையும் வாக்குகளையும் கோரி நிற்கிறார்கள். இதுவிடயத்தில் வழிக்கு வராதவர்கள் அச்சுறுத்தப்படுகிறார்கள், தண்டிக்கப்படுகிறார்கள். எதிரணியில் இருப்பவர்கள் கடத்தப்படுகிறார்கள், தாக்குதலுக்குள்ளாகிறார்கள். இத்தகைய அடாவடித்தனங்களைச் செய்கிறவர்களின் மக்கள் ஆதரவுத் தளமாக இருப்பவர்கள் சகலருமே சிங்களவர்களும் குட்டி முதலாளிகளுமாவர். முறைசாரா பொருளாதாரத்துறையில் உள்ள கிராமிய மற்றும் நகர்ப்புற குட்டிமுதலாளிகள்.

ராஜபக்ஷ ஆட்சியைப் பொறுத்தவரை, இந்தியாவையும் உபகண்டத்தின் ஏனைய நாடுகளையும் விட எந்த விடயத்தில் வேறுபட்டு, மார்கோஸ் ஆட்சிக்கு ஒத்ததாக இருக்கிறது? ஒருபோதுமே ஆட்சியதிகாரத்திலிருந்து இறங்குவதில்லை என்று ராஜபக்ஷ ஆட்சி தீர்மானித்திருக்கிறது. இதுதான் இந்த வேறுபாடு. இந்த

ராஜபக்ஷ ஆட்சி தேர்தலொன்றில் தோல்விகாணுமே யானால், அப்பட்டமான முறைகேடுகளும் அதிகாரப் பிரயோகமும் சர்ச்சையைத் தீர்த்து வைக்கும். சகல விலைகளைக் கொடுத்தும் அதிகாரத்தில் தொங்கிக் கொண்டிருப்பதற்கு ராஜபக்ஷ ஆட்சி கொண்டிருக்கும் திடசங்கற்பமே அதன் பிரத்தியேகத் தன்மையாகும். அது இரு காரணங்களுக்காக அதிகாரத்தை கைவிட முன்வரப் போவதில்லை. தலைவர்கள் அதிகாரத்தை இழந்தால், ஆட்கடத்தல்களுக்காகவும் படுமோசமான ஊழல்களுக்காகவும் வழக்குகளைச் சந்திக்க வேண்டி யிருக்கும். இரண்டாவதாக, போர்க்குற்றங்களுக்கான சர்வதேச விசாரணை அச்சுறுத்தல் எப்போதுமே தலைக்குமேலே தொங்கிக் கொண்டிருக்கிறது. அதிகாரத்தைக் கைவிடுவதற்கு அவர்கள் விரும்பமாட்டார்கள் என்பது மாத்திரமல்ல இங்குள்ள பிரச்சினை, அவர்களால் அவ்வாறு செய்ய இயலாது என்பதுவும் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது.

**ஐந்துக்கும் பத்துக்கும் இடையிலான ஒரேவம்சகடவுளர்களின்சொர்க்கத்தை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், அமைச்சுகள், கூட்டுத்தாபனங்களில் உயர் பதவிகளில் அமர்த்தப்பட்டவர்கள் என்று சுமார் 3000 பேர் ஏந்திக்கொண்டிருக்கிறார்கள்**

இதை விளங்கிக் கொண்ட பிறகுதான் பிரதம நீதியரசருக்கு எதிரான சூனிய வேட்டை, திவிநெகும சட்ட மூலத்தை நிறைவேற்றிவிட வேண்டுமென்பதில் காட்டப்படுகின்ற உறுதி, அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பிலான சூழ்ச்சித் திட்டங்களைப் புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். பிரதம நீதியரசருக்கு எதிரான மனக்குறை மிகவும் சுலபமாக விளங்கிக் கொள்ளக்கூடியது. எது எவ்வாறிருந்தாலும், ராஜபக்ஷ ஆட்சிக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இருக்கிறது. நீதிமன்றத்தின் தீர்ப்புகள் எத்தகையவையாக இருந்தாலும், திவிநெகும சட்ட மூலத்தை நிறைவேற்றிவிட முடியும். எனவே, ஏன் இந்த குற்றப் பிரேரணை ஆரவாரம்? பெரிய சூழ்ச்சித்திட்டத்தை நினைத்துப் பார்த்தால், இந்தக் கேள்விக்கான விடையை எந்தக் கஷ்டமும் இல்லாமற் தெரிந்து கொள்ள முடியும். அரசியல் செயன்முறைகளும் அரசியலமைப்பு ரீதியான செயன்முறைகளும் கலந்த மார்க்கத்தினூடாக ராஜபக்ஷ ஆட்சி சர்வாதிகாரத்தை நோக்கி நகர முடியாது. அவ்வாறு நகருவதற்கான ஆபத்து ஒன்று எந்தவொரு கட்டத்திலாவது தோன்றுமேயானால், நீதித்துறை அதை வழியில் தடுக்கும். நீதித்துறையின் சுதந்திரமென்பது சர்வாதிகாரிகளாக வரவிருப்பவர்களுக்கு எப்போதுமே ஆபத்தானதாகும். அவர்களைப் பொறுத்தவரை, அத்தகைய நீதித்துறைச் சுதந்திரம் வீழ்த்தப்பட வேண்டியதாகும். இதுதான் உண்மையான கதை.

பிரதம நீதியரசர் முன்னர் ராஜபக்ஷ ஆட்சிக்கு வசதியான முறையிலேயே சேர்ந்து செயற்பட்டார். அரசியலமைப்புக்கான 18 ஆவது திருத்தத்துக்கு அவர் ஒப்புதல் அளித்தது மன்னிக்க முடியாத காரியம். ஜனாதிபதி பிறகு ஒரு பொறியை வைத்தார். அதாவது, பிரதம நீதியரசரின் கணவருக்கு உயர் பதவியொன்றைக் கொடுத்து, மேல்மட்டத்திலிருந்து வழங்கப்படுகின்ற உத்தரவுகளின் பிரகாரம் சந்தேகத்துக்குரிய கொடுக்கல் - வாங்கலொன்றை நடைமுறைப்படுத்தச் செய்தார். இந்தக் கொடுக்கல் - வாங்கல் இப்போது பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றச்சாட்டுகளில் ஒன்றாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பிரதம நீதியரசரின் சட்டத்தரணிகளினால் அளிக்கப்பட்டிருக்கும் பதிலில் அவருக்கு எதிரான 14 குற்றச்சாட்டுகளும் இட்டுக் கட்டப்பட்டவை என்றும் சட்டப்படி ஆராய முடியாதவை என்றும் கூறப்பட்டிருக்கிறது. எது எவ்வாறிருந்தாலும் அந்தப் பெண்மணியை ஆட்சியாளர்கள் விரட்டியே தீருவார்கள். இதில் எந்தச் சந்தேகமும் இல்லை. அவர்களைப் பொறுத்தவரை சட்டநுட்ப நுணுக்கங்களைப் பற்றிக் கவலையே இல்லை. அதிகாரத்தை தங்களின் ஏகபோகமாக்கிக் கொள்வதே அவர்களின் சூழ்ச்சித்திட்டம்.

அவதானிக்கும்போது முழுச் செயன்முறையுமே அரசியலமைப்பின் பிரகாரம் உகந்தமுறையில் நகர்ந்து கொண்டிருப்பது போன்றே தோன்றும். ஒரு குற்றப்பத்திரம் கையளிக்கப்பட்டிருக்கிறது. 14 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருக்கின்றன. (ஒரு குற்றச்சாட்டு நிரூபணமாகுமானால் கூட, பிரதம நீதியரசரின் பதவி போய்விடும்). பாராளுமன்றத் தெரிவுக்குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்கிறது. அதில் உள்ள 11 உறுப்பினர்களில் 7 பேர் அரசாங்கக் கட்சியைச் சேர்ந்தவர்கள். கங்காரு நீதிமன்றத்தின் தீர்ப்பொன்று வழங்கப்படும். மேல்மட்டத்திலுள்ளவர்களின் அறிவுறுத்தலின் பிரகாரம் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் அத்தீர்ப்பை ஆதரித்து பிரதம நீதியரசரை அகற்றுவார்கள்.

தனது ஆணைக்குட்பட்ட சகல வளங்களையும் பயன்படுத்தி பிரதம நீதியரசர் தன்னை நியாயப்படுத்த வேண்டும். ஆனால், குற்றவாளியாகக் காணப்படுகிறாரோ இல்லையோ, அவர் மருட்சி எதையும் கொண்டிருக்கக் கூடாது. அவர் நறுக்கப்படுவார். நீதித்துறை முழுவதற்கும் பாடமொன்றைப் படிப்பித்து ஏதேச்சாதிகாரத்தின் பாதையில் நீதித்துறை குறுக்கே வந்து இனிமேலும் தடைகளை ஏற்படுத்தாதிருப்பதை உறுதிசெய்ய வேண்டுமென்பதில் ராஜபக்ஷ ஆட்சி முழுமூச்சுடன் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. இதை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில், தவிர்க்க முடியாத பதவி நீக்கத்துக்குப் பிறகு பிரதம நீதியரசர் என்ன செய்வார் என்பதே தற்போது எழுகின்ற கூடுதல் முக்கியத்துவம் வாய்ந்த கேள்வி.

## திவிநெகும சட்டமூலம்

ஒரு கோர்ப்பரேட் அரசுக்கு பொருளாதார அடிப்படை ஒன்று தேவை. 8 மாகாண சபைகளினாலும் வடமாகாண ஆளுநரினாலும் நிருவகிக்கப்படுகின்ற பல்வேறு வறுமை நிவாரணத் திட்டங்களை ஒன்றாக்குவதை நோக்கமாகக் கொண்டதே திவிநெகும சட்ட மூலம். வட மாகாண சபைக்குத் தேர்தலை நடத்துவதற்கு ராஜபக்ஷ ஆட்சி மறுக்கிறது. தமிழர் தலைமையில் ஒரு மாகாண சபை வருவதைக் கூட அனுமதிக்க அந்த ஆட்சி தயாரில்லை என்பதே இதற்குக் காரணமாகும். ஜனாதிபதியின் சகோதரர் பசில் ராஜபக்ஷவின் கீழ் ஒரு திவிநெகும திணைக்களத்தில் வறுமை நிவாரணத் திட்டங்கள் எல்லாம் ஒன்றாக்கப்படும். இதன் மூலமாக அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் உருவாக்கப்பட்ட அதிகாரப் பரவலாக்கலுக்கான பொருளாதார அடிப்படை மறுதலையாக்கப்படும். அத்துடன், ராஜபக்ஷ பொருளாதார சாம்ராச்சியம் வலுப்படுத்தப்படும்.

2013 நிதிச் செலவினங்கள் பற்றிய வரைபடத்தைப் பாருங்கள். திவிநெகும சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் பட்சத்தில் அரச வரவு-செலவுத் திட்ட செலவீனங்களைப் பொறுத்தவரை, ராஜபக்ஷ சகோதரர்களின் நேரடிக்கட்டுப்பாட்டின் கீழ்வரும் பங்கு 64 சதவீதமாக அதிகரிக்கும். மேலதிக நிதியாக (திவிநெகும சட்ட மூலம் நிறைவேறும்போது) மாகாண சபைகளிடமிருந்து பசில் ராஜபக்ஷ வசம் போகப் போகிற தொகை 8000 கோடி ரூபாவாகும். எது கூடுதலான அளவுக்கு அதிர்ச்சியுண்டாக்கப் போகிறது என்று எனக்கு நிச்சயமாகத் தெரியவில்லை-அரச வரவு- செலவுத் திட்டத்தில் ராஜபக்ஷ சகோதரர்கள் தங்களுக்குரியதாக்கப் போகிற பிரமாண்டமான பங்கா? அல்லது கந்தலாக்கப்படப்போகிற மாகாண சபை அதிகாரப் பரவலாக்கமா? முதலாவது குடும்ப அதிகாரத்தையும் கோர்ப்பரேட் அரசின் ஏதேச்சாதிகாரத்தையும் வலுப்படுத்துகிறது; இரண்டாவது கடுமையான மத்தியமயப் படுத்தலாகவும் ஏகபோகமயமாக்கலாகவும் அமைகிறது.

2013ஆம் ஆண்டுக்கான செலவீன மதிப்பீடு 1.18 ரில்லியன் ரூபா. வருவாய் சுமார் 1.05ரில்லியன் அங் கங்கு தொகைகள் கூடிக்குறைவது தவிர்க்க முடியாதது. எனவே, உண்மையான செலவினம் சுமார் 1.6 ரில்லியனாகக் கூடியது சாத்தியம். துண்டுவிழும் தொகை 55 ஆயிரம் கோடி ரூபாவாகும். 2013 இல் நிகர தேசிய உற்பத்தி 7.5 ரில்லியன் என்று மதிப்பிடப்படுகிறது. எனவே, 2013ஆம் ஆண்டுக்கான செலவின, வருவாய், நிதிப் பற்றாக்குறை முறையே நிகர உற்பத்தியின் 21 சதவீதம், 14 சதவீதம், 7 சதவீதம்.

அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தில் உறுதியளிக்கப்பட்ட அதிகாரப் பரவலாக்கலை சின்னாபின்னமாக்குவதென்பது தமிழர்களின் கவலைக்குரியது மாத்திரமல்ல, இந்தியாவினதும், சர்வதேச சமூகத்தினதும் அக்கறைக்குரிய ஒரு விவகாரமாகும். (நீண்டகாலத் தூக்க நிலையில் இருந்து டில்லியை இது தட்டியெழுப்பவும் கூடும்) ஆனால், இக்கட்டுரையின் தொனிப் பொருளைப் பொறுத்தவரை, அரச நிதி மீதான ஒரு குடும்பத்தின் மேலாதிக்கமே முக்கியமானதாகும். ராஜபக்ஷாக்கள் மிகவும் நெருங்கிப் பிணைந்த ஒரு குடும்பத்தினராவர். அவர்களைப் பொறுத்தவரை, வருவாய்களில் பிரமாண்டமான பங்கை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவது ஒரு பாரிய கோர்ப்பரேட் தந்திரோபாயத்துக்கு பொருத்தமானதாக அமையும்.

## 13ஆவது திருத்தத்தை ரத்துச் செய்தல்


அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்துடன் ராஜபக்ஷ ஆட்சி நடத்துகின்ற பூனை-எலி விளையாட்டு அவர்களின் பெரிய சூழ்ச்சித் திட்டத்திற்குள் எங்கே பொருந்துகிறது? அது வித்தியாசமான ஒரு வழியில் பொருந்துகிறது. குட்டி முதலாளி வர்க்கத்தவர்கள் மத்தியிலான தனது ஆதரவு தொடர்ந்து நிலையாக இருக்குமென்று ராஜபக்ஷ தொடர்ந்தும் நம்பிக்கை கொண்டுள்ளார். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் திவிநெகுமவை எதிர்த்தால் மாத்திரம் அச்சட்டமூலத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்த வேண்டிய நிர்ப்பந்தநிலை ராஜபக்ஷ ஆட்சிக்கு உருவாகும். அவ்விருகட்சிகளின் தலைவர்களும் பிரதிநிதிகளும் தங்களது அமைச்சுப் பொறுப்புகளையும் சலுகைகள், வரப்பிரசாதங்களையும் - எப்போதாவது கைவிடுவார்களா?

எது எவ்வாறிருப்பினும், ராஜபக்ஷ மத்தியதர வர்க்கத்தினர், நகர்ப்புற மேட்டுக்குடியினர் மற்றும் முதலாளித்துவ வர்க்கத்தவர்களின் ஆதரவை இழந்துவிட்டார். தொழிலாளர் வர்க்கத்தவர்களின் ஆதரவையும் இழக்கும் நிலையை நோக்கி அவர் சென்று கொண்டிருக்கிறார். 2013-2015 கால கட்டத்தில் பொருளாதாரம் பாரிய நெருக்கடிக்குள் சிக்கும்போது இந்தப் போக்கு மேலும் தீவிரமடையும்.

பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கங்களின் சம்மேளனத்தின் வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக அறிவு ஜீவிகளில் ஒரு பிரிவினரின் ஆதரவை ராஜபக்ஷ ஆட்சி இழந்துவிட்டது. பிரதம நீதியரசருக்கு எதிரான சூனிய வேட்டை சட்டத்துறையினரையும் அரசாங்கத்திடமிருந்து அந்நியப்படுத்திவிட்டது. பெரிய ஏமாற்று மோசடிக்காரர்களைப் பாதுகாப்பதற்காக பங்குச்சந்தை ஆணைக்குழுவை மலினப்படுத்தியமை, நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மீதான தாக்குதல், இறுதியாக பிரதம நீதியரசரை பதவியில் இருந்து விரட்டும் முயற்சி எல்லாமே கொழும்பு சமுதாயத்தின் ஊடாகவும் பரந்தளவில் படித்த மத்தியதர வர்க்கத்தினர் ஊடாகவும் அதிர்ச்சி அலைகளைப் பாய்ச்சியிருக்கிறது. எனவே,

மக்களால் வெறுக்கத்தக்க நோக்கங்களை முன்னெடுப்பதற்காக ராஜபக்ஷ ஆட்சி திசைதிருப்பல் வேலைகளைச் செய்து உண்மையை மூடி மறைக்க வேண்டியிருக்கிறது. இன்னொரு தடவை இனவாதத் துருப்புச் சீட்டை விளையாடுவதை விடவும் சிங்கள மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்கு உறுதியான (நிரூபிக்கப்பட்ட) சிறந்த மார்க்கம் வேறு ஏதாவது இருக்க முடியுமா?

சிங்களவர்கள் மத்தியில் தமிழர்களுக்கும் இந்தியாவுக்கும் எதிரான உணர்வுகளைத் தூண்டி விடுவதற்கும் ஏதேச்சாதிகாரம் மற்றும் கோர்ப்பரேட் அரசுத் திட்டத்தை முன்னெடுக்கின்ற அதேவேளை, பேரினவாதத்தினால் தொலைக்காட்சிகளையும் செய்திப் பத்திரிகைகளையும் நிரப்புவதற்குமான திசைதிருப்பல் நாடகம் தான் 13ஆவது திருத்தம் குறித்த விவகாரம். அரும்புகிற சகல சர்வாதிகாரங்களுக்குமே மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்கு இனவெறியைக் கிளப்பிவிட வேண்டிய தேவை இருக்கிறது. சமுதாயத்தின் மிகவும் பின்தங்கிய பிரிவினர் இனவாத பிரசாரங்களை நம்பி ஏற்றுக்கொள்ள எப்போதுமே தயாராயிருப்பார்கள். இத்தகைய உணர்வுகளைக் கிளப்புவதில் கொழும்பின் புற நகர்ப் பகுதிகளிலும் நாட்டுப் புறங்களிலும் ஆரம்ப வேலைகளைச் செய்வதற்கென்றே ஜாதிக ஹெல உறுமய, மக்கள் ஐக்கிய முன்னணி, விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி மற்றும் சிங்கள தீவிரவாத கட்சிகளும் குழுக்களும் இருக்கின்றன. இதற்குப் பிறகு பெரிய சூழ்ச்சித் திட்டம்- அதாவது நீதித்துறையை அடிமைப் படுத்துவதற்கான தந்திரோபாயம், குடும்பத்தின் கட்டுப்பாட்டின் கீழ் அரச நிதியைக் கொண்டுவருதல், அடுத்த கட்டமாக, தொழிலாளர் வர்க்கத்தையும் மாணவர் ஆர்ப்பாட்டங்களையும் ஒடுக்குதல் போன்ற செயற்பாடுகள் இனவாதப் பிரசார நிழலின் கீழ் மேற்கொள்ளப்படும். இந்த இடத்தில் தான் 13ஆவது திருத்தத்திற்கு எதிரான நாடகம் பெரிய சூழ்ச்சித் திட்டத்துடன் கச்சிதமாகப் பொருந்துகிறது. இந்த நஞ்சுக்கு இரையாக வீழ்ந்துவிடக்கூடிய அளவுக்கு சிங்கள குட்டி முதலாளிகள் வர்க்கம் சூதுவாதறியாததாக இருக்கிறதா? உண்மையில் எனக்குத் தெரியவில்லை.




13ஆவது திருத்தத்தை வைத்துக்கொண்டு ராஜபக்ஷ ஆட்சி நடத்துகின்ற விளையாட்டில் அதற்கு மனச்சஞ்சலம் இருக்கக்கூடிய ஒரே அம்சம் இந்தியாவும் சர்வதேச சமூகமும் வெளிக்காட்டக்கூடிய பிரதிபலிப்புப் பற்றிய நிச்சயமின்மையேயாகும். சோனியா, சிங் நிருவாகம் தமிழர்கள் மிகப்பெரிய அவலங்களைச் சந்தித்த நேரத்தில் துரோகத்தனமாக நடந்துகொண்டதனால், இப்போதும் அவ்வாறே நிலைவரம் இருக்குமென்று ராஜபக்ஷ ஆட்சி நம்பிக்கை கொள்ளக்கூடும்.

சிரிய நிலைவரத்தினால் அமெரிக்காவின் கவனம் திசை திருப்பப்பட்டிருப்பதால் இலங்கை குறித்து தற்போது அக்கறை காட்டக்கூடிய சாத்தியமில்லை என்றும் ராஜபக்ஷ ஆட்சி நம்பக்கூடும். தோன்றக்கூடிய ஆபத்துகளுக்கு முகங்கொடுக்க முடியுமென்ற துணிச்சலில் 13ஆவது திருத்தத்தை அரசாங்கம் குழிதோண்டிப் புதைக்கவும் கூடும். ஆனால், தற்போதைக்கு தெரிவுகளை அது திறந்ததாகவே வைத்திருக்கிறது. மகிந்தவும் ஜி.எல்.பீரிஸும் உலகின் முன்னிலையில் நல்ல பொலிஸ் விளையாட்டைக் காட்டிக் கொண்டிருக்கின்ற அதேவேளை, கோதாபயவும் ஜாதிக ஹெல உறுமயவும் சிங்கள சமூகத்தின் நலன்களுக்காக பாடுபடுபவர்கள் போன்று நடித்து கெட்ட பொலிஸ் விளையாட்டுக் காட்டுகிறார்கள்.

## எதிர்கால சர்வாதிகாரிகளை எவ்வாறு தோற்கடிப்பது?

ராஜபக்ஷ ஆட்சியின் இந்த வெறுக்கத்தக்க திட்டத்தை தோற்கடிக்க முடியும். ஆனால், அதற்கு மூன்று நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். முதலாவது சகல சமூக, இன மற்றும் அரசியல் சக்திகளின் ஐக்கியம், இரண்டாவது பாராளுமன்றத்திலான செயற்பாடுகள் என்ற நிலையில் இருந்து எதிரணியின் செயற்பாடுகள் பாராளுமன்றத்துக்கு வெகுஜன அரசியலாக விஸ்தரிக்கப்பட வேண்டும். மூன்றாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதற்கான பரந்த இயக்கமொன்றை தோற்றுவிக்க வேண்டும்.

முதலாவது நிபந்தனை மிகவும் முக்கியமானது. ஏனென்றால், அது இல்லாமல் ஏனைய இரண்டும் சாத்தியமில்லை. அரசாங்கத்தின் போக்கிற்கு எதிராக ஜனநாயகவாதிகள், முற்போக்குவாதிகள், சிவில் சமூக இயக்கங்கள், மதத் தலைவர்கள் மற்றும் சகல இனக்குழுக்கள் மத்தியிலும் கடுமையான ஆத்திரம் பெருகியிருக்கிறது.

ஆனால், குறுகிய கட்சி மனப்பான்மை, அரசியற் குழுக்களுக்கிடையிலான உட்பூசல் ஆகியவை பிரச்சினையாக இருக்கின்றன. மக்களை பரந்துபட்ட ரீதியில் அணிதிரட்டுவதற்கு பிரதான தடை, அரசியல் கட்சி

களின் போக்குகளிலேயே இருக்கிறது என்பது வெளிப் படையானது. மிகவும் பாரதூரமானது ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இடம் பெறுகின்ற பைத்தியக்காரத்தனமான குத்து வெட்டுகளாகும். சகல விதமான கூட்டுச் செயற் பாடுகளையும் ஐ.தே.க.வின் இந்தப் போக்கு சீர்குலைக் கிறது. உதாரணமாக, கடந்த அக்டோபர் 18 கொழும்பு ஹைட் பார்க்கில் கூட்டுப் பேரணியில் பொன்சேகா மேற்கொண்ட முயற்சிகளை ஐ.தே.க. பகிஷ்கரித்தது.



இதற்கு அக்கட்சிக்குள் நீண்டகாலமாக நிலவுகின்ற பூசலே முற்றிலும் காரணமாகும். இடதுசாரிக் கட்சி களின் குறுகிய குழு மனப்பான்மை இரண்டாவது பிரச்சி னையாகும். ஜனதாவிமுக்தி பெரமுனை (ஜே.வி.பி.), முன்னரங்கச் சோசலிசக் கட்சி, சிறிதுங்க ஜெயசூரிய, விக்ரமபாகு, மாவோ வாதிகள் என்று எல் லோருமே குற்றவாளி கள். கூட்டாகச் சேர்ந்து செயற்பட்டு உயிரைக் காப்பாற்றிக் கொள்வதை விடவும் தனியாகப் பிரி ந்து நின்று புதைகுழிக் குள் போவதற்கு இவர்கள் எல்லோரும் அவசரப்படு கிறார்கள் போலத் தெரிகிறது. ஆட்சியாளர்கள்தொடர் ந்து மேற்கொள்கின்ற சம்மட்டித் தாக்குதல்கள் இந்தக் கிறுக்குப் பேர்வழிகளையும் குறுகிய கட்சி மனப் பான்மையுடையவர்களையும் ஐக்கியப்பட்டுச் செயற் பட நிர்ப்பந்திக்கக் கூடும்.

**அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்துடன் ராஜபக்ஷ ஆட்சி நடத்துகின்ற பூனை-எலி விளை யாட்டின் பின்னணியை சரியாக புரிந்து கொள்வது அவசியம்**

காலம் கடந்துவிடுமுன்னர், இவர்கள் ஒன்றுபடுவார் கள் என்று நம்புகிறேன். இரண்டாவது நிபந்தனை, ராஜபக்ஷ ஆட்சிக்கு எதிராக மேற்கொள்ளப்பட வேண் டிய கூட்டு நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்பட வேண் டும். வெறுமனே தேர்தல் அரசியலுக்குள் மட்டுப்படுத் தப்பட்டுவிடக் கூடாது. ஐரோப்பா பூராகவும் வேலை நிறுத்தங்கள் பரவியிருக்கின்றன.


உலகம் பூராகவும் தொழிலாளர் வர்க்கத்தினர் மத்தி யில் ஏற்படுகின்ற உணர்வலைகளை இது பிரகாசமாக வெளிக்காட்டுகிறது. இலங்கையில் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மே ளனம் முன்னெடுத்த போராட்டம் பொருளாதார நிலைவரம் மேலும் மோச மாகிக்கொண்டு போகும் போது பல துறைகளுக்கு விஸ் தரிக்கும்.

கூட்டுத் தொழிற்சங்க நடவடிக்கை குறித்து ஆராய இறுதியில் ஐ.தே.க.வும், ஜே.வி.பி.யும் முன்வந்திருக்கின் றமை ஒரு நல்ல விடயம். தொழிற்சங்கத்துறை யினர் மத்தியில் ஆழமான ஒத்துழைப்பும் நம்பிக்கையுணர்வும் நிலைவரங்கள் வேண்டி நிற்பதற்கு இணங்க வெளிக் காட்டப்பட வேண்டும். பல்கலைக்கழக ஆசிரியர் சங் கங்களின் சம்மேளனத்தின் வேலை நிறுத்தப் போராட் டம் போன்ற தொழிற்சங்க நடவடிக்கைகள் ஒவ் வொன்றாக மட்டுப்படுத்தப்பட்ட வெற்றிகளையே தரக் கூடியதாக இருக்கும்.

ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கு தொழிலாளர் வர்க்கத்தின் போராட்டங் கள் போதுமானவையல்ல. அறிவுஜீவிகள் பிரிவினரும் முதலாளி வர்க்கமும் இணைய வேண்டும். எல்லோருடைய சுதந்திரமும் ஆபத்துக்குள்ளாகியிருக்கி றது. இத்தருணத்திலே சட்டத்தரணிகள் பெரியதோர் பங்கை வகிக்க முடியும். பிரதம நீதியரசர் வெளியேற்றப்படுவார் என்பதிற் சந்தேகமில்லை. அடுத்து வெகுஜனப் போராட்டத்தில் இணைந்து கொள் வதற்கு பிரதம நீதியரசர் தயாராயிருக்கிறாரா என்பதே இப்போதுள்ள கேள்வியாகும். பாகிஸ்தான் பிரதம நீதி யரசர் போன்று போராடுவதற்கு இவரும் முன்வரு வாரா? இவர் ஒரு துணிச்சலான போராளியா? நீதி பதிகள், சட்டத்தரணிகள், பொறியியலாளர்கள், டாக்டர் கள், தொழிலாளர்கள், வியாபாரிகள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பாடசாலை ஆசிரியர்கள், தாதிகள் மற்றும் மதத்தலைவர்கள் என்று சமூகத்தின் சகல பிரி வினரும் இந்த நேரடி நடவடிக்கையில் பங்கேற்க வேண் டும். ஏனென்றால், சர்வாதிகாரம் என்பது சகலரினதும் கழுத்துக்கு வந்திருக்கும் கத்தியாகும்.

மூன்றாவது நிபந்தனை, ஐக்கியத்தின் அத்திபாரமான குறைந்தபட்ச பொது வேலைத் திட்டமாகும். சர்வா திகாரத்தைத் தூக்கியெறிவது மாத்திரம் போதாது. ஒரு மாற்றுத்திட்டம் முன்வைக்கப்பட வேண்டும். நிறை வேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்து, பாராளுமன்ற ஆட்சி முறையை ஏற்படுத்தி பிறகு வேறுபட்ட சமூக, பொருளாதார செயற்திட்டங்கள் ஒன்றுடன் ஒன்று போட்டியிடக் கூடியதான சுதந்திரமான தேர்தலை நடத்துவது என்பதே சகலரும் இணங்கிக் கொள்ளக் கூடிய குறைந்தபட்ச பொதுவேலைத்திட்ட மாக இருக்கும். இந்த திட்டத்தைப் பற்றி சமகாலம் சஞ்சி கையின் நவம்பர் 1-15 இதழில் நான் விரிவாக எழுதியிருக்கிறேன். அதை திரும்பவும் விளக்கவேண் டிய தேவை இல்லை.

# டாக்டர் ராமதாஸ் கிளப்பிய திராவிடச் சர்ச்சை




தமிழகத்தில் புதிய போராட்டம் தொடங்கியிருக்கிறது. இல்லாத திராவிடத்தைப் பேசி தமிழியத்தை மறந்து விட்டார்கள் என்ற குற்றச்சாட்டை பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் சுமத்தியிருக்கிறார். "திராவிட மாயை" என்று அடிக்கடி டாக்டர் ராமதாஸ் பேசி வருகிறார். இதற்கு பதிலளிக்கும் வகையில் பேசிய தி.மு.க தலைவர் கருணாநிதி கூட, "திராவிடம் வேண்டாம் என்று கூறுபவர்களை தமிழக மக்கள் ஏற்கத் தேவையில்லை" என்று கடுமையாக தி.மு.க. இளைஞரணி கூட்டத்தில் பேசினார். ஆனாலும், திராவிடம் இல்லை என்பதை டாக்டர் ராமதாஸ் தொடர்ந்து பொதுக் கூட்டங்களில் பேசி வருகிறார். இந்நிலையில் இது பற்றி கருத்து அறிய பிரபல எழுத்தாளரும், இலக்கியவாதியும், காந்தி மக்கள் இயக்க நிறுவன தலைவருமான தமிழருவி மணியனை நாம் சந்தித்தோம். இவரது சிறந்த பேச்சாற்றலைப் பார்த்து மறைந்த காமராஜர் "தமிழருவி" என்ற பட்டத்தை வழங்கினார். அதிலிருந்துதான் இவர் தமிழருவி மணியன் என்று அழைக்கப்படுகிறார். இதோ "திராவிடம்" மற்றும் "தமிழியம்" பற்றிய அவரது கருத்துகள்!




முத்தையா காசிநாதன்

இந்தியாவைப் பொறுத்தமட்டில் "இந்திய தேசியம்", "தமிழ்த் தேசியம்" என்பதுதான் பொருத்தமானது. "திராவிட தேசியம்" என்பது வெறும் கனவு. அது ஒரு மாயத்தோற்றம். இல்லாத ஊருக்கு செல்லாத சாலையில் பயணிப்பதுதான் திராவிடம் குறித்து பேசுவது. திராவிடம் என்கிறபோதே அது ஒரு போதும் தமிழகத்தை தனியாக குறிக்காது. ஆந்திரம், கர்நாடகம், கேரளம், தமிழ்நாடு அனைத்தும் சேர்த்து விந்திய மலைக்கு தெற்கே உள்ள பகுதியில் வாழுகின்ற இனம் திராவிட இனம் என்று பேசப்படுகிறது. திராவிட நாடு பெற வேண்டும் என்ற பெரியார் கனவு நான்கு மாநிலங்களையும் சேர்த்து அவர் சிந்தித்ததுதான்! ஆனால் ஒரு கட்டத்தில் எதார்த்தத்தை அவர் உணர்ந்தார். அதன் பிறகு போலியாக நடிக்க அவர் தயாராக இல்லை. நான் "விடுதலை" பத்திரிகையை வாசித்த வரை, ஏன் பெரியார் உயிரோடு இருக்கின்ற வரையில் "தமிழ்நாடு தமிழருக்கே" என்றுதான் "விடுதலை" தலைப்புக்குக் கீழே போட்டார். பிரிவினைவாதம் பேசுபவர்களுக்கு எதிராக சட்டம் பாயும் என்ற



நிலை இருந்து கூட, அது பற்றி கிஞ்சித்தும் கவலைப்படாமல் தன் இறுதி நாள் வரை அவர் "தமிழ்நாடு தமிழருக்கே" என்று விடுதலை பத்திரிகையில் போட்டார். அப்படியொரு தீர்மானத்தை கடற்கரை கூட்டத்தில் பெரியார் நிறைவேற்றவும் செய்தார். திராவிட நாடு திராவிடருக்கே என்று அவர் போடவில்லை.

ஏன் அப்படி தீர்மானம் போட்டேன் என்பதற்கு பெரியார் விளக்கமும் கொடுத்தார். "திராவிட நாடு" என்பது நான்கு மாநிலங்களும் சேர்ந்தது என்பது உண்மைதான். ஆனால் என் கோஷத்திற்கு ஆந்திராவில் குரல் கொடுக்க ஆள் இல்லை. கர்நாடகத்தில் காது கொடுத்து கேட்க ஒருவன் தயாராக இல்லை. மலையாள மண்ணில் இதற்கு என்று ஒருவன் குரல் கொடுக்கவில்லை. நான் மட்டும் வீணாக எதற்கு கத்திக் கொண்டு இருக்க வேண்டும். எனவே, "தமிழ்நாடு தமிழருக்கு வர வேண்டும்" என்கிறேன் என்று தன் சித்தாந்தத்தையே மாற்றிக் கொண்டவர் பெரியார். திராவிட நாடு கொள்கையை கைவிட்டார். ஆனால் "திராவிடர் கழகம்" என்ற பெயரை அவர் மாற்றவில்லை.

“தமிழன், தமிழர் கழகம் என்று சொன்னால் அதில் பார்ப்பனரும் இடம்பெற்று விடுவார்கள். அவர்களை வெளியே நிறுத்தவே என் இயக்கத்திற்கு திராவிடம் என்ற சொல்லை பயன்படுத்துகிறேன்'' என்று விளக்கமும் கொடுத்தார். இதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஏனென்றால் என்னைப் பொறுத்தவரையில், இந்த மண்ணில் பிறந்து, வீட்டிலும் வெளியிலும் இந்த மொழியையே பேசக்கூடியவன் யாராக இருந்தாலும் அவன் தமிழன் என்பதில் எனக்கு இரு வேறு கருத்துகள் கிடையாது. பார்ப்பனர் தமிழரல்லாதார் என்று பெரியார் சொன்னதை நான் ஒரு போதும் அங்கீகரித்தது இல்லை. பார்ப்பனர் தமிழுக்கு செய்த தொண்டை பார்ப்பனர் அல்லாதோர் கூட செய்யவில்லை என்பதுதான் சுத்தமான உண்மை.

“தமிழ் தாத்தா'' என்று நாம் பேசுகின்ற உ.வே. சாமிநாத அய்யர் மட்டும் இல்லாமல் போயிருந்தால், நாம் எந்த சங்க இலக்கியங்களை வைத்துக் கொண்டு பழந்தமிழர் பெருமை பேசுகிறோமோ அந்த இலக்கியமே இன்று இல்லாமல் போயிருக்கும். பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்களும் உ.வே.சாமிநாத அய்யர் இல்லை என்றால் நமக்கு கிடைத்திருக்காது. சிலப்பதிகாரம் முத்தமிழர் காப்பியம் என்கிறீர்கள், மூவேந்தர் காப்பியம் என்கிறீர்கள், குடிமக்கள் காப்பியம் என்கிறீர்கள். ஆனால் உ.வே.சாமிநாத அய்யர் இல்லாமல் போயிருந்தால் அந்த சிலப்பதிகாரமே தமிழனுக்கு தெரியாமல் போயிருக்கும். ஆகவே திராவிடம் என்பதற்காகவும், திராவிடர் கழகத்திற்கும் பார்ப்பனர்களை மையப்படுத்தி பெரியார் கொடுத்த விளக்கம் அறிவுக்கு ஏற்றதாக இல்லை. வைகோவிற்கே நான் ஒரு முறை கடிதம் எழுதுகிற போது, “நீங்கள் எதற்காக மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் என்று பெயர் வைத்திருக்கிறீர்கள்? மறுமலர்ச்சி தமிழர் முன்னேற்றக் கழகம் என்று வையுங்கள். தமிழ் இனத்திற்காக போராடுகிறீர்கள். தமிழ் மொழிக்காக குரல் கொடுக்கிறீர்கள். உங்கள் அளவிற்கு இன்றைய சமூக அமைப்பில் இந்த தமிழ் இனத்திற்காக ஒரு போராளியாக புறப்பட்டவன் யாருமில்லை என்கிற பொழுது ஏன் மறுமலர்ச்சி தமிழர் முன்னேற்றக் கழகம் என்று பெயர் வைக்க கவலைப்படுகிறீர்கள்'' என்று கேள்வி எழுப்பினேன். ஏனென்றால் திராவிடம் என்பது ஒரு மாயத் தோற்றம். அதில் எந்த மனிதனும் தன் திறமையை எவ்வளவு முயன்று வெளிப்படுத்தினாலும் அது

> தமிழகத்தில் தமிழ்த் தேசியம் பேசும் யாராக இருந்தாலும் அவர்களின் ஒரே அடிப்படை இலட்சியம் பிரிவினைவாதம்தான். ஆனால் அதற்காக தங்களை முழுவதும் அர்ப்பணிக்கின்ற தியாக உணர்வு யாருக்கும் கிடையாது. தமிழகத்தில் ஒரு பிரபாகரனை கண்டெடுக்கவும் முடியாது

விழலுக்கு இறைத்த நீராகத்தான் இருக்கும்.

இன்னொன்றும் சொல்கிறேன். இங்கே தமிழ்த் தேசியம் பேசும் யாராக இருந்தாலும், அவர்களின் ஒரே அடிப்படை இலட்சியம் பிரிவினை வாதம்தான். ஆனால் அதற்காக தங்களை முழுவதும் அர்ப்பணிக்கின்ற தியாக உணர்வு எல்லாம் இங்கு யாருக்கும் கிடையாது. தமிழகத்தில் ஒரு பிரபாகரனை நீங்கள் கண்டெடுக்கவும் முடியாது. அவரைப் பற்றி பேசி வீரர்கள் போல் இவர்கள் முகம் காட்டுவார்களே தவிர, ஒருவர் கூட பிரபாகரன் இல்லை. “நான் இந்தியனாக இருக்க விரும்பவில்லை'' என்று இப்போது கூட ஒரு புத்தக விழாவில் புலமைப் பித்தன் பேசியிருக்கிறார். சரி, நீங்கள் இந்தியனாக இருக்க விரும்பவில்லை என்றால் யாராக இருக்க விரும்புகிறீர்கள். நான்கூட தமிழனாகவே இருக்கிறேன். ஆனால் “வாழிய செந்தமிழ், வாழ்க நற்றமிழர், வாழிய பாரத மணித் திருநாடு'' என்ற பாரதியின் பாதையில் பயணிப்பவன். முதலில் என் மொழி. அதுதான் எனக்கு விழி. அதன் பிறகு என் மொழி பேசும் இனம். அதுதான் என் முகம் மட்டுமல்ல முகவரியும்கூட! அதை மறக்கின்ற போது நான் விழி இழந்தவனாகிறேன். முகமிழந்தவனாகிறேன். முகவரி இழந்தவனாகிறேன். இந்த இனத்திற்காகவும், மொழிக்காகவும் எந்த எல்லையில் இருந்து வேண்டுமானாலும் நான் குரல் கொடுப்பேன். ஆனால் இந்தியனாக இருந்தபடிதான்! ஏனென்றால் நாட்டை ஒவ்வொரு துண்டுகளாக, சிறிய சிறிய



## ‘இல்லாத ஊருக்கு செல்லாத பாதை திராவிடம்’

துண்டுகளாக சிதைத்துக் கொண்டே போனால் இதற்கு எல்லையே கிடையாது. ஈழம் என்பது வேறு. அது வேண்டும் என்று இமயத்தின் உச்சியிலே நின்று கூட குரல் கொடுப்பவன் நான். ஆனால் அது வேறு. இது வேறு. அங்கே இருக்கும் தமிழனுக்கு சமத்துவம் இல்லை, சமவாய்ப்பு இல்லை, சம உரிமை இல்லை, தமிழ் மொழிக்கு உரிய அங்கீகாரம் இல்லை, அரசு துறைகளிலோ, கல்வி

களிலோ எந்த விதமான வாய்ப்புகளும் இல்லை. சுதந்திரமும், சமத்துவமும், சகோதரத்துவமும் இல்லாத இடத்தில் இன்னொரு இனத்திற்கு அடிமைப்பட்டு வாழ இயலாத நிலையில், அவர்கள் தனி ஈழம் கண்டாக வேண்டும், அதற்கு உலக நாடுகளின் சபை வழிவகை செய்ய வேண்டும் என்று நான் சொல்கிறேன். ஆனால் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், கேரளாவில் இருக்கின்ற ஒரு மலையாளியை விட, கர்நாடகத்தில் இருக்கக்கூடிய ஒரு கன்னடியனை விட, ஆந்திராவில் இருக்கின்ற ஒரு தெலுங்கனை விட, ஏன் வடக்கே இருக்கின்ற எந்த மாநிலத்திலும் உள்ள ஒருவனை விட ஏதாவது ஒரு உரிமை தமிழனுக்கு இங்கே குறைவாக இருக்கிறதா? கிடையாது. "எல்லோரும் சமம்'' என்ற அடிப்படையில் எனக்கான அடிப்படை உரிமைகளை இந்திய அரசியல் சட்டம் பாதுகாத்துக் கொடுத்திருக்கிறது. எனவே இந்தியனாக இருப்பதுதான் எனக்கே நல்லது.

காவிரிப் பிரச்சினையில் இருந்து, முல்லைப் பெரியாறு வரை அனைத்துப் பிரச்சினைகளையும் எடுத்துக் கொண்டால் தமிழகத்தில் நடப்பது அரசியல். வாக்கு வங்கிகளுக்காகவும், தேர்தலுக்காகவும் இவர்கள் பிரச்சினைகளை விஸ்வரூபம் எடுக்க வைக்கிறார்கள். இது மக்கள் சார்ந்ததும் அல்ல. நிலையான பிரிவினைவாதப்பிரச்சினையும் அல்ல. தமிழ்நாடு தனியாக போகக்கூடாது என்கிறேன். ஏனென்றால் நான் தமிழ்நாட்டு அரசியல் வாதிகளை நாற்பது ஆண்டுகளாக பார்த்துக் கொண்டிருக்கிறேன். எனக்கு இருக்கின்ற அச்சம் பேரளவானது. அப்படி ஒரு வேளை தமிழ்நாட்டை பிரித்து கொடுத்துவிட்டால், ஒரு மாதம் கூட இவர்களால் ஒட்டுமொத்த தமிழகத்தை ஒற்றுமையுடன் கொண்டு செல்ல முடியாது. தமிழன் மண்ணில் தமிழன் ஒன்று கட்சி சார்ந்தவனாகவும், இரண்டாவதாக ஜாதி சார்ந்தவனாகவும்தான் பிரிந்து நிற்கிறான். தனித் தமிழ்நாடு கிடைத்தால் முதலில் வடக்கே வன்னிய மண்டலம் கேட்பார்கள். தெற்கே "பாண்டி மண்டலம்'' கேட்பார்கள். மேற்கே "கொங்கு மண்டலம்'' உருவாகி விடும். "மறவர் மண்டலம்'' வரும். இப்படி "மண்டலங்களாக'' மட்டுமல்ல, பல நூறு பாளையங்களாக (முன்பு பாளையக்காரர்கள் ஆண்டது போல) இந்த தமிழ்நாடு பத்தாண்டுகளில் பாழ்பட்டுப் போகும். இந்த தலைவர்களை நம்பி தமிழ்நாட்டை தனியாக பிரிப்பது என்பது ஒவ்வொரு தமிழனும் தற்

> தேர்தலில் திராவிட கட்சிகளின் தோளில் ஏறி திருவிழா பார்ப்பதற்கு எங்கே வாய்ப்பு வராமல் போய்விடுமோ என்ற ஏக்கத்தில் திராவிடம் பற்றிய தாக்குதலில் இறங்கியிருக்கிறார் டாக்டர் ராமதாஸ்

கொலை செய்வதற்கு ஈடானது. தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய தமிழ்த் தேசியம் அல்லது தமிழியம் பேசுகிற எந்த மனிதனையும் நான் நம்புவதற்கு தயாராக இல்லை. தமிழ்த் தேசியம் பேசுவோர் ஒவ்வொருவருக்கும் ஒரு அந்தரங்க நிகழ்ச்சித்திட்டம் இருக்கிறது. அது தமிழ்நாட்டைப் பிரிப்பது. அப்படியே நடக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அதற்கு யார் தலைவர்? சீமானா, தியாகுவா, சுப வீரபாண்டியனா, இல்லை குளத்தூர் மணியா, இல்லை மணியரசனா? டாக்டர் ராமதாஸா? இவர்கள் அனைவரும் ஒரு கொடியில் ஒரு மேடையில் நின்று ஒன்றாகச் குரல் கொடுத்தவர்களா? கொடுக்கக் கூடியவர்களா? ஆகவே தமிழ்த் தேசியம் என்பது தவறான மனிதர்களைக் கொண்டது. திராவிட தேசியம் என்பது இல்லாத ஒன்று. இந்திய தேசியம் என்பது காக்கப்பட வேண்டியது. ஆனால் அதைக் காப்பதற்கான பார்வையும், விரிந்த மனப்போக்கும் உள்ள தலைமை இன்று இல்லாமல் போனது தான் தவறாகிப் போனது. எனவே நமக்கு ஒட்டுமொத்த இந்தியாவையும் ஒன்றாகச் சிந்தித்து, அனைவரையும் இந்தியர்களாக பாவித்து, எல்லோருக்கும் எல்லாமும் கிடைக்கக்கூடிய அளவிற்கு, சமத்துவ தராசைப் பிடித்து சமமாக நடத்துகிற, ஒரு கூட்டாட்சி அமைப்பு உருவாக்கி உரிமைகளைப் பகிர்ந்து கொடுக்கிற, ஒரு சமூக மாற்றத்தை நிகழ்த்தித் தரும் தலைமை நமக்கு இன்றைய காலத்தின் கட்டாயமாக இருக்கிறது. இதுதான் நடக்கப் போகிறது.

திராவிட முன்னேற்றக்கழகத்தின் தேர்தல் பணிச்செயலாள ரும் தமிழக அரசின்



## 'திராவிடக் குடும்பத்தில் தமிழியமும் அங்கத்தினரே'

முன்னாள் டில்லி சிறப்பு பிரதிநிதியுமான கம்பம் பி.செல்வேந்திரனிடம் கருத்துக்கேட்டபோது அவர் கூறியதாவது;

திராவிடம் வேறு, தமிழியம் வேறு என்று பிரித்துப் பார்ப்பது தமிழ் மொழி வரலாறு தெரியாதவர்கள் செய்யும் வேலை. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு எல்லாம் திராவிட மொழிக் குடும்பம் என்றால் அந்தக் குடும்பத்திற்கு தாய் தமிழ் என்பதை யாரும் மறுக்க முடியாது. கவிஞர் கண்ணதாசனே, "தெற்கில் தடம் போடும் மலையாள


தேனை, தென்னர் பந்தலுக்கே அழகூட்டும் தெலுங்கை, தங்கப்பழம் போலும் கன்னடத்தை, துளுவை எல்லாம் தந்த தமிழ் மொழியே'' என்று சொல்லியிருக்கிறார். திராவிடம் என்பதும், ஆரியம் என்பதும் இரண்டு தனி மனிதர்களை குறிக்கிற சொல் அல்ல. அது இரண்டு கலாசாரத்தைக் குறிக்கும் சொல். தமிழ் மொழி என்பது திராவிட மொழிக் குடும்பம். தமிழர்களின் கலாசாரம் என்பது திராவிடர்களின் கலாசாரம். இதை பிரித்துப் பார்க்கும் வீண் முயற்சியில் யாரும் இறங்கக்கூடாது.

திராவிடக் கலாசாரம்தான் தமிழினக் கலாசாரம். தமிழன் திராவிடன் தான். தமிழினத்தையும், திராவிடத்தையும் பிரித்துப் பேசுவது, மாம்பழத்தையும், அதிலுள்ள மாம்பழச்சாறையும் பிரித்துப் பேசுவது போன்றது என்பதை டாக்டர் ராமதாஸ் போன்றவர்கள் முதலில் அறிந்து கொள்ள வேண்டும். திராவிட இயக்க வரலாறு தெரியாமல் அவர் தவிக்கிறார். முதன் முதலில் பிராமணரல்லாதோருக்கு இழைக்கப்படும் அநீதிகளை தட்டிக் கேட்க, ஒரு அமைப்பை ஆரம்பிக்க வேண்டும் என்பதற்காக ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. முதலில் ''மெட்ராஸ் யுனைட்டெட் லீக்'' என்று தொடங்கி, பிறகு அதை ''பிராமணரல்லாதோர் சங்கம்'' என்று மாற்றலாம் என்று பேச்சு எழுந்தது. அதற்கான ஆலோசனைக் கூட்டத்தில், ''அப்படிப் பெயர் வைத்தால் ஒரு குறிப்பிட்ட ஜாதிக்கு எதிரான அமைப்பு போல் தோற்றமளிக்கும்'' என்று கருதித்தான் ''திராவிடர் சங்கம்'' என்று பெயர் சூட்டப்பட்டது. இந்த திராவிடர் சங்கம் பிறகு நீதிக் கட்சியானது. தந்தை பெரியார் சுயமரியாதை இயக்கம் நடத்திக் கொண்டிருந்தார். ஒரு கட்டத்தில் ''நீதிக் கட்சியும், சுயமரியாதை இயக்கமும்'' இணைந்தது. அதனால் மன்னர் கட்சியாக இருந்த நீதிக் கட்சியை மக்கள் கட்சியாக மாற்ற வேண்டும் என்ற முயற்சியில் சேலத்தில் மாநாடு போடப்பட்டது. அந்த மாநாட்டில் அண்ணா அவர்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து திராவிடர் கழகம் என்று பெயர் மாற்றம் செய்தார். அந்தப் புகழ் பெற்ற தீர்மானம், இன்றளவும் ''அண்ணாதுரை தீர்மானம்'' என்றே கூறப்படுகிறது.

திராவிடத்திற்கு மூன்று பருவங்கள் உண்டு என்று அண்ணா கூறுவார். ஒன்று அரண்மனைப் பருவம். அதாவது ராஜாக்கள், ராவ்பகதூர்கள், மிராசுதாரர்கள் இருந்த நீதிக் கட்சியின் காலம். இரண்டாவது ஆலமரப் பருவம். இது அரண்மனையிலிருந்த அரசியலை ஆலமரத்தடிக்குக் கொண்டு வந்த பெரியார் காலம். மூன்றாவது வெட்டவெளிப்பருவம். இது ஆலமரத்தடியிலிருந்த அரசியலை வெட்டவெளிக்கு, அதாவது பாமரர்களிடம் கொண்டு வந்த அண்ணாவின் காலம். ஆகவே திராவிடம் பற்றிய இந்த வரலாறு எல்லாம் டாக்டர் ராமதாஸ் போன்றவர்களுக்கு புரிந்திருக்க நியாயமில்லை. அதனால்தான் ''மாயை'' ''மாயை'' என்கிறார். ஏனென்றால் ''இரு கலாசாரங்களுக்கு இடையே நடக்கும் போரை'' அவர் ஏதோ தனி நபர் போர் என்று எண்ணிவிட்டார் போலிருக்கிறது.

எங்கள் தலைவர் கலைஞர் கூறியிருப்பது போல் ''திராவிடம்'' என்ற சொல் இந்தியாவின் தேசிய கீதத்திலேயே இடம்பெற்றிருக்கிறது. அதை டாக்டர் ராமதாஸால் மறுக்க முடியுமா? ''திராவிட உத்கல பங்கா'' என்ற அந்த வரிகளை இன்றும் நாமெல்லாம் இசைத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே திராவிடமே ஒரு மாயை என்று கூறும் டாக்டர் ராமதாஸ் போன்றவர்கள் ஏதோ வேறு ஒரு மாயையில் சிக்கிக் கொண்டிருக்கிறார் என்றே சொல்ல வேண்டும். இந்திய குடியரசுத் தலைவரான நீலம் சஞ்சீவரெட்டி ஆந்திர மாநிலம் காளஹஸ்தி தொகுதியில் இருந்து போட்டியிட்டு வெற்றி பெற்று சென்னை மாகாண சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர். அதே போல் இந்திய சுப்ரீம் கோர்ட் நீதிபதியாக இருந்து ஓய்வு பெற்றுள்ள கேரளாவைச் சேர்ந்த வி.ஆர் கிருஷ்ண அய்யர் கூத்துப்பரம்பா தொகுதியில் நின்று வெற்றி பெற்று சென்னை மாகாண சட்டசபையில் எம்.எல்.ஏ.வாக இருந்தவர். இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு ஏற்பட்ட மொழிவாரி மாநிலங்கள் பிரிவினையில் கேரளம், கர்நாடகம், ஆந்திரம், தமிழ்நாடு என்று தனித் தனி மாநிலங்கள் உருவானது. அதனால் திராவிடன் என்பவன் தமிழன், மலையாளி, கன்னடிகா, தெலுங்கர் என்று தனித் தனி அடையாளங்களாக மாறி விட்டான். ஆனால் அனைவருமே திராவிடர்கள்தான் என்பதே ''வேறு'' மாயையில் சிக்கியுள்ளவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

டாக்டர் ராமதாஸ் தமிழியம் என்கிறார். அது எங்கே இருந்து வந்தது? ''திராவிடம்'' என்ற குடும்பத்தில் ''தமிழியம்'' என்பது ஒரு அங்கத்தினர். ஒரு குடும்பத்தைப் பற்றிக் கூறும் போது தாய், தந்தை, பிள்ளைகள் என்று தனித்தனியாக ஒவ்வொருவரையும் பற்றி பேசிக் கொண்டிருக்க மாட்டார்கள். குடும்பத்தைப் பற்றித்தான் பேசுவார்கள். அது போல் திராவிடம் என்று பேசும் போது அதில் ஒரு அங்கமாக இருக்கும் தமிழியம் பற்றி தனியாகப் பேச வேண்டியதில்லை. திராவிடம் பற்றிப் பேசினாலே, தமிழியம் பேசுவதாகத்தான் அர்த்தம். தேர்தலில் திராவிடக் கட்சிகளின் தோளில் ஏறி திருவிழா பார்ப்பதற்கு எங்கே வாய்ப்பு வராமல் போய்விடுமோ என்ற ஆதங்கத்தில், ஏக்கத்தில் திராவிடம் பற்றிய தாக்குதலில் இறங்கியிருக்கிறார் டாக்டர் ராமதாஸ். தேர்தல் கூட்டணி கிடைக்காதோ என்ற குழப்பத்தில் அவர் திராவிடத்தை மாயை என்ற அளவிற்கு விரக்தியடைந்து பேசுகிறார் என்றுதான் அவரது வாதத்தை எடுத்துக் கொள்ள வேண்டும்.



வித்தியாசமான கருத்துகளை கூறியமைக்காக அல்லது ஒரு நடவடிக்கைக்கு எதிர்ப்பு காட்டியமைக்காக ஆட்கள் கைது செய்யப்படுகின்ற சம்பவங்கள் உலகில் மிகப் பெரிய ஜனநாயகம் என்று சொல்லப்படுகின்ற இந்தியாவில் அடிக்கடி இடம்பெற்று வருகின்றன

# இந்தியாவில் சிந்தனைச் சுதந்திரத்தின் நிலை




ஒரு ஜனநாயக நாட்டில் ஒரு பிரஜை எவ்வாறு சுதந்திரமாக இருக்கிறார்? கருத்துவெளிப்பாட்டுச் சுதந்திரத்தின் நிலை என்ன? அரசாங்கத்தின் வடிவம் எவ்வாறானதாக இருந்தாலும் அந்த விலை சற்று அதிகமானதாகவே இருக்கிறதுபோல் தோன்றுகிறது? ஊடகங்களுக்கு இருக்கக்கூடிய சுதந்திரவெளியை கட்டுப்படுத்துவதற்கு கடுமையான சட்டங்களை உலகம் பூராகவும் உள்ள அரசாங்கங்கள் பாதுகாப்பின் பெயரில் கொண்டுவருகின்றன. உலகின் மிகப்பெரிய ஜனநாயகம் என்று சொல்லப்படுகிற இந்தியாவில் வேறுபட்ட கருத்தொன்றை கூறியமைக்கான அல்லது ஒரு நடவடிக்கைக்கு எதிர்ப்பைக் காட்டியமைக்கான ஆட்கள் கைதுசெய்யப்படுகின்ற சம்பவங்கள் அடுத்தடுத்து இடம்பெறுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

அண்மையில், சிவசேனத் தலைவரான பால் தாக்கரேயின் பூதவுடல் தகணம் செய்யப்பட்ட தினத்தில் மகாராஷ்டிரா மாநிலத்தின் பல்கார் நகரில் அனுஷ்டிக்கப்பட்ட கடையடைப்புக்கு எதிராக தங்களது அபிப்பிராயத்தை எழுதியமைக்காக அன்றிரவு இரு இளம் பெண்கள் கைதுசெய்யப்பட்டனர். ஒருவருக்கு வயது 20, மற்றவருக்கு 21. தாக்கரேயின் இறுதிக்கிரிகைகளில் சுமார் 10 இலட்சம் மக்கள் கலந்துகொண்ட அதே வேளை, மும்பையிலும் வேறுசில பகுதிகளிலும் முற்றுமுழுதான கடையடைப்பு அனுஷ்டிக்கப்பட்டது. தனது கருத்தை வெளியிட்ட இந்த இளம் பெண்களில் ஒருவர் பீதி காரணமாகவே கடையடைப்பு இடம்பெற்றது என்று தனது பேஸ்புக் பக்கத்தில் எழுதினார். இந்தக் கருத்தை தான் விரும்புவதாக அவரது நண்பி பதிலளித்தார்.




சிவசேனை தொண்டர்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற ஒரு முறைப்பாட்டை அடுத்து மாநிலப் பொலிஸார் தகவல்தொழில்நுட்ப சட்டத்தின் (66ஏ) பிரிவின் கீழ் இந்தப் பெண்



எம்.பி.வித்தியாதரன்

களை கைதுசெய்தனர். இது இந்தியா பூராகவும் இலட்சக்கணக்கான மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இந்தப் பெண்கள் கைதுசெய்யப்பட்ட அதேவேளை, அவர்களில் ஒருத்தியும் மாமனாருக்குச் சொந்தமான ஆஸ்பத்திரி தாக்குதலுக்கு இலக்கானது. தாக்குதல் நடத்தியவர்களுக்கு எதிராக பொலிஸார் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. ஆனால் மகாராஷ்டிர மாநில பொலிஸாருக்கு எதிராக முழுநாடுமே கிளம்பியதிற்குப் பிறகு அவர்கள் நடவடிக்கை எடுக்க முன்வந்தனர். இந்தப் பெண்கள் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். இறுதியாக பொதுமக்களின் நெருக்குதலை தொடர்ந்து அரசாங்கம் இதில் தலையிட வேண்டியிருந்தது. அவர்கள் இருவரும் விடுவிக்கப்பட்டனர். ஆனால் இந்தியா போன்ற ஒரு உயிர்த்துடிப்பான ஜனநாயக நாட்டிலும் கூட இத்தகைய சம்பவங்கள் திரும்பத் திரும்ப இடம்பெறுவதை காணக்கூடியதாக இருக்கிறது.

இரு இளம் பெண்களும் இன்னமும் கூட அதிர்ச்சியில் இருந்து மீளவில்லை. பேஸ்புக்கில் நண்பி தெரிவித்த கருத்தை விரும்பியதற்காக கைதுசெய்யப்பட்டவரின் பெயர் ரிணு சிறினிவாசன். தனது நண்பி சஹீன் டாடா பொலிஸ்நிலையத்தில் இருந்து வீடு திரும்பியதும் தற்கொலை செய்ய வேண்டும் போன்று உணர்ந்ததாக இவர் கூறுகிறார். பெண் பொலிஸ்காரர்கள் தங்களை பிடித்துவைத்திருக்க பலர் முன்னிலையில் பொலிஸ் நிலையத்திற்குள்ளே தங்களை இரு பெண்கள் தாக்கியதாக ரிணு கூறினார். எவ்வாறெனினும் ஒருவாரகாலமாக ஊடகங்களின் கவனத்தைப்பெற்ற அனுபவத்தினால் பெரும் வேதனையடைந்திருக்கும் சிறினிவாசன் குடும்பம் இந்த விடயத்தை தொடர்ந்தும் முன்னெடுக்க விரும்பவில்லை. சஹீன் டாடா நகரத்தை விட்டே வெளியேறி விட்டான். அவர்கள் மகாராஷ்டிரா மாநிலத்தைவிட்டே வெளியேறிவிட்டதாக கூறப்படுகிறது. சஹீன் அங்கு இல்லாததை அடுத்தது சிறினிவாசன் வீடு மீது கவனம் திரும்பியது. அதனால் இப்பொழுது அந்த வீட்டுக்கு பொலிஸ்காவல் போடப்பட்டிருக்கிறது. ஒரு பத்து நாள் இடைவெளிக்குள் ரிணு பல பேட்டிகளை ஊடகங்களுக்கு கொடுக்க வேண்டியிருந்தது. ஒரு பாடகியாக வரவேண்டும் என்று ஆசை கொண்டிருந்த இந்த பெண்மணி இப்போது ஒரு பெரிய விலையைக் கொடுத்து உலகறிந்த "நட்சத்திர மாகி" இருக்கிறார் பாருங்கள்.

ஒருவர் பல்கலைக்கழக மாணவன் தாக்கல் செய்த பொதுநலன் மனுவையடுத்து இந்த விவகாரம் இப்பொழுது உச்ச நீதிமன்றத்தை அடைந்திருந்தது. நிதிமன்றம் மத்திய அரசாங்கத்திற்கும் மகாராஷ்டிரா, மேற்குவங்காளம், டில்லி, புதுச்சேரி மற்றும் தமிழ்நாடு ஆகிய 5 மாநில அரசுகளுக்கும் அழைப்பாணை கொடுத்திருக்கிறது. அதேவேளை நீதிமன்ற விசாரணையின் போது பிரசன்னமாகி இருக்குமாறு அறிவுறுத்தல் பிறப்பிக்கப்பட்டிருக்கும் மத்திய அரசாங்கம் இனிமேல் இத்தகைய கைதுகளை இன்ஸ்பெக்டர் ஜெனரல் தரத்திலான அதிகாரியொருவர் மாத்திரமே செய்யமுடியும் என்று கைதுகள் சம்பந்தமான அதிகாரங்களை குறித்துரைக்கும் சட்டத்திற்கு திருத்தமொன்றை கொண்டு வந்திருக்கிறது.

66H சட்டப்பிரிவை ரத்துச்செய்யுமாறு கோரும் அந்த மாணவனின் பொதுநலன் மனு கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், பேச்சுச்சுதந்திரம் சம்பந்தப்பட்ட குற்றங்களைப் பொறுத்தவரையில் இந்திய தண்டனைக் கோவை சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுப்பதற்கு முன்னதாக நீதிமன்றத்திடம் பொலிஸார் அனுமதி பெற வேண்டியதை கட்டாயமாக்குமாறும் கேட்டிருக்கிறது.

சில வாரங்களுக்கு முன்னர் தொழிற்சங்கங்களுக்கிடையேயான தகராறுகளைத் தொடர்ந்து தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் கீழ் எயார் இந்தியா விமான சேவையின் இரு அதிகாரிகளை மகாராஷ்டிரா பொலிஸார் கைதுசெய்திருந்தனர். அதே வேளை சென்னை விமான நிலையத்தில் மத்திய நிதியமைச்சர் பி.சிதம்பரத்தை புகைப்படம் எடுத்ததாக குற்றம் சாட்டி இளைஞரொருவரை புதுச்சேரியில் பொலிஸார் கைதுசெய்தார்கள். சில மாதங்களுக்கு முன்னர் மேற்குவங்காளத்தில் முதலமைச்சர் மமதா பானர்ஜியின் திரிநாமுல் காங்கிரஸ் கட்சியினால் செய்யப்பட்ட முறைப்பாடொன்றை அடுத்து பேராசிரியர் ஒருவர் கைதுசெய்யப்பட்டிருந்தார். சில மின்னஞ்சல்களை அனுப்பியதற்காகவே அவர் இவ்வாறு தகவல்தொழில்நுட்பச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டார்.

தந்தையாருடன் சேர்ந்து மதுபான சாலைகள் முன்பாக சிற்றுண்டிகள் விற்பனையில் ஆரம்பித்து இறுதியில் உத்தரப் பிரதேசம் முழுவதற்கு மதுபானம் விநியோகிப்பதில் ஆதிக்கத்தை பெற்று பிரமாண்டமான வர்த்தக சாம்ராச்சியத்தை கட்டி எழுப்பியவர் பொண்டி ஷதா







## மயிர்க்கூச்செறியும் மர்மக்கதை போன்ற ஒரு உண்மை நிகழ்வு

மதிப்பிடப்பட்ட சொத்து 50 ஆயிரம் கோடி ரூபாய்களுக்கும் அதிகம். மாநிலங்கள் பூராகவும் துரிதமாக வளர்ச்சியடைந்து வரும் பல்வேறு தொழிற்துறைகள். அந்தப் செல்வத்துடன் சேர்ந்து வரும் ஆடம்பரமான வாழ்க்கை, எண்ணற்ற ஆடம்பர வாகனங்கள், ஏராளமான தனிப்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள். இவர்கள் எல்லோரையும் மாநில அரசாங்கங்களே வழங்கியிருக்கின்றன. நூற்றுக்கணக்கான ஆயுதப்பாணி மெய்ப்பாது காவலர்கள். ஆனால் எல்லாம் இருந்தும் கூட முடிவு மிகவும் சீக்கிரமாகவே அதுவும் மிகக் கொடூரமான முறையில் வந்துவிட்டது.

இதை வாசிக்கும் போது மயிர்க்கூச்செறியும் மர்மக்கதை போலிருக்கிறது அல்லவா? ஆனால் இது ஒரு இந்திய தொழிலதிபரின் உண்மையான கதை. இந்திய தலைநகர் டில்லிக்கு அண்மையாக உத்தரப்பிரதேச மாநிலத்தில் மதுபானக் கடைகளுக்கு முன்னாள் சிற்றுண்டிகளை விற்பனை செய்ய ஆரம்பித்து இறுதியில் வேவ் குழுமம் (Wave Group) என்ற பிரமாண்டமான வர்த்தக சாம்ராச்சியத்தின் சொந்தக்காரராக வளர்ந்தவர். அவரது பெயர் குர்தீப் சிங் ஷதா. இவரை எல்லோருக்கும் பொண்டி ஷதா என்றால் தான் தெரியும். உத்தரப் பிரதேசம், பஞ்சாப், ஹரியானா, உத்தரகாண்ட் மற்றும் டில்லி ஆகிய மாநிலங்களில் பெரும்பாலான அரசியல் கட்சிகளின் தலைவர்களுடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டவர். மதுபானத் தயாரிப்புத் தொழிலில் இருந்து சில்லறை வர்த்தகம், கட்டிட நிர்மாணம், சீனி ஆலை, கடைத்தொகுதிகள், நவீன திரையரங்குகள், திரைப்படத் தயாரிப்பு, மின்சார உற்பத்தி வரை இவரது தொலைத்துறைகள் இந்த மாநிலங்களையே மையமாகக் கொண்டவை. பொண்டி ஷதா அவரது இளைய சகோதரர் ஹர்தீப் சிங்குடன் ஏற்பட்ட துப்பாக்கிச் சண்டை ஒன்றில் கொல்லப்பட்டார். சொத்துத் தகராறு ஒன்றை அடுத்து சகோதரர்களுக்கிடையில் சண்டை மூண்டது. டில்லியில் உள்ள பண்ணை வீடொன்றில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தின் போது ஹர்தீப் சிங்கும் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவத்தில் உண்மையில் நடந்தது என்ன என்பதைக் கண்டறிய பொலிஸார் கடுமையாக விசாரணைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். யார் யாரைச் சுட்டார்? இரு சகோதரர்களும் கொலை செய்யப்பட்டதால் யார் முதலில் சுட்டார்?என்ற கேள்விகளுக்கு விடை தேடவேண்டியிருக்கிறது. மிகுந்த வறுமை நிலையில் இருந்து பெரும் பணக்காரர்களாக வந்த அனுபவத்தைக் கொண்ட ஷதா குடும்பத்தின் வழித்தோன்றலான பொண்டி மிகவும் நெருக்கமாக வைத்தே சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார். 13 துப்பாக்கி ரவைகள் அவரின் உடலை பதம் பார்த்தன. இதில் அந்தக் கொலையின் கொடூரத் தன்மையை உணர்த்துகிறது.

12 ஏக்கர் பண்ணை வீட்டில் உரிமை தொடர்பான சகோதரர்களுக்கிடையே மூண்ட தகராறே இந்த "என்கவுண்டருக்கு" அடிப்படைக் காரணமாகும். அதே பண்ணை வீட்டில் அவர்கள் மரணத்தையும் தழுவிக் கொண்டனர். இந்த வீடு டில்லியில் பெரும் தனவந்த அரசியல்வாதிகளும் தொழிலதிபர்களும் வாழுகின்ற வசதிமிகுந்த சத்தார்பூர் பகுதியில் அமைந்திருக்கிறது. நீதிமன்ற உத்தரவை அடுத்து ஹர்தீப் சிங்கின் பொறுப்பிலேயே வீடு இருந்தது. அந்த வீட்டின் கட்டுப்பாட்டை தனது கையில் எடுத்துக்கொள்வதற்கு பொண்டி தனது அடியாட்களின் உதவியுடன் முயற்சித்தார். கடந்த மாதம் 24ஆம் திகதி சனிக்கிழமை காலை 11.30 மணியளவில் பொண்டி


நம்தாரி

சத்தார் தனது ஆட்கள் சகிதம் பண்ணை வீட்டுக்கு வந்தார். அந்த வேளை ஹர்தீப் சிங் வர்த்தக அலுவல்கள் காரணமாக அண்மையில் உள்ள நொயிடா நகருக்குச் சென்றுள்ளார். ஆயுதபாணிகள் மூன்று வாயில்களில் ஒன்றின் பூட்டுகளை உடைத்துக்கொண்டு வீட்டுக்குள் அத்துமீறிப் பிரவேசித்தனர். பிறகு அங்கிருந்த வேலையாட்கள் எல்லோரிடமும் இருந்த தொலைபேசிகளை பறித்துக் கொண்டு அவர்களை அடித்து விரட்டினார்கள்.

அடுத்து வீட்டின் அறைகளைப் பூட்டி அங்கிருந்தவர்களை அடைத்து வைத்தார்கள். இதையறிந்த நெருங்கிய சகா ஒருவர் ஹர்தீப் சிங்கிற்கு தகவல் கொடுத்தார். அவருடனே தனது வாகனத்தில் துப்பாக்கியுடன் பண்ணை வீட்டுக்கு விரைந்து வந்தார். வளாகத்திற்குள் பிரவேசித்ததும் பொண்டி சதாவையும் அவர்களது ஆட்களையும் ஹர்தீப் சிங் சுட்டார். இதையடுத்து துப்பாக்கிச் சமர் மூண்டது. இரு தரப்பிலும் சுமார் 30 சுற்றுகள் தீர்க்கப்பட்டன. இதில் இரு சகோதரர்களும் பலியாக, பொண்டியின் முகாமையாளர் ஒருவர் காயமடைந்தார். இதைத் தவிர வேறு இருவரும் கொல்லப்படவோ காயமடையவோ இல்லை என்பது ஆச்சரியமாக இருக்கிறது. ஒரு ஏ.கே.47 ரைபிளும் அதன் வெற்றுத் தோட்டாக்களும் மேலும் இரு துப்பாக்கிகளும் பண்ணை வீட்டில் இருந்து மீட்கப்பட்டன.

பொலிஸார் பல முக்கியமான கேள்விகளுக்கு விடைதேட முடியாமல் தலையை பிய்த்துக்கொண்டிருக்கிறார்கள். முதலில் சுட்டது யார்? சகோதரர்களில் முதலில் கொல்லப்பட்டவர் யார்? மற்றைய சகோதரரை கொன்றவர் யார்? இந்தப் பின்னணியில் இருந்த மற்றவர்கள் யார்? ஹர்தீப் சிங்கின் கொலை தொடர்பாக சுக்தேவ் சிங் நம்தாரி என்பவர் கைது செய்யப்பட்டுள்ள போதிலும் சம்பவம் முழுமையையும் சாட்சியங்களின் அடிப்படையில் தொகுத்து உண்மை நிலைவரத்தை இன்னமும் பொலிஸாரால் புரிந்து கொள்ள முடியவில்லை. உத்தரகாண்ட் மாநிலத்தின் சிறுபான்மையினர் ஆணைக்குழுவின் தலைவராக இருந்தவர் இந்த நம்தாரி. அவர் இப்பொழுது டில்லி பொலிஸாரின் காவலில் இருக்கிறார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் நூற்றுக்கும் அதிகமானவர்களை இதுவரை விசாரித்து இருக்கும் பொலிஸார் நேரடியாக அல்லது மறைமுகமாக சம்பந்தப்பட்டவர்கள் என்ற சந்தேகத்தில் ஏழுபேரைக் கைதுசெய்திருக்கிறார்கள். நம்தாரினாலும் அவரது தனிப்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்களினாலும் அளிக்கப்பட்ட வாக்கு மூலங்களில் முரண்பாடுகள் இருப்பதாக விசாரணையாளர்கள் கண்டுபிடித்ததையடுத்து பொண்டியினதும் அவரது சகோதரினதும் கொலை தொடர்பிலான விசாரணைகளுக்கு மருத்துவச் சட்ட ஆய்வுத்துறை நிபுணர்களின் உதவி பெறப்பட்டுள்ளது.

கடந்த வருடம் நவம்பரில் தந்தையார் குல்வந்த் ஷதா காலமானதற்குப் பிறகு பொண்டியும் ஹர்தீப்பும் சொத்துகளை பிரிப்பது தொடர்பில் சச்சரவுப்பட்டுக்கொண்டேயிருந்தார்கள். அக்டோபர் 5ஆம் திகதி உத்தரப்பிரதேசம் மெறாடாபாத்தில் உள்ள பொண்டியின் வீட்டில் துப்பாக்கிச் சுட்டுச்சம்பவமொன்று இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

பின்னோக்கி ஒரு தடவை பார்ப்போம். யார் இந்த பொண்டி? ஒரு குறுகிய காலத்தில் இவ்வளவு பெருந்தொகைச் சொத்தை அவர் எவ்வாறு குவித்தார்? குர்தீப் (பொண்டி) தனது தந்தையாருடன் சேர்ந்து உள்ளூர் மதுபானச் சாலைகள் முன்பாக சிற்றுண்டிகளை விற்றுவந்தார். மதுபானக் கடையொன்றை நடத்துவதற்கான அனுமதிப்பத்திரத்தை தந்தையாரினால் பெறக்கூடியதாக இருந்தது. இதையடுத்தே இவர்களின் வளர்ச்சி தொடங்கியது. முதலமைச்சர் மாயாவதியின் ஆட்சியில் ஷதா குழுமம் என்ற இவர்களது கம்பனி 2009 ஆம் ஆண்டில் மாநிலம் பூராகவும் மதுபான விநியோகத்திற்கான ஏகபோக உரிமையைப் பெற்றுக்கொண்டது. உத்தரப்பிரதேசத்தில் இந்தக் குழுமம் மதுபான மொத்த விற்பனையையும் சுமார் 4000 ஆயிரம் சில்லறை மதுபான விற்பனை நிலையங்களையும் கட்டுப்பாட்டில் வைத்தது. அரசியல் தொடர்புகளைப் பயன்படுத்தி பொண்டி தனது தொழிற்துறையை ஏனைய பகுதிகளுக்கும் விரிவுபடுத்தினார். 2007ஆம் ஆண்டு 16 கம்பனிகளை அவர் ஆரம்பித்தார். வேவ் இலச்சினையின் கீழ் ஷதா குழுமம் தன்னை வலுப்படுத்திக் கொண்டது. குடும்பத்தின் சொத்து சுமார் ஆயிரம் கோடி அமெரிக்க டொலர்கள் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

பொண்டி பெருவாரியான சொத்துகளையும் வல்லமைமிக்க அரசியல்வாதிகளின் தொடர்புகளையும் கொண்டிருந்தபோதிலும் பகிரங்கத்தில் அவர் பெருமளவுக்கு திரிவதில்லை. மிகவும் அடக்கமான - ஒரு வகையில் மறுமமான வாழ்க்கையையே அவர் நடத்தி வந்தார். குறிப்பாக ஊடகங்களில் இருந்து அவர் தூரவிலகி நின்றார். இரு கைகளிலும் ஊனம் இருந்ததாகக் கூறப்படுகிறது. அவரது இடது கையில் அரைவாசி இல்லை. வலது கையில் மூன்று விரல்கள் இல்லை. இதற்கு இரு காரணங்கள் கூறப்படுகின்றன. ஒன்று அவர் சிறுபராயத்தில் விபத்துக்குள்ளானார் என்பது. மற்றையது அவரது போட்டியாளர்களினால் தாக்கப்பட்டார் என்பது. சொத்துப் பிரிவினை தொடர்பில் வெளிப்படையான குரோதம் இருக்கின்ற போதிலும் ஷதா குடும்பம் இப்போது தாங்கள் ஐக்கியப்பட்டிருப்பதாக ஒரு தோற்றப்பாட்டைக் காட்ட முயன்று கொண்டிருக்கிறது. இன்னொரு சகோதரரான ரஜிந்தர் குழுமத்தின் பதில் தலைவராக்கப்பட்டிருக்கிறார். பொண்டியின் மகனும் குழுமத்தின் தீர்மானங்களை எடுப்பதில் ஒரு பிரதான பங்காளியாக்கப்பட்டிருக்கிறார். இந்தக் குழுமத்தினருக்கிடையேயான "யுத்த நிறுத்தம்" எவ்வளவு தூரம் தொடரும் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ●

மத்திய கிழக்கு விவகாரம்



# பாலஸ்தீனர்களுக்குக் கிடைத்த பெரிய இராஜதந்திர வெற்றி

## சர்வதேச சமூகத்தின் மத்தியில் தனிமைப்பட்டுப் போயிருக்கும் அமெரிக்காவும் இஸ்ரேலும்

பிரியதர்ஷினி

பாலஸ்தீனம் மக்களுக்கு நாடொன்றை ஏற்படுத்தித் தருவதாக வாக்குறுதி வழங்கிய தீர்மானமொன்று ஐக்கிய நாடுகள் சபையில் நிறைவேற்றப்பட்டு சரியாக 65 வருடங்கள் கடந்த நிலையில், கடந்தமாதம் 29ஆம் திகதி ஐ.நா. பொதுச்சபை அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதை நோக்கிய திசையில் தீர்க்கமான அடியொன்றை எடுத்துவைத்தது.

பாலஸ்தீனத்துக்கு ஐ.நா.வில் உறுப்புரிமை இல்லாத அவதானிகள் அந்தஸ்து (Non-member observer state) வழங்குவதற்கான தீர்மானம் பொதுச்சபையில் அதிகப் பெரும்பான்மையான வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. தீர்மானத்துக்கு ஆதரவாக 138 நாடுகளும் எதிராக 9 நாடுகளும் வாக்களித்த அதேவேளை, 41 நாடுகள் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை.

இத்தீர்மானத்தைப் பற்றி அரசியல் ஆய்வாளர்கள் பல்வேறு விமர்சனங்களை முன்வைத்து வருகின்ற போதிலும், அது தங்களுக்கென்று சுதந்திரமான அரசொன்றை நிறுவுவதற்கான பாலஸ்தீனர்களின் போராட்டத்தில் ஒரு மைல்கல் என்பதிற் சந்தேகமில்லை. உலக விவகாரங்களில் பல தசாப்தங்களாக ஒதுக்கி வைக்கப்பட்ட அந்த மக்களுக்கு ஐ.நா.வில் ஒரு இராஜதந்திர வெற்றி கிடைத்திருக்கிறது.

முழுமையான அரசொன்றை அடைவதற்கு பாலஸ்தீனர்கள் இன்னமும் நீண்ட தூரம் செல்லவேண்டியிருக்கிறது என்பது உண்மையே. பாலஸ்தீனர்களின் அரசு உரிமைக்கு ஐ.நா. பாதுகாப்புச் சபையின் அங்கீகாரம் கிடைக்கவேண்டும். அங்கே அவர்கள் அமெரிக்காவின் ரத்து (வீட்டோ) அதிகாரத்தை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

ஆனால், உறுப்புரிமை அல்லாத அவதானிகள் அந்தஸ்து பெற்ற பாலஸ்தீனர்கள் இனிமேல் ஐ.நா. பொதுச்சபை விவாதங்களில் பங்கேற்கக் கூடியதாக இருக்கும். அத்துடன் ஐ.நா.வின் ஏனைய அமைப்புகளில் இணைந்து கொள்வதற்கும் அவர்களுக்கு வாய்ப்புக்கிட்டும். காசா பள்ளத்தாக்கு மீது தடைகளை விதித்து பாலஸ்தீனர்களைத் துன்புறுத்திக் கொண்டிருக்கும் இஸ்ரேலுக்கு பொதுச் சபையில் நிறைவேறிய தீர்மானம் பாரதூரமான தாக்கங்களை ஏற்படுத்தும்.

இத்தீர்மானம் 1967 மத்திய கிழக்கு போருக்கு முன்னதாக இருந்த எல்லைகளை அங்கீகரிப்பதாக அமைகிறது. இது மிகவும் முக்கியமான ஒரு விடயமாகும். பாலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூட் அப்பாஸின் முக்கியமான நிலைப்பாடுகளுக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத்திருப்பதை இந்த வாக்கெடுப்பு உறுதி செய்திருக்கிறது.

மேற்கு ஆற்றங்கரை, காசா பள்ளத்தாக்கு, கிழக்கு ஜெரூசலேம், 1967 போரில் இஸ்ரேலினால் கைப்பற்றப்

பட்ட பகுதிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய பிராந்தியத்தில் பாலஸ்தீன அரசை நிறுவுவதே அப்பாஸின் நிலைப்பாடாகும். 1967 எல்லைகளுக்கு வாபஸ் பெறுவதற்கு இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதான்யாஹூ மறுத்துவருகின்ற போதிலும், இருதரப்புக்கும் இடையே பேச்சுவார்த்தையொன்று மீண்டும் ஆரம்பமாகும் பட்சத்தில் அப்பாஸின் கைகள் பலப்படுவதற்கு ஐ.நா.தீர்மானம் நிச்சயமாக உதவக்கூடியதாக இருக்கும்.

ஐ.நா.வில் பாலஸ்தீனத்தின் தற்போதைய அந்தஸ்து வத்திக்கானுக்கு இருக்கும் அந்தஸ்துக்கு ஒப்பானதாகும். பாலஸ்தீனர்களுக்கு பொதுச் சபையில் வாக்களிக்கும் உரிமை இல்லை. ஆனால், அவர்கள் ஐ.நா.அமைப்புகளில் குறிப்பாக ஹேக்கில் உள்ள சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்தில் (International Criminal Court) இணைந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். இஸ்ரேலினால் இழைக்கப்படும் போர்க்குற்றங்களுக்கு பாலஸ்தீனியர்கள் அந்த நீதி மன்றத்தில் நீதி கோர வாய்ப்பு ஏற்படும். கடந்த செப்டெம்பரில் ஐ.நா. பொதுச் சபையின் வருடாந்த கூட்டத் தொடரில் உரையாற்றிய பாலஸ்தீன அதிகார சபையின் ஜனாதிபதி அப்பாஸ், இஸ்ரேல் போர்க்குற்றங்களை இழைப்பதாகக் குற்றஞ்சாட்டியிருந்தார்.

2008-2009 காலகட்டத்தில் காசாவில் ஹமாஸ் இயக்கத்தவருடனான இஸ்ரேலின் போரின் போது இடம்பெற்ற அத்துமீறல்களுக்காக இஸ்ரேலுக்கு எதிராக வழக்குத் தொடருமாறு 2009 இல் பாலஸ்தீனம் விடுத்த கோரிக்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன்னாள் பிரதம வழக்குத் தொடுநர் பாலஸ்தீனம் ஐ.நா.வில் வெறுமனே அவதானி அந்தஸ்தை மாத்திரமே கொண்டிருப்பதைக் காரணம் காட்டி நிராகரித்திருந்தார்.

ஆனால் சர்வதேச குற்றவியல் நீதிமன்றின் புதிய பிரதம வழக்குத் தொடுநர் ஃபாட்டோ பென்சவுடா பொதுச்சபையில் பாலஸ்தீனத்தின் அந்தஸ்தை மேம்படுத்துவதற்கு எடுக்கப்படும் வாக்கெடுப்பு நிலைவரத்தில் வித்தியாசத்தை ஏற்படுத்தும் என்று கடந்த செப்டெம்பரில் கூறியிருந்தார் என்பது கவனிக்கத்தக்கது.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தனிநபர்களுக்கு எதிராக வழக்குத் தொடுக்கக்கூடிய ஒரு சர்வதேச அரங்காகும். அந்த நீதிமன்றத்தை ஏற்படுத்துவதற்கு வழிவகுத்த ரோம்



உடன்படிக்கையில் 117 நாடுகள் கைச்சாத்திட்டிருக்கின்றன. அமெரிக்காவும் இஸ்ரேலும் இதில் கைச்சாத்திடவில்லை என்றபோதிலும், உடன்படிக்கையின் கீழ் பாலஸ்தீனர்கள் இஸ்ரேலின் போர்க்குற்றங்களுக்கு இந்த நீதிமன்றத்தில் நீதி கோருவதை அது தடுக்காது. ரோம் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு பாலஸ்தீனம் இப்போது விண்ணப்பிக்க முடியும்.

இது இவ்வாறிருக்க ஐ.நா. பொதுச் சபையில் இடம்பெற்ற வாக்கெடுப்பு இஸ்ரேலும் அமெரிக்காவும் சர்வதேச சமூகத்தின் மத்தியில் தனிமைப்பட்டுப் போயிருப்பதை அம்பலப்படுத்தியிருக்கிறது. பாலஸ்தீன விவகாரத்தில் இதுவரை இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவின் நிலைப்பாடுகளுக்கு உறுதியான ஆதரவை வழங்கி வந்த பல ஐரோப்பிய நாடுகள் ஒன்றில் பாலஸ்தீனத்துக்கு ஆதரவாக வாக்களித்திருக்கின்றன அல்லது வாக்கெடுப்பில் பங்கேற்காமல் இருந்திருக்கின்றன. இந்த வாக்கெடுப்பை "ஒரு தலைப்பட்சமானது" என்று இஸ்ரேலும் அமெரிக்காவும் வர்ணித்திருக்கின்றன.

பாலஸ்தீனர்கள் ஐ.நா.வுக்கு போயிருக்கத் தேவையில்லை, பேச்சுவார்த்தைகளில் நாட்டம் காட்டியிருக்கலாம் என்று அமெரிக்காவும் இஸ்ரேலும் கூறுகின்றன.

ஆனால், பாலஸ்தீன மண்ணை ஆக்கிரமிப்பதிலும், இராணுவ தாக்குதல்களை நடத்துவதிலும் பாலஸ்தீன பிராந்தியங்களில் சட்டவிரோத யூத குடியேற்றங்களை மேற்கொள்வதிலும் பாலஸ்தீனர்களுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளை மீறுவதிலும் இஸ்ரேல் தான் ஒரு தலைப்பட்சமாக நடந்துகொள்கிறது.

பாலஸ்தீனர்களுடன் பேச்சுவார்த்தைகளை அக்கறையுடன் ஆரம்பிக்குமாறு இஸ்ரேலை நிர்ப்பந்திக்காமல் இருக்கும் அமெரிக்கா நவீன ரக ஆயுதங்களை வழங்குவதன் மூலமாக பாலஸ்தீன தேசம் மீதான இஸ்ரேலியர்களின் சட்டவிரோத ஆக்கிரமிப்புக்கு வசதி செய்து கொண் டிருக்கிறது.

அதனால், ஐ.நா.வாக்கெடுப்பை "ஒரு தலைப்பட்சமானது" என்று வர்ணிக்கும் அமெரிக்காவினதும் இஸ்ரேலினதும் செயல் ஆதாரமற்றது மாத்திரமல்ல, பாசாங்குத் தனமானதும் கூட. பல தசாப்தங்களாக பாலஸ்தீனர்களே பேச்சுவார்த்தைகளில் நாட்டம் காட்டிவந்திருக்கிறார்கள்.

பாலஸ்தீனர்கள் ஐ.நா.வுக்கு போவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். ஏனென்றால், பேச்சுவார்த்தைகள் முட்டுக்கட்டைநிலை அடைந்தன. அதற்குக் காரணம் இஸ்ரேலின் நெகிழாத நெஞ்சழுத்தமேயாகும். தங்களது எதிர்ப்பையும் மீறி பாலஸ்தீனத்துக்கு ஐ.நா.வில் உறுப்புரிமை இல்லாத அரசு அந்தஸ்து வழங்கப்பட்டதற்காக பாலஸ்தீனர்களை அமெரிக்காவும் இஸ்ரேலும் தண்டிப்பதற்கு முயற்சிக்கக்கூடியது சாத்தியமே. ஆனால், அவ்வாறு செய்வதற்குப் பதிலாக யதார்த்த நிலையை உணர்ந்து கொண்டு "இரு அரசுகள்" என்ற கோட்பாட்டை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு காரியத்தில் இறங்க வேண்டும்.

# பேராசிரியர் கைலாசபதி;
# ஆளுமையும் முழுமையும்

செம்பியன்


பேராசிரியர் கைலாசபதி அவர்களை நாம் ஒவ்வொருவரும் நமது சமூக அக்கறைகளும் துறைசார்ந்த ஈடுபாடும் சார்ந்தே விளங்கிக் கொள்கிறோம். அவரது குடும்பம், உறவு, நண்பர்கள் எனும் வட்டங்களுள் அவரது தனிப்பட்ட இயல்புகளும் தனிமனித உறவுகளும் பற்றிய அறிவும் அனுபவங்களும் அவரைக் கூடுதலாக அடையாளப்படுத்தலாம். எனினும் அவற்றுக்கும் அப்பால், ஆயினும் அவற்றினின்று அறவே சுயாதீனமாகவன்றி, அவரைச் சமூகம் அடையாளங் காணுகிறது. அவ்வாறு அடையாளங் காணுகையில் சமூகத்திற்கு அவர் வழங்கிய

**மறைவின் 30ஆவது ஆண்டு நினைவாக..**

பங்களிப்புகள் முதன்மை பெறுகின்றன. காலங்கடந்து ஆவணப் படுத்தப்பட்டனவும் அவரை அடையாளங்காட்டுகின்றன.

கைலாசபதி என்கிற மனிதரைத் திட்டமிட்டே தாழ்த்திக் காட்டும் முயற்சிகள் பலவும் ஆவண வடிவு பெற்றுள்ளன. அதன் காரணத்தை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். அது வெறுமனே அவரது ஆளுமை மீதான தனிப்பட்ட பொறாமையாலானதல்ல. வெறுமனே அவரது கருத்துகளுடனான முரண்பாடுகளின் விளைவானவையும் அல்ல. அவரைத் தாக்குவது ஒருபுறமிருக்க, அவரது சமூக அடையாளத்தைத் திரிக்கும் முயற்சிகளும் நடக்கின்றன. இவை அவரது பிரகடனப்படுத்தப்பட்ட எதிரிகளின் செயல்களினும் ஆபத்தானவை.

> மனிதரின் சமூகச் செயற்பாடு சிறப்பதற்கு அமைப்புகளினதும் கட்டுப்பாடான நடத்தையினதும் முக்கியத்துவத்தை ஏற்றுக்கொண்டு அந்த பண்பை கடைப்பிடித்து வந்தவர் பேராசிரியர். எப்போதும் ஒடுக்கப்பட்ட மக்களின் தரப்பிலேயே நின்று அவர்களின் போராட்டங்களை ஆதரித்தார்



இவ்வாறான செயல்களின் நோக்கங்களை நாம் அறிய வேண்டின், கைலாசபதி என்ற ஆளையும் அவரது ஆளுமையையும் இணைக்கும் அவரது சமூக நோக்கையும் அதனை வலியுறுத்தி வந்துள்ள பல்வேறு அமைப்புகளையும் அவற்றில் அவரது பங்களிப்பையும் நோக்க வேண்டும். முதலில் முற்போக்கு எழுத்தாளர் சங்கம், பின்பு தேசிய கலை இலக்கியப் பேரவை என்பவற்றுடனான அவரது இறுக்கமான தொடர்பு, கலை இலக்கியத்துறைகள் சார்ந்த அவரது சிந்தனைப் போக்கிற்கு முக்கியமாக பங்களித்தன. அவ்வமைப்புகட்கு அவர் வழங்கிய பெரும் பங்கிற்கு ஈடாக அவற்றின் செல்நெறியும் விருத்தியும் அவரது ஆளுமைக்குப் பங்களித்தன. அவ்வாறே கம்யூனிஸ்ற் கட்சியுடன் அவரது நீண்டகால உறவும் உறுப்புரிமையும் அதிற் பிளவேற் பட்ட காலந்தொட்டு அதன் புரட்சிகரத் தரப்பில் அவரது உறுதியான நிலைப்பாடும் அவரது சிந்தனை விருத்தியின் திசையினின்று பிரிக்க இயலாதவை.

மனிதரது சமூகச் செயற்பாடு சிறப்பதற்கு அமைப்புகளதும் கட்டுப்பாடான நடத்தையினதும் முக்கியத்துவத்தை கைலாசபதி ஏற்று, வற்புறுத்திக், கடைப்பிடித்தும் வந்தவராவார். பத்திரிகை ஆசிரியராகவும் பல்கலைக்கழக ஆசிரியராகவும் வளாகத் தலைவராகவும் அவர் சிறப்பாகச் செயற்படுவதற்கு அந்தந்த அமைப்புகளின் விதிமுறைகட்கமையத்

தனிப்பட்ட விருப்பு - வெறுப்புகட்கு அப்பாற்பட்டுக் கடமைகளை ஆற்றி யமை முக்கியமாக பங்களித்தது.

கட்டுப்பாடான, நேர்மையான சமூக அக்கறை என்பது சிந்தனை யிலும் செயல்முறையிலும் சம அளவு முக்கியமானது. ஒரு அமைப்புச் சார்ந்து செயற்படுகையில், தனிமனித ஆளுமையை அமைப்பில் உள்ள பிறரது ஆளுமைகளுடன் இணைத்து இயங்குவதன் மூலம் வர்க்கக் கட்டுப் பாடான நடத்தை அவசியமானது. அது பேராசிரியர் கைலாசபதி இணை ந்திருந்த ஒவ்வொரு அமைப்பினதும் ஒவ்வொரு தளத்திலுங் காணக்கூடிய தாக இருந்தது. ஒரு மனிதரிடம் இயல்பாக இருக்கக்கூடிய நற்பண்பு கள் சமூகத்துடன் அவர் பேணுகின்ற உறவுகளின் அடிப்படையிலேயே விருத்தி பெறுகின்றன என்பதை அவை நமக்கு உணர்த்துகின்றன.

கைலாசபதி அவர்களது ஆளுமை களைப் பலரும் எடுத்துக்கூறியுள்ள னர். அவற்றில் ஒவ்வொன்றும் எவ் வாறு அமைப்பும் ஆளும் இசைவுடன் செயற்பட்டதால் மேன்மை கண்டன என அறிவோமாயின், நாமும் பயன் பெற்றுப் பிறருக்கும் பயனுடையவ ராவோம்.

அவர் ஆற்றிய பணிகளை எவ் வாறு வளர்த்து முன்னெடுப்பது என் பது அவரையொத்த சிந்தனையுடை யோரின் அக்கறையாகும். சமூகத் திற்கு நற்பணி ஆற்றிய ஒவ்வொரு நல்ல மனிதர் தொடர்பாகவும் நமது அணுகுமுறையாக அது அமைதல் தகும். அதை நாம் கைலாசபதியிடம் இருந்து கற்பது என்று சொல்லலாம். கற்பதில் முக்கியமான பகுதி அறி வது. அடுத்தது அதிற் பெறுமதி வாய்ந்தவற்றை அடையாளங் கண்டு அவற்றை மேலும் விருத்தி செய் வதும் குறைபாடானவற்றைச் செம் மைப்படுத்தி நினைவு செய்வதும் ஆகும்.

பேராசிரியர் கைலாசபதி, மாக்ஸிய லெனினியச் சிந்தனையை ஏற்றவர். பாராளுமன்றப் பாதையை நிராகரித் தவர். கம்யூனிஸ்ற் கட்சியிற் பிளவு பட்ட போது தடுமாற்றமின்றித் தன்னை மாக்ஸிய லெனினியவாதி களுடன் அடையாளப்படுத்தியவர். திரிபுவாதிகளுடன் நின்றவர்கள் அனுபவித்த, அனுபவித்திருக்கக் கூடிய சலுகைகளையும் வாய்ப்பு வச திகளையும் அவர் அறிவார். அவரது தெரிவு, அவரது அரசியற் பார்வை யால் முடிவானது.

தமிழ்த் தேசியம் பற்றிச் செம் பதாகையில் "காலமும் கருத்தும்" என்ற பத்தியில் 1978-1981 காலப் பகுதியில் அவர் "ஜனமகன்" என்ற புனைபெயரில் தொடர்ந்து எழுதி வந்தார். அதில் அவர் தமிழ்த் தேசி யம் பற்றியும் தமிழ் அரசியல் நிலை மைகள் பற்றியும் சாதியத்திற்கெதி ரான வெகுஜனப் போராட்டங்கள் பற்றியும் அன்றைய சூழலில் தமிழ்ச் சமூகத்தில் இருந்த அரசியற் தலைமை பற்றியும் அதன் குறை பாடுகள் பற்றியும் அது செல்ல வேண்டிய திசைவழி பற்றியும் பல நீண்ட பத்திகளை எழுதியிருக்கிறார்.

அவரது எழுத்துகளும் பல்துறை சார் செயற்பாடுகளும் அவரது மார்க் சிய நிலைப்பாட்டைத் தெளிவாக எடுத்துக்காட்டின. அவர் எப்போதும் ஒடுக்கப்பட்ட மக்களின் தரப்பிலேயே நின்று அவர்களது போராட்டங்களை ஆதரித்தார். பரந்த நோக்கில் அவரது சமூகப்பார்வையும், தேசிய, சர்வ தேசிய அரசியல் விவகாரங்கள் பற்றிய பார்வையும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவான மார்க்சியப் பார்வையேயாகும். தமிழ்த் தேசியம் பற்றி அவர் எடுத்திருந்த மிகத் தெளி வான நிலைப்பாட்டை அவரது கட்டு ரைகளின் வழி அறிய முடியும். அவ ரது அரசியற் கட்டுரைகளில் இழை யோடும் அங்கதச்சுவையும் சம்பவங் களை அவர் விபரிக்கும் விதமும் நய மானவையும் வாசகனை வாசிக்கத் தூண்டுபவையுமாம். பத்திரிகைகளில் வராத செய்திகளை அவர் தனது விமர்சனக் கண்ணோட்டத்தில் எழுது வார். அச் செய்திகளே விமர்சனங்க ளாகவும் அமையும். தனது பத்திகளில் "தமிழர் விடுதலைக் கூட்டணியை" "தமிழர் வியாபாரக் கூட்டணி" என்றே அவர் அழைத்தார். "தமிழர் வியாபாரக் கூட்டணி" என அவர் சொல்லும் ஒவ்வொரு தடவையும், அங்கு தமிழர் விடுதலைக் கூட்டணி யின் "அரசியல் வியாபாரம்" பற்றிய விமர்சனம் அடங்கியிருக்கும். தமிழ்த்தேசியத்தின் குறைபாடு களைப் பற்றியும் அது தொடர்ச்சியாக எடுத்துவந்த குறுந்தேசிய நிலைப் பாடுகள் பற்றியும், நீண்டகாலத்தில் அவை ஏற்படுத்தக்கூடிய ஆபத்துகள் பற்றியும் கைலாசபதி தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்.

தமிழ்த் தேசியவாதத்தின் தோற்று வாயும் தமிழ் அடையாளத்துடனான அரசியற் தலைமைகளின் வரலாறும் படித்த, சொத்துடைமைக்கார வர்க்கத் தலைமையும் அதனோடு நெருக்க மாகப் பிணைந்த சாதிய, நிலவுடை மைக் கண்ணோட்டங்களையுமே கொண்டிருக்கின்றன என்பதை அவர் தனது கட்டுரைகளில் விடாது வலி யுறுத்தி வந்தார். தமிழ்த் தேசியம் சிங்கள மக்களை எதிரிகளாக அடை யாளங் காட்டிய ஒரு காலத்தில், அதை மறுக்கும் முறையில் சிங்கள மக்களை நண்பர்களாக மதித்துச் சிங் கள எழுத்தாளர்களுடனும் கலைஞர் களுடனும் இணைந்து கைலாசபதி பணியாற்றினார்.

"இலங்கையில் இனத்துவமும் சமூக மாற்றமும்" என்ற நூலில் கைலாசபதி சொன்ன வரிகள் தமிழ்த் தேசியம் குறித்த கைலாசபதியின் நிலைப்பாட்டை விளக்கப் போது மானவை.

"தமிழ்த் தேசியம் இன்று முக்கிய மான திருப்புமுனையில் உள்ளது. தனக்கு முன்னுள்ள இரு வழிகளில் ஏதாவது ஒன்றை அது தேர்ந்தெடுக்க வேண்டியுள்ளது. ஒன்று தனிமைப் பாடு மற்றும் மேலாதிக்கம் ஆகிய வற்றைச் சார்தல். மற்றது பெரும்பான் மைச் சமூகத்துக்கும் தனக்கும் பொதுப்படையான அம்சங்களை இனங்கண்டு சனநாயக முறையிலான வாழ்க்கை மலர உழைத்தல். இவற் றில் எதைத் தேர்வது என்பது வெளிப் படையானது. ஆனால் இதற்கு ஒடுங் கிய இன நலன்களைத் துறந்துவிட்டு மனிதனை மனிதன் சுரண்டாத சமூக

ஒழுங்கை நோக்கிச் செல்லும் தேசியப் போராட்டத்தை இரு இனங்களும் இணைந்து மேற்கொள்ளல் தவிர்க்க வியலாததாகும்.''

இத் தருணத்திற் பேராசிரியர் கைலாசபதி என்ற ஆளுமையைப் பற்றித் தொகுத்துக் கூறுவதெனின், ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பில் ஆழத் தடம் பதித்தோருள் அவர் முக்கியமானவர் என்பதும் இலங்கையில் இருபதாம் நூற்றாண்டை உருவாக்கிய பல்துறை சார்ந்த அறிஞர்களில் அவர் தலைசிறந்த மாக்சிச அறிஞராகத் திகழ்ந்தார் என்பதும் கூற உகந்தன. பொதுவாகத் தமிழ் இலக்கியத் துறையிலும் குறிப்பாக ஈழத்து இலக்கியப் பரப்பிலும் கல்வி, சமூக, அரசியல் தளங்களிலும் அவர் வழங்கிய சமூகப் பங்களிப்புகள் காலத்தால் அழியாச் செல்வங்களாகும். நாற்பத்தியொன்பது ஆண்டுகள் (1933-1982) மட்டுமே வாழ்ந்த அவர் தனக்குக் கைவரப் பெற்ற ஆற்றல்களையும் ஆளுமையையும் மாக்சிச தத்துவார்த்த உலக நோக்கின் ஊடாக முழுமையாக வளப்படுத்தி முன்னெடுத்ததுடன், தன்னலமின்றிப் பிறரையும் பலவாறு ஊக்குவித்தார். ●

*கடைசிப் பக்கம்....*
*(51ஆம் பக்கம் பார்க்க)*

ஆங்கில மொழிபெயர்ப்பாக நல்ல முறையில் வெளிக்கொணரப்பட்டிருப்பதைக் காணலாம். இதில் உள்ள ஈழத்து எழுத்தாளர்களின் ஆக்கங்களை சுரேஷ் கனகராஜ்,ஏ.ஜே.கனகரத்தினா, செல்வா கனகநாயகம், எஸ்.பத்மநாதன், லக்ஷ்மி ஹோர்ம்ஸ்றோம், எஸ்.இராஜசிங்கம், எஸ். சிவசேகரம், எஸ்.திருநாவுக்கரசு ஆகியோர் மொழிபெயர்த்துள்ளனர். இதில், லக்ஷ்மி ஹோர்ம்ஸ்றோமைத் தவிர ஏனையோர் ஈழத்தவர்களாவர்.

மொழிபெயர்ப்பென்பது ஒரு தனிக்கலை என்று நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டேன். அதுவும் புனைவு இலக்கியம் சம்பந்தப்பட்டவற்றை மொழிபெயர்ப்பதென்பது இன்னும் தனியானது. அத்தகைய ஆக்கங்களின் உயிர்ப்பை தம்மொழிபெயர்ப்பூடாக கொண்டுவரக்கூடியவர்களாலேயே இது சாத்தியப்படலாம். அதனால் தான் ஆக்க இலக்கிய மொழிபெயர்ப்புகளை TRANS-CREATIONS என்று சொல்வதுண்டு. இத்தகையவற்றுக்கு உதாரணமாக சுந்தர ராமசாமியால் மொழிபெயர்க்கப்பட்ட தகழி சிவசங்கரம்பிள்ளையின் செம்மீனைக் காட்டலாம். இது மலையாள மூலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது. ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்கு கொண்டுவரப்பட்ட சிறந்த மொழிபெயர்ப்புக்கு உதாரணமாக என்.கே.மகாலிங்கத்தால் "சிதைவுகள்' என்ற தலைப்பில் மொழிபெயர்க்கப்பட்ட சினுவா ஆச்சுப்பேயின் THINGS FALL APART என்ற நாவலைக் காட்டலாம். ஒரு படைப்பை ஒரு மொழியில் இருந்து இன்னொரு மொழிக்கு கொண்டுவருவதற்கு பல காரணங்கள் உண்டு. அதில் முக்கிய காரணங்களில் ஒன்றாக இருப்பது ஒரு படைப்புஎழுதப்பட்ட மொழியில் கலைத்துவ உச்சமாகக் கொள்ளப்படும் பட்சத்தில் ஏனைய மொழியினரும் அக்கலை வெளிப்பாட்டைத் தரிசிக்க வேண்டும் என்ற ஆவலில் அது மொழிபெயர்க்கப்படலாம். இது வெறும் மொழிபெயர்ப்பல்ல. இது மீள் உருவாக்கம் (TRANS CREATIONS) என்று அதனால் தான் சொல்லப்படுகிறது.

அண்மையில் தமிழில் இருந்து வேற்று மொழிகளுக்கு ஆக்கங்கள் மொழிபெயர்க்கப்பட்டு வரும் செய்திகளை நாம் கேட்கக்கூடியதாக இருக்கிறது. இம்மொழிபெயர்ப்புகள் உண்மையில் தகுந்த ஆக்கங்களைத் தெரிவு செய்து செய்யப்படவேண்டியதொன்றாகும். அநேகருக்கு தமது ஆக்கங்கள் பிற மொழிகளில் மொழி பெயர்க்கப்பட வேண்டும் என்ற ஆசைகளும் உந்துதலும் இருக்கலாம்.ஆனால் அதற்காக அது மொழிபெயர்ப்பிற்கான தகுதியும் தரமும் இல்லாதபட்சத்தில் செய்யப்படுமானால், அது மொழிபெயர்ப்பு என்பதற்கு பதில் இலக்கிய துஷ்பிரயோகமாகவே மாறிவிடும் ஆபத்து உண்டு.

மொழிபெயர்ப்பென்பது மிகவும் அவசியமானது. ஆனால் அதற்காக பணம் இருக்கிறதென்பதற்காக கண்ட கண்ட குப்பைகளையும் மொழிபெயர்க்கச் செய்து நம்மவர்கள் பேணி வரும் தரத்தைச் சீர்குலைக்க முனையக் கூடாது. இந்நிலையில் இத்தகைய செயற்பாடுகள் இலக்கிய துஷ்பிரயோகமாகவே மாறிவிடுகின்றன. ●



சினிமாவின் மொழியை நன்கு புரிந்துகொண்டு அதனை வித்தியாசமாக விரிவுபடுத்தும் ஆற்றல் பெற்ற ஆளுமையாக வெளிப்பட்ட



# மணிரத்தினம்

கலையுலகம்

1987 இல் வெளிவந்த "நாயகன்" படம் தமிழில் குறிப்பிடத்தக்க படவரிசைப் பட்டியலில் இன்றுவரை முதன்மை இடத்தைப் பெற்றுள்ளது. இப்படத்தின் சிறப்பு குறித்து இன்றுவரை பேசக்கூடிய நிலைமைகளே உள்ளது. இப்படத்தை இயக்கியதன் மூலம் மணிரத்தினம் இந்தியளவில் குறிப்பிடத்தக்க இயக்குநராக அறியப்பட்டார். நடிகர் கமலஹாசனுக்கும் தேசியளவில் சிறந்த நடிகருக்கான விருதைப் பெற்றுக்கொடுத்த படமாகத்தான் நாயகன் அமைந்தது.

இன்று நாயகன் படம் வெளியாகி இருபத்தைந்து ஆண்டுகளைப் பூர்த்தி செய்கிறது. இதனை கௌரவிக்கும் விதத்தில் "இந்து" பத்திரிகையில் கட்டுரை ஒன்று வெளியானது. இக்கட்டுரை மீதான கருத்துகள் பல மட்டங்களில் விமர்சனமாகவும் முன்வைக்கப்பட்டது. எவ்வாறாயினும் இந்தக் காலப்பகுதியிலும் கூட "நாயகன்" படம் தனக்கான அங்கீகாரத்தை கணிப்பை தக்க வைத்துள்ளது. இச்சந்தர்ப்பத்தில் நாயகன் இயக்குநர் மணிரத்தினம் மீதான நமது பார்வையைக் குவிப்பது இங்கு பொருத்தமானதாக இருக்கும்.


எழுபதுகளில் தமிழ் சினிமாவில் மாற்றத்திற்கான சில அறிகுறிகள் உருவாவதைக் காணலாம். பெரும் நட்சத்திரங்களின் காலம் மறையத் தொடங்கிய தருணம் அது. பல்லாண்டுகளாக இயங்கிக் கொண்டிருந்த ஸ்டூடியோக்கள் ஒன்றன் பின் ஒன்றாக மூடப்பட்டு வந்தன. சினிமாவைப் பற்றி தீர்க்கமான புரிதலுடன் எதிர்பார்ப்புகளுடன் சில புதிய இயக்குநர்கள் தோன்றினார்கள். இந்த வரிசையில் பாரதிராஜா, மகேந்திரன், துரை, ருத்தையா, ஜான் ஆபிரகாம் முதலானவர்களைக் குறிப்பிட முடியும். இவர்களால் தமிழ் சினிமாவின் எல்லைகள் விரிவாக்கம் பெற்றன. இதைவிட ஒளிப்பதிவு, இசை போன்ற சினிமாவின் ஏனைய பரிமாணங்களிலும் பல புதிய கலைஞர்கள் தோன்றிக் கொண்டிருந்தார்கள். இவை மூலம் தமிழ் சினிமாவில் ஓர் புதிய அலை உருவானது.

உண்மையில் ஒரு திரைப்படத்தின் தவறு அதன் திரைக்கதையில், அது சொல்லப்படும் விதத்தில் தான் நிகழ்கிறது. எனவே சினிமாவின் மூலப்பொருளான கதை, திரைக்கதையாக கையாளப்படும் விதமே அதன் வெற்றி - தோல்விக்கான அளவுகோலாக இருக்கிறது. இந்த அம்சத்தைப் புரிந்துகொண்டு தமது தனித்துவத் திறன்களால் தனிமுத்திரை பதிக்க முடியுமென நிரூபித்தவர் தான் மணிரத்தினம்.

மணிரத்தினம் யாரிடமும் உதவி


பகல் நிலவு


ஊமை விழிகள்


நாயகன்



இயக்குநராக பணிபுரியாமல் ''பல்லவி அனுபல்லவி'' எனும் தனது முதல் படத்தை 1983இல் கன்னட மொழியில் இயக்கி இயக்குநராக அறிமுகமானார். இவர் 1984 இல் ''உணரு'' (மலையாளம்) எனும் படத்தை இயக்கினார். தொடர்ந்து 1985 இல் இதய கோவில் படம் மூலம் தமிழில் நன்கு அறியப்பட்டார். அதேயாண்டு ''பகல் நிலவு' எனும் படத்தை வெளியிட்டார். 1986இல் ''மௌனராகம்' முதலான படங்கள் மூலம் கவனிப்புக்குரிய இயக்குநராக அறியப்படுகிறார். தமிழில் சினிமாவின் மொழியை நன்கு புரிந்து அதனை வித்தியாசமாக விரிவுபடுத்தும் ஆற்றல் பெற்ற ஆளுமையாக மணிரத்தினம் வெளிப்பட்டார். இதன் உச்சமாகவே 1987இல் நாயகன் படத்தை இயக்கினார்.

இந்த சந்தர்ப்பத்தில் தமிழ் சினிமாவில் ஏற்பட்ட சில புதிய போக்குகளையும் நாம் அடையாளம் காண வேண்டும். இவை மணிரத்தினம் எனும் இயக்குநரின் சினிமாவின் பகைப்புலத்திற்கு நேரடியாக துணையானவை. அப்போது படம் பிடிக்கும் தொழில்நுட்பக் கருவிகளில் பல்வேறு புதிய கருவிகள் அறிமுகமாகிக் கொண்டிருந்த காலமாகும். குறிப்பாக பல்வேறு புதிய தொழில்நுட்ப கருவிகளைக் கையாளும் திறன்பெற்ற ஒளிப்பதிவாளர் ஸ்ரீராம் அவற்றை முழுமையாகப் பயன்படுத்தும் சந்தர்ப்பம் இல்லாது இருந்து வந்தார். மௌலியின் படங்களில் பணி புரிந்து வந்தார். இத்தருணத்தில் பிராதப் போர்த்தன் இயக்கிய ''மீண்டும் ஒரு காதல்'' கதை மூலம் தான் கற்றுக் கொண்ட அறிவையும் புதிய கருவிகளைக் கையாளும் நுட்பத்தையும் பயன்படுத்தி ஸ்ரீராம் கைதேர்ந்த ஒளிப்பதிவாளராக வெளிப்பட்டார். இந்த படத்தின் ஒளிப்பதிவிலும் இயக்கத்திலும் ஐரோப்பிய சினிமாவின் தாக்கம் நேரடியாக வெளிப்பட்டது.

திரைப்படக் கல்லூரியில் இருந்து ''அபாவானன்குழுவினர்'' 1986இல் வெளிவந்து ஹொலிவூட் பிரமாண்டத்தை தமிழ்ச் சூழலில் மறுபிரதி செய்வதற்கான தொடக்கத்தை ''ஊமைவிழிகள்' படமூலம் வெளிக்காட்டின. இப்படம் சினிமாஸ் கோப் படமாக வெளிவந்தது. இப்படத்தின் திரைக்கதை பழைய பாணியில் இருந்தாலும் அகலத்திரையும் அதைச் சார்ந்த காட்சியமைப்புகளின் புதுமையும் ஒரு பெரிய வரவேற்பை ஏற்படுத்தியது. முன்பு ''இராஜ ராஜ சோழன்'' திரைப்படம் கூட சினிமாஸ் கோப்பில் தான் தயாரிக்கப்பட்டது. ஆனால், அப்படத்திற்கு இல்லாத வரவேற்பு ஊமைவிழிகள் படத்திற்கு கிடைத்தது. இப்படத்தின் மூலம் ஹொலிவூட் ரியலிசத்தை வெளிக் கொண்டுவர முயற்சிசெய்யப்பட்டது. ஆனால் இது முழுமையாக வெற்றி பெற்றதெனக் கூற முடியாது.

இது ஒரு புறமிருக்க, 1980களில் வேறுவிதமான தாக்கமும் தமிழ்ச் சூழலில் உருவானது. குறிப்பாக தொலைக்காட்சிகளின் பரவல், முன்


ஊமை விழிகள்


மௌனராகம்

னேற்றம் காரணமாக விளம்பரப் படங்கள் அதிகமாக வெளிவரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இத் தேவையைப் பூர்த்திசெய்ய விளம் பரக் கம்பனிகள் அதிகம் தோற்றம் பெற்றன. இத்தகைய விளம்பரப்படங்கள் உருவாக்கத்தில் ஒளிப்பதிவாளர்கள் மதுஅம்பட், ஸ்ரீராம் போன்ற கலைஞர்களது பங்களிப்பு முக்கியமாக இருந்தது. இவர்கள் தொலைக் காட்சிக்கேற்ப வித்தியாசமான விளம் பரப்படங்களை உருவாக்கி வந்தனர். இது ஒரு புதிய தொழிற்துறையாக பரிணாமம் பெற்றது. விளம்பரப் படங்களின் தேவையும் பலமடங்காக அதிகரித்தது. தொடர்ந்து புதிய பல் வேறு நிறுவனங்களும் உருவாகிவந்தன. இவற்றில் பங்குகொள்ளக் கூடிய திறமையான கலைஞர்களும் உள்வாங்கப்பட்டனர். ராஜீவ்மேனன் என்பவர் இப்படித்தான் உருவானவர். இத்தகைய விளம்பரப்படங்களுக்கு இசையமைத்ததில் ஏ.ஆர்.ரகுமான், மகேஷ் போன்றவர்களுக்கு முக்கிய மான பங்குண்டு. இசையின் நுட்ப மான ஆக்கமலர்ச்சிப் பண்புகள் முழுமையாக வெளிப்பட்டன. ஒளிப் பதிவாளர் ஸ்ரீராம், இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் ஆகியோர் மணிரத்தினத்துடன் இணைந்து பல வெற்றிகரமான படங்கள் உருவாகக் காரணமாக இருந்தனர்.

உலகமயமாக்கல் நுகர்வுப் பொருளாதாரம், மற்றும் நுகர்வுப்பண்பாடு முதலானவற்றால் விளம்பர நிறுவனங்கள் வித்தியாசமான புதிய புதிய விளம்பரப்படங்களை தயாரிக்க வேண்டிய போட்டிச் சூழல் உருவானது. மேலும் தொழில்நுட்ப ரீதியில் போட்டி போட வேண்டிய தேவையும் ஏற்பட்டது. கம்பியூட்டர்கிராபிக்ஸ் போன்ற பல சாதனங்களை இறக்குமதி செய்து பயன்படுத்துவதில் வேகம் ஏற்பட்டது. மும்பாய்க்கு நிகராக சென்னை முந்திச் செயற்பட்டது. பிரசாத் நிறுவனம் வீடியோ அனிமேசன் மற்றும் கம்பியூட்டர் கிராபிக்ஸ் தளத்தையும் நிறுவியது.

இதைவிட, சென்னையில் தொழில் நுட்ப அமைப்புகளும் தொழில்நுட்ப அறிவும் மற்றும் அதை செயலாக்கம் செய்யும் கலைஞர்களை உருவாக்கக் கூடிய திரைப்படக் கல்லூரிகளும் வளர்ந்து வந்தன. பல கல்லூரிகளில் "விசுவல்" கொமினியுகேசன் போன்ற பாடங்கள் அறிமுகப்படுத்தப் பட்டன. கம்பியூட்டர் படிப்பிலும் பல புதிய துறைகள் அறிமுகப்படுத்தப் பட்டன. இந்த கற்கைகளை பூர்த்தி செய்த புதிய தலைமுறையினர் உருவாகினர். இவர்கள் திரைப்படத்துறையில் உள்வாங்கப்பட்டனர்.

மேற்குறித்த இந்தப் பின்புலத்தில் தான் "மணிரத்தினயுகம்" உருவாவதற்கான எல்லா வாய்ப்புகளும் ஏற்பட்டன. மிகுந்த பொருட் செலவில் படங்களைத் தயாரிக்கும் புதிய நிலைமைகள் உருவாகின. பிரபல தயாரிப்பாளரும் இயக்குநருமான "முத்தா சீனிவாசன்" நாயகன் படத்தை தயாரித்தார். ஆனால் இப்படம் பாதியளவில் செல்லும் போதே தயாரிப்பாளர் முத்தா சீனிவாசனுக்கும் இயக்குநர் மணிரத்தினத்திற்கும் இடையில் படத் தயாரிப்புச் செலவு பற்றி வாக்குவாதம் முற்றி படத்தயாரிப்பு இடையில் நின்றுவிடும் நிலை உருவானது. அத்தருணம் மணிரத்தினத்தின் சகோதரர் தயாரிப்பாளர் ஜீ.வெங்டேஸ்வரன் உதவியால் இப்படம் முடிந்து


மௌனராகம்


பம்பாய்

பின் வெற்றியைத் தழுவியதென்பது பரவலான செய்தி. இதுபற்றிய செய்திகள் தான் இருபத்தைந்து வருடங்களுக்குப் பின்னரும் மீண்டும் ஊடகங்களில் கருத்துரைக்கப் படுகின்றது. தற்போது முத்தாசீனிவாசன் பெயர் மறைக்கப்பட்டு மணிரத்தினத்தின் படம், ஜீ.வி படம், கமலஹாசன் படம் என்று பேசுமளவிற்கு நிலைமைகள் உருவாகிவிட்டன. "இந்து" பத்திரிகையும் மணிரத்தினம், கமலஹாசன் முதலானோரை முன்நிறுத்தும் அரசியல் நலன் சார்ந்து வெளியிட்ட கட்டுரையாக அமைந்துள்ளது.

கமலஹாசன் போன்ற பெரிய நடிகரை வைத்து கொலிவூட் ரியலிச அடிப்படையில் நாயகன் படம் எடுக்கப்பட்டது. இதன் மூலம் தமிழில் கொலிவூட் ரியலிசம் கதையாடலாகவும் காட்சியாகவும் புதுப்பரிமாணம் பெறுவதற்கு நாயகன் படம் அடித்தளம் அமைத்தது. புகழ்பெற்ற நாவலாசிரியர் மரியோ புஸோ எழுதிய The God Father (த காட்ப் பாதர்) என்ற நாவலை அடிப்படையாகக் கொண்டு 1987இல் (த காட்ப் பாதர்) படம் வெளியானது. இப்படத்தை இயக்கியவர் அமெரிக்காவைச் சேர்ந்த பிரான்ஸிஸ் ஃபோர்டு கொப்போலோ. இப்படத்திற்கு அப்போது மூன்று ஒஸ்கார் விருதுகள் கிடைத்தன. இப்படத்தின் தாக்கத்திற்குட்பட்டே நாயகன் உருவானது. ஆனால் இப்படம் இந்தியச் சூழலுக்கும் தமிழ்த்தன்மைக்குமேற்ப திரைக்கதை அமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டது. இப்படம் வெற்றியும் பெற்றது.

தமிழ்நாட்டின் கிராமமொன்றின் பெயரைக் குறிப்பிட்டு ( எழுத்தால் எழுதி) புனைவை நிகழ்வாக மாற்றும் நம்பச் செய்யும் வேலையை மணிரத்தினம் நுட்பமாக கையாளும் திறன் கொண்டவர். தூத்துக்குடியில் இருந்து பம்பாய்க்கு இடம் பெயர்ந்தவர் வேலு. கள்ளக் கடத்தல்/ மாஃபியா தலைவன் வரதராஜ முதலியார் (நிகழ்வு). "நாலு பேருக்கு நல்லது செய்றதுக்காக தப்புச் செய்தா பாவமில்லை" என்று பேசும் வேலு







நாயக்கர் (புனைவு). இந்த நாயகன் படம் மூலம் வரதராஜ முதலியாரின் சாயலில் வேலுநாயக்கரின் பிம்பம் முன்னிறுத்தப்பட்டது. தமிழ் நாட்டுக் கிராமமென்ற சிறிய வெளியில் இருந்து "தேசம்" என்ற பெரிய வெளிக்குள் விரிவதன் மூலம் பரந்த சந்தையையும் தனதாக்கிக் கொள்ளும் நுட்பமும், ஆற்றலும் கொண்டவர் மணிரத்தினம்.

மணிரத்தினத்தின் கீதாஞ்சலி (1988, தெலுங்கு), அஞ்சலி (1990), தளபதி (1991), ரோஜா (1992), திருடாதிருடி (1993), பம்பாய் (1995), இருவர் (1997), முதலான படங்கள் வெளிவந்தன. ரோஜா-பம்பாய், இருவர் போன்ற படங்கள் சமூகம் அரசியல் சார்ந்த வெளிகளில் பலத்த உரையாடலுக்கும் விவாதங்களுக்கும் களம் அமைத்தன. புனைவில் இருந்து நிகழ்விற்கும் நிகழ்வில் இருந்து புனைவிற்கும் என இயங்கு வெளி இயக்கமாக வெளிப்பட்டது. திராவிட அரசியலை கொச்சைப்படுத்தும் பார்வை வலுவாக மணிரத்தினத்திடம் வெளிப்பட்டது. பார்ப்பனிய/ இந்துத்துவ சார்பு திரைவெளியில் இயல்பாக கட்டமைக்கப்பட்டது.

1998இல் "தில்சே" (இந்தி) படம் வெளியானது. இப்படம் தமிழில் "உயிரே" என்ற பெயரில் மொழி மாற்றப்பட்டு வெளிவந்தது. அலை பாயுதே (2000), கன்னத்தில் முத்தமிட்டால் (2002), யுவா (2004 இந்தி), ஆயுத எழுத்து (2004) முதலான படங்களும் தொடர்ந்து வெளிவந்தன. யுவாவும்-ஆயுத எழுத்தும் வெவ்வேறு நடிகர்களை வைத்து ஒரே நேரத்தில் தமிழிலும், இந்தியிலும் திரைப்படமாக்கப்பட்டது. 2007இல் இந்தியில் வெளியான "குரு" அதே பெயரில் தமிழிலும் மொழிமாற்றப்பட்டு வந்தது. 2010 இல் "ராவணன்" இந்தி, தமிழ் மொழிகளில் ஒரேநேரத்தில் படமாக்கப்பட்டு வெளியானது. மேற்குறித்த இந்தப் படங்கள் தான் இந்திய சினிமாவிலும் தமிழ் சினிமாவிலும் மணிரத்தினம் அதிகம் பேசப்படும் இயக்குநராக அறியப்படுவதற்கு காரணமாயிற்று.

தமிழ் சினிமாவில் இயக்குநர் / ஒளிப்பதிவாளர் பாலுமகேந்திரா மூலம் வசனம் குறைக்கப்பட்டு பிம்பத்துக்கும் காட்சியமைப்புக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. உதாரணமாக பாலுவின் அழியாத கோலங்கள், மூடுபனி, மூன்றாம் பிறை போன்ற படங்களை இங்கு

குறிப்பிடலாம். பார்வையாளர்களிடம் இந்தப் படங்கள் பெரும் வரவேற்பைப் பெறத் தொடங்கின. பாலு மகேந்திராவின் இந்தப் பாணி மணிரத்தினத்தின் படத்துக்கு ஒரு முன்னோடி என்று கூறலாம். ஆனால் அடிப்படையில் இங்கு ஒரு வித்தியாசமும் உண்டு. பாலுமகேந்திராவின் பிம்ப/ காட்சியமைப்பில் ஐரோப்பியத் தாக்கம் முன்நிற்கிறது. மணிரத்தினத்தின் பிம்ப/ காட்சியமைப்பில் கொலிவூட் ரியலிசம் முன்நிற்கிறது. ஆக இந்த இரு தாக்கங்களும் அவரவர் ஆளுமையில் பெரும் செல்வாக்கைப் பெற்றுள்ளன. இருப்பினும் இந்த இருவருக்கும் பொதுவாக இருக்கும் தனித்தன்மை- பாணி வசனக்குறைப்பு ஆகும். இருவரையும் தனித்தனியே அடையாளப்படுத்தும் காட்சிநுட்பங்களும் கதைக்களமும் பாத்திரத் தேர்வும் பின்னணி இசையும் அழகியலாக இழையோடி வருவதையும் நுட்பமாகக் குறிப்பிட வேண்டும்.

இதைவிட மணிரத்தினத்தின் படங்களில் வரும் பிம்ப/ காட்சிக்கு ஏற்படும் செலவு பாலுமகேந்திராவின் படங்களில் ஏற்படுவதைவிட பல மடங்கு அதிகம் என்று கூறலாம். பொதுவாக படத்தயாரிப்புச் செலவு அதிகமாக இருப்பதென்பது மணிரத்தினத்தின் பாணி என்பது புரிந்து கொள்ளத்தக்கது. இவரைத் தொடர்ந்து ஷங்கர் படங்களுக்கும் இதே பாணியில் அதிக பொருட்செலவுக்கு உட்பட்டவை.


ஹொலிவூட் ரியலிசம் என்பது கொளுத்தும் வெயிலில் கூட நகரத்தின் ஒரு பகுதியை வெள்ளைப் பனி படர்ந்த இடமாக மாற்றக்கூடிய பண்புகொண்டது. இந்த அணுகுமுறையின் படி படத்திற்காக போடப் படும் செட்டிங் செயற்கையாகத் தெரியக்கூடாது. இந்த அடிப்படையில் "தோட்டாதரணி" போன்ற கலைஞர்களின் செட்டிங் அமைப்பாக்கத் திறன் அமைந்துள்ளது. தமிழில் இந்த அணுகுமுறை "நாயகன்" படத்திற்காக அமைக்கப்பட்ட பம்பாய் சேரி ஒன்றின் செட்டிங் வழியாக அறிமுகமாகிறது. தமிழ்ச் சூழலில் ஹொலிவூட் தாக்கத்திற்கு உட்பட்ட இயக்குநர் ஒருவரை முத்தா சீனிவாசன் முதன்முறையாக புரிந்துகொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகிறது. அதிக பொருட் செலவில் காட்சியமைப்புகளை உருவாக்கும் பின்புலங்களை புரிந்துகொள்ளாமல் இயக்குநருடன் சீனிவாசன் முரண்பட வேண்டி இருந்தது. இந்தத் தன்மைகளை மணிரத்தினம் விளங்கப் படுத்தும் நிலைமையில் அப்போது இருக்கவில்லை. இவற்றை மணிரத்தினத்தின் பாணியாக ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் உருவானது.

இந்தியாவின் பல்வேறு மாநில மட்டங்களில் உருவாகும் அடையாள அரசியல் எழுச்சிகளைப் புரிந்து கொள்ளாமல் பன்முக ஜனநாயக அடையாளங்களை அகற்றும் ஆதிக்க அரசியல் நலன் சார்ந்து கட்டமைக்கும் கருத்தியல் வெளியில் இயங்குபவர் மணிரத்தினம். இவர் இந்திய தேசியத்தின் இந்து/ இந்திய அம்சங்களை தூக்கிப்பிடிக்கும் கருத்தியலாளர். இந்திய ஆளும் அதிகார வர்க்கத்தின் கருத்தியல் பரப்புகையை ஆயுதமாக திரைவெளியில் நுட்பமாகக் கையாளும் திறன் வாய்ந்தவர் மணிரத்தினம். இந்திய (இந்து /இந்தி) மறுதேசிய வாதத்தின் பிரதி பிம்பமாக ரோஜா, பம்பாய் போன்ற படங்களை உருவாக்கியவர். சாத்தியமான வகையில் திராவிட தமிழ் / தமிழர் தேசிய நலன்களுக்கு விரோதமாக இயங்கும் கருத்தியல் மணிரத்தினம் எனும் இயக்குனர் வழியே திரைவெளியில் காட்சிப்படுகிறது. இந்த அழகியல் X அரசியல் பற்றிய பிரக்ஞையும் தெளிவும் தமிழ்ச் சூழலில் ஆழமாக வளர்க்கப்பட வேண்டும்.

தமிழ் / தமிழர் விரோத மனப் பான்மை ஈழத் தமிழர் விவகாரத்தில் தாராளமாக வெளிப்பட்டுள்ளது. "கன்னத்தில் முத்தமிட்டால்" படம் இதற்கு நல்ல உதாரணம். தமிழர் வாழ்புலத்தில் பன்முக அடையாளத் திரட்சியின் சக்தியாக சினிமா அடையாளம் காணப்பட வேண்டும். அப்பொழுதுதான் அரசியல் X அழகியல் சார்ந்த கலைத்துவப் பயணம் நமக்கு முழுமையாகச் சாத்தியப்படும். கலை அதனளவில் புரட்சி செய்யாது. ஆனால் உலகு பற்றி சரியான அரசியல் நிலைப்பாடுகளை கலைஞர் தனது படைப்பு மூலம் பரந்துபட்ட பலமான நேச உறவை மக்களோடு கொள்ள முடியும். இந்த புரிதல் சார்ந்து மணிரத்தினத்தின் சினிமாக்களை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இன்று கலைப்பார்வையில் செல்வாக்குப் பெறும் மேட்டுக்குடிப் பார்வையில் இருந்து நாம் விடுபட்டு சிந்திக்கும் விமர்சிக்கும் பண்பை வளர்த்துக் கொள்வது சமகாலத் தேவையாகிறது.


ரோஜா

# பனுவல் பார்வை




## போரும் இலக்கியமும்

ஆதி

தற்போது ஈழத்து தமிழ்ச்சூழலில் வெளிவந்துகொண்டிருக்கக் கூடிய இதழ்களுள் ஞானம் இதழும் ஒன்றாகும். இதன் முதல் இதழ் ஜூன் 2000 இல் வெளியானது. ஐம்பதாவது இதழ் பொன்மலராகவும் நூறாவது இதழ் ஈழத்து நவீன இலக்கிய சிறப்பிதழாகவும் வெளிவந்தது. நூற்றி ஐம்பதாவது இதழ் ஈழத்துப் போர் இலக்கிய சிறப்பிதழாக 600 பக்கங்களில் பெரும் தொகுப்பாக மலர்ந்துள்ளது.

இந்த 150 ஆவது சிறப்பு மலர் ஈழத்து தமிழ் இதழியல் மரபில் மாறுதடம் கொண்டது. இதுவரை தமிழ்பேசும் மக்கள் போரியல் வாழ் புலத்தில் வாழ்ந்து வந்துள்ளனர். ஆயுதப் போராட்டத்தில் மோசமான அனைத்து தன்மைகளுக்கும் முகம் கொடுத்துள்ளனர். இதுவரை தமிழ் கூறும் நல்லுலகில் எந்தத் தமிழர்களுக்கும் கிடைக்காத அநுபவம், வாழ்வியல் நெருக்கடித் தேர்வு ஈழத் தமிழர்களுக்குத் தான் கிடைத்துள்ளது. இதனால் தான் தமிழிலக்கிய வரலாற்றில் போர் இலக்கியம் என்று தனியாக வகைப்படுத்தி நோக்குவதற்கான பின்புலத்தை, நியாயப்பாட்டை ஈழம் வழங்கியுள்ளது.

இன்று தமிழ்த் தரப்பால் இதுவரை முன்னெடுக்கப்பட்ட ஆயுதப் போராட்டம் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டாலும் இந்தப் போராட்டம் தொடர்ந்ததற்கான காரணங்கள் மட்டும் அப் படியே உள்ளன. இன்னும் பல் வேறு புதிய புதிய காரணங்களும் வந்து சேர்ந்துள்ளன. இந்தப் பகைப் புலத்தில் தான் இந்த ஞானத்தின் சிறப்பு மலர் வெளிவந்துள்ளது. இந்த மலர் வெளிவந்ததன் மூலம் ஞானம் தமக்கான சமூகப் பொறுப்பை தெளிவாக அடையாளப்படுத்தியுள்ளது. பேசா பொருளாக இருந்த பல விடயங்கள் பேசுபொருளாகப்படுகிறது. தமிழர்களின் மறதிக்கு எதிரான கருத்தியல் போராட்டம் தூண்டப்படுகிறது. அதனால் விழிப்புணர்வு பெறும் பொழுது இலக்கிய அரசியல், அரசியல் இலக்கியம் மீதான நமது பார்வைகள் நுண்ணியதாக இன்னும் விரிவாக்கம் பெறும். அடையாள அரசியல் நெருக்கடி அந்தந்த சமூகப்பெறுமான எழுச்சியாக மேற்கிளம்பும். இவையாவற்றையும் உள்வாங்கிய ஆவணப் படுத்தல் சமூக அவசியப்பாடாக புதுப்பரிமாணம் பெறும். இந்த அம்சங்களில் பதிற்குறியாகவே ஞானம் சிறப்பு மலர் அமைந்துள்ளது.





டாக்டர் தி.ஞானசேகரன்

போர் இலக்கியம் தமிழ்த் தேசிய அரசியலின் பன்முகப்பாட்டு உரையாடல் வெளிக்கானகளங்களை அடையாளப் படுத்துகிறது எனலாம். இங்கு 43 கவிதைகளும், 26 சிறுகதைகளும் 42 கட்டுரைகளும் மேலும் உரையாடல் பகுதிகளும் இடம்பெற்றுள்ளன. இந்தப் பகுதிகள் யாவும் போரிலக்கியம் சுட்டும் விடயப் பரப்பை காலஅகலப்படுத்துகிறது. இன்னும் போதாமையின் தடங்களையும் தெளிவுபடுத்துகிறது.

ஈழத்து தமிழ் இலக்கியத் தடம் போர்க்கால மரபு சார்ந்து எவ்வாறு பொருள்கோடலுக்கு உட்பட்டுவருகிறது என்பதை சிந்திப்பதற்கான பதிகையாக இந்த சிறப்பு மலர் ஆக்கம் பெற்றுள்ளது. இந்த முயற்சி கனதியானது. காலத்தேவை கருதிய பணியாகிறது. ஆகவே இதன் குறைபாடுகள் போதாமைகள் கோட்பாட்டாக்க வறட்சி, ஆய்வு நோக்கு முதலானவற்றை தவிர்த்துப் பார்க்கக் கூடிய ஒரு பார்வைக் கோணமும் உள்ளது. நாமும் இதை புரிந்து கொள்ள வேண்டும். இதையும் மீறி கடந்த போர்க்கால அரசியல், இலக்கிய அரசியல் மற்றும் அடையாள அரசியல் முதலான கூறுகளில் விரிதளம் நோக்கிய பார்வையை நோக்கி சிந்தனைகளும் ஆய்வுகளும் ஒருங்கிணைக்கப்பட வேண்டுமென்ற அவசியத்தையும் வலியுறுத்துகின்றது. எதிர்காலத்தில் இந்தப் பணிகள் இன்னும் விரிவாக்கம் பெறும்.

ஞானம் இந்த மலரை வெளியிட்டதன் மூலம் தனக்கான சமூகப் பொறுப்பை அதிகரித்துள்ளது. தொடர்ந்து கருத்தியல் தளம் சார்ந்து செயற்பட வேண்டிய நிர்ப்பந்தமும் ஞானத்திற்கு உருவாகிறது.

# அடுத்த தேர்தலுக்கு பிறகு இந்தியா பிளவுண்ட தேசம் போன்று காட்சி தரும்

சகல மாநிலங்களுக்கும் ஒரு விசேட அந்தஸ்து தேவைப்படுகிறது. மாநிலங்களின் முன் முயற்சிகளுக்கு தடையில்லாத, மத்திய அரசின் முன்னால் நின்று கெஞ்சி வேண்டத்தேவையில்லை என்ற அந்தஸ்து


இந்தியாவில் அடுத்த பொதுத் தேர்தல் 2013 முற்பகுதியில் நடைபெறும். வேண்டுமானால் நான் பந்த யம் பிடிக்கத் தயார். அந்தத் தேர்தலு க்குப் பிறகு இந்தியா கடுமையாகப் "பிளவுண்ட தேசமாகவே" காட்சிதரும். இரு பிரதான அரசியல் கட்சிகளான காங்கிரஸும் பாரதிய ஜனதாவும் பெரும்பான்மையான ஆசனங்களைப் பெறும் என்ற வழமையான ஊகம் தவறாகப் போகும் என்று தோன்றுகிறது. இரு கட்சிகளுமே மூன்று இலக்க எண்ணிக்கையிலான ஆசனங்களைப் பெறுவது கூட கஷ்டமாக இருக்குமென்றே, மக்கள் மத்தியிலான அபிப்பிராயத்தை அடிப் படையாகக் கொண்டு நோக்குகையில் முடிவுக்கு வரவேண்டியிருக்கிறது.

இத்தடவை தேர்தல் காலத்தில் சகலவிதமான மத மற்றும் தத்துவார்த்த வர்ணங்களையும் கொண்ட கட்சிகள் களத்தில் நிற்கும். வாக்குகள் சிதறடிக்கப்படப்போகின்றன. ஐம்பதுக்கும் அதிகமான ஆசனங்களைப் பெறக்கூடிய எந்தவொரு கட்சியும் ஏனைய கட்சிகளின் ஆதரவைப் பெற்று ஆட்சியமைக்கக்கூடிய தகுதி தனக்கு இருக்கிறது என்று நினைக்கும் நிலை உருவானாலும் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை. 546 ஆசனங்களைக் கொண்ட லோக்சபாவில் சாதாரண பெரும்பான்மைப் பலமான 273 ஆசனங்களைப் பெறுவதற்கு பல கட்சிகள் ஒன்றுபட்டு ஒருமேடையில் நிற்கவேண்டிவரும் என்பதே இதன் அர்த்தம்.

காங்கிரஸும் பாரதிய ஜனதாவும் ஊழல் குற்றச்சாட்டுகளினால் பெரும் நெருக்கடிக்குள்ளாகியிருக்கின்றன. பாரதிய ஜனதாவின் தலைவரான நிதின் கட்காரியின் போலிக் கம்பனிகள் குறித்து குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. காங்கிரஸைப் பொறுத்தவரை தொடர்ச்சியான பல ஊழல் விவகாரங்களினால் திக்கு முக்காடிப் போயிருக்கும் நிலையில் தலைவி சோனியா காந்தியின் மருமகன் றொபேர்ட் வதேரா மேற்கொண்ட நிலக்கொள்வனவுகளில் பாரதூரமான முறைகேடுகள் இடம் பெற்றதாகக் குற்றச்சாட்டுகள் கிளம்பியிருக்கின்றன. இந்த ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென்று மக்கள் விடுக்கின்ற கோரிக்கைகளை இரு பிரதான கட்சிகளுமே கர்வத்தனமாக அலட்சியம் செய்து கொண்டிருக்கின்றன.

தேர்தல் பிரசாரங்களின் போது காங்கிரஸ் கட்சியை ஊழல் குற்றச்சாட்டுகள் பின் தொடர்ந்து விரட்டிக் கொண்டேயிருக்கும். பிரதமரின் அலுவலகம் உரிய முறையில் செயற்பட்டிருந்தால் ஊழல் விவகாரங்களை முளையிலேயே கிள்ளியெறிந்திருக்க முடியும் என்பதால் "கல்லெறியில்' இருந்து பிரதமர் மன்மோகன் சிங்கும் தப்பமுடியாமற்போகலாம். பிரதமர் அலுவலகம் ஊழல்விவகாரங்களில் பங்காளியாக இல்லாவிட்டாலும் உடந்தையாக இருந்திருக்கிறது என்பது சகல ஊழல்களிலும் பொதுவான ஒரு அம்சமாக இருக்கிறது.

காங்கிரஸ் கட்சி ஊழலின் குகையென்று மக்கள் மத்தியில் பொதுவானதொரு எண்ணம் ஏற்பட்டுவிட்டதால் மத்திய அமைச்சரவை மாற்றம் நிலைவரத்தில் பெரிய மாறுதலை ஏற்படுத்தும் என்று நம்புவதற்கில்லை. அமைச்சரவை உறுப்பினர்களில் பெரும்பான்மையானவர்கள் தூய்மையானவர்களாகவோ அல்லது தகுதியானவர்களாகவோ இல்லை. மற்றவர்களுடன் ஒப்பிடும்போது ஜெய்பால் ரெட்டி ஓரளவுக்கு நேர்மையான அமைச்சர். அவரைப் பெற்றோலியம் அமைச்சுப் பொறுப்பிலிருந்து அகற்றியிருக்கிறார்கள் என்றால், பெருமுதலாளித்துவ நிறுவனங்களின் வற்புறுத்தல்களின் முன்னால், காங்கிரஸ் எதையுமே செய்ய முடியாததாக இருக்கிறது என்பது தெளிவாக நிருபணமாகிறது. தேர்தல் செலவுகளுக்காக இந்த நிறுவனங்களிடமிருந்தே பணம் பெறப்படுகிறது என்பதால் அவற்றின் கோரிக்கைகளுக்கு இணங்க



'காங்கிரஸும் பாரதிய ஜனதாவும் மூன்று இலக்க ஆசனங்களைப் பெறுவது கூட கஷ்டமாக இருக்கும் என்றே தோன்றுகிறது. 50க்கும் அதிகமான ஆசனங்களைப் பெறக்கூடிய எந்தவொரு கட்சியும் ஏனைய கட்சிகளின் ஆதரவைப்பெற்று ஆட்சி அமைக்கக்கூடிய தகுதி தனக்கு இருக்கிறது என்று நினைக்கும் நிலை ஏற்பட்டாலும் ஆச்சரியமில்லை'

வேண்டிய நிலையில் காங்கிரஸ் தலைமை இருக்கிறது.

பாரதிய ஜனதா குறைந்தளவு குற்றம் கொண்டதாக இருக்கிறதென்றால், அதற்குக் காரணம் எட்டு வருடங்களுக்கும் அதிகமான காலமாக அக்கட்சி ஆட்சியதிகாரத்தில் இல்லை என்பதைத் தவிர,வேறு ஒன்றுமில்லை.

பாரதிய ஜனதாவின் ஆட்சியில் உள்ள மாநிலங்கள் குறிப்பாக, கர்நாடகாவும் மத்தியப் பிரதேசமும் கட்சிக்கு கெட்டபெயரைக் கொண்டு வந்திருக்கின்றன. இந்த மாநிலங்களில் நிலவுகின்ற ஊழல் பெருமுக்கியத்துவத்தைப் பெறாமற்போகலாம். ஏனென்றால், பொதுத்தேர்தல்களில் மத்திய அரசா ங்கத்தின் ஊழல்களே சர்ச்சைக்குரிய விவகாரமாக இருக்கும். கட்காரி மீதான ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் எழுகின்ற பிரச்சினைகளை பாரதிய ஜனதா கையாளுகின்ற முறை உட்பூசல்களை அம்பலப்படுத்துகிறது. 2002ஆம் ஆண்டில் குஜராத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டு இனச்சுத்திகரிப்புக்குத் திட்டமிட்ட முதலமைச்சர் நரேந்திரமோடியை பிரதமர் வேட்பாளராக பாரதிய ஜனதா முன்னிறுத்தினால் அதில் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை.

## மதச்சார்பின்மைத் தோற்றம்

காங்கிரஸ் இன்னமும் அதன் மதச்சார்பின்மைத் தோற்றத்தினால் அனுகூலத்தைப் பெறக் கூடியதாக இருக்கிறது. எவ்வாறெனினும், பாரதிய

ஜனதாவுக்கு மாற்றீடான கட்சிகள் உள்ள மாநிலங்களில் பெரும்பாலான முஸ்லிம்கள் காங்கிரஸை கைவிட்டிருக்கிறார்கள். பாரதிய ஜனதாவுக்கும் காங்கிரஸுக்கும் இடையே நேரடிப் போட்டி என்று வரும்போது முஸ்லிம்கள் காங்கிரஸின் பக்கமே நிற்பார்கள். ஆனால், உத்தரப்பிரதேசம், பீஹார், மேற்குவங்காளம் போன்று வேறு கட்சிகள் செல்வாக்காக உள்ள மாநிலங்களில் நிலைமை அவ்வாறில்லை. வழமையாக காங்கிரஸ் பக்கமே சாயும் சிவில் சமூகம் இப்போது விரக்தியுற்றுக் காணப்படுகிறது. அதற்கு முக்கியமான காரணம், சோனியாகாந்தியிடமிருந்து வரும் நெருக்குதல்களினால் மன்மோகன் சிங் போன்ற ஒரு தலைவர் மௌனமாக இருப்பதுதான் சிவில் சமூகம் மூன்றாவது ஒரு சக்தியை எதிர்பார்க்கிறது.

காங்கிரஸும் பாரதிய ஜனதாவும் மக்களின் மதிப்பை இழந்துவிட்டதால், ஏனைய கட்சிகள் குறிப்பாக, மாநிலங்களில் தங்களை நன்கு வலுப்படுத்திக் கொண்ட கட்சிகள் மேலெழும்புகின்றன. முதலில் மேற்குவங்காளத்திலும் அடுத்து உத்தரப்பிரதேசத்திலும் நடைபெற்ற சட்டசபைத் தேர்தல்கள், நாடு முழுவதிலும் சிதறிக் கிடக்கும் கட்சிகளை விடவும் பிராந்தியக் கட்சிகளை மக்கள் விரும்புகிறார் என்பதைக் காட்டியிருக்கின்றன.

இந்தப் போக்கிற்குக் காரணம் மக்கள் குறுகிய மனப்பான்மை கொண்டவர்களாக மாறிக்கொண்டிருக்கிறார்கள் என்பதல்ல. அகில இந்தியக் கட்சிகள் இந்தியாவின் ஐக்கியப்பட்ட ஒரு தோற்றப்பாட்டைக் காண்பிக்கத் தவறியிருப்பதே இதற்குக் காரணமாகும். அதனால், அடுத்த லோக்சபா பல கட்சிகளின் பிரதிநிதிகளை, மிகவும் சின்னஞ் சிறிய கட்சிகள், குழுக்களின் பிரதி நிதிகளைக் கூட கொண்டதாகக் காட்சி தரலாம் தலித்துகளும் ராஜ்புட்களும் யாதவ்களும் தங்கள் சாதியினரின் அல்லது உபசாதியினரின் பிரச்சினைகளை பாராளுமன்றத்தில் முன்வைக்கக்கூடும். இந்தச் சிதறலான தோற்றப்பாட்டை வைத்து நாடு சின்னாபின்னமாகிறது என்று அர்த்தப்படுத்திவிட முடியாது. பல்வகை மையே இந்தியாவின் பலமாகுமா?

தனித்துவ அடையாளத்துக்கான தங்களின் கோரிக்கைகளை ஒவ்வொரு பிரிவினரும் முன்னரை விடவும் உரத்து முன்வைக்கக்கூடும். அத்தகைய குரல்களை தேசவிரோதமானவை என்று வர்ணித்து வலிந்து அடக்குவதில் அல்ல, அதிகாரத்தைப் பன்முகப்படுத்துவதிலேயே பதில் தங்கியிருக்கிறது. மத்திய அரசிடம் அளவுக்கு அதிகமான அதிகாரங்கள் குவிந்து கிடக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. அது சமஷ்டிக் கட்டமைப்பை ஒற்றையாட்சி முறை போலத் தாழ்த்தியிருக்கிறது. மாநிலங்கள் பலவழிகளில் முக்கியத்துவமற்றவையாகத் தங்களை உணருகின்றன. விசேட அந்தஸ்து வேண்டுமென்ற கோரிக்கையை பீஹார் கிளப்பியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. வேறு பல மாநிலங்களும் பீஹாரைப் பற்றி அதேகோரிக்கையை முன்வைக்குமென்று எதிர்பார்க்கலாம். பொதுத் தேர்தலுக்குப் பிறகு இத்தகைய கோரிக்கைக்கான பேச்சாளர்களாக சுதேசிகளும் பிராந்தியக் கட்சிகளும் விளங்கக்கூடிய சூழ்நிலையில் அதைத் தடுக்க முடியாமற் போகலாம்.

உண்மையில் மாநிலங்களுக்கு அதிகாரங்களைக் கொடுப்பதில் அரசியலமைப்பு சிக்கனமானதாக இருந்து வருகிறது. மாநிலங்களுக்கு கூடுதல் விவகாரங்களில் அதிகாரத்தைக் கொடுப்பதற்காக அரசியலமைப்பை மீளாய்வுக்கு உட்படுத்த வேண்டிய தேவை இருக்கிறது. அரசியலமைப்பின் சரத்து 370 ஜம்மு-காஷ்மீருக்கு விசேட அந்தஸ்தொன்றை வழங்குகிறது. இந்த விசேட அந்தஸ்து தற்காலிகமான ஒரு ஏற்பாடாகவே கொண்டுவரப்பட்டது. ஆனால், காலவரையறையின்றித்தொடருகிறது. இத்தகைய ஆணையை மற்றைய மாநிலங்களுக்கும் ஏன் பிரயோகிக்கக்கூடாது? எல்லா மாநிலங்களுக்கும் ஒரு விசேட அந்தஸ்து தேவைப்படுகிறது. அவற்றின் முன் முயற்சிகளைக் கட்டுப்படுத்தாத, தடுக்காத ஒரு அந்தஸ்து, மத்திய அரசின் முன்னால் நின்று கெஞ்சி வேண்டத்தேவையில்லை என்ற அந்தஸ்து.

மத்திய அரசு பாதுகாப்பு, வெளிவிவகாரம், தொலைத்தொடர்பு, நாணயங்கள் மற்றும் திட்டமிடல் ஆகிய அதிகாரங்களைத் தன்னுடன் வைத்திருக்க வேண்டும். வேண்டுமானால், மேலும் ஓரிரு விவகாரங்களுக்கான அதிகாரங்களையும் அது தன்வசம் வைத்துக்கொள்ளலாம். ஆனால், அளவுக்கு அதிகமான அதிகாரங்களைக் கொண்டதாக வந்துவிடாதிருப்பதை உறுதிசெய்யக்கூடியதாக நிதானமான பரிசீலனைக்குப் பிறகே அவ்வாறு செய்துகொள்ளவும் வேண்டும். சமத்துவமானவர்கள் மத்தியில் தலைவனாக மத்திய அரசு இருக்கவேண்டும். எவ்வாறெனினும் டில்லியில் இருந்து மாநிலத் தலைநகர்களுக்கு, பிறகு மாநிலத்தலைநகர்களிலிருந்து மாவட்டங்களுக்கு என்று முழு அளவில் அதிகாரப் பன்முகப்படுத்தல் செய்யப்பட வேண்டும். மக்கள் தங்களைத் தாங்களே நிருவகிக்கக் கூடியதாக அதிகாரம் இறுதியில் கிராமங்களைச் சென்றடையக் கூடியதாக இருக்க வேண்டும். அகில இந்தியக் கட்சிகளுக்கு நேர்ந்தகதி தங்களுக்கும் ஏற்படக் கூடாதென்றால், பிராந்தியக் கட்சிகள் இதை மனதிற் கொண்டு செயற்பட வேண்டும்.

அறிவியல் களரி



# பொய்யறியும் சாதனங்களின் மறைமுகங்கள்

## பாலியல் குற்றவாளிகள் மறைத்த சங்கதிகளை வெளிவர வைக்குமா?

"பொய் சொல்லக் கூடாது பாப்பா.."

பாப்பாவாக நாம் கற்றுக் கொண்ட பாடங்கள் வெறும் பாடங்களாக மனதின் ஓரங்களில் ஒழிந்து கிடக்க நிதமும் பொய்மைப் பூக்களை உதிர்த்துக் கொண்டேயிருக்கிறோம். இவற்றில் பல பொய்கள் தீவிரமான வையல்ல. மற்றவர்களுக்கு எந்தவித தீங்குகளையும் செய்யா தவை.

ஆனால் எல்லாப் பொய்களும் அவ்வாறில்லை. மற்றவர்களை ஏமா ற்றுவதற்காக சொல்லப்படுபவை யும் இதில் அடங்கும். தாம் செய்த குற்றங்களுக்கான தண்டனைகளிலிருந்து தப்புவதற்காகச் சொல்லப்படுபவை இன்னமும் பல.

இந்தப் பொய்களை மற்றவர்களால் கண்டறிய முடியுமா? அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பது போல பொய் சொல்பவர்களின் அகத்தின் அழுக்கும் முகத்தில் தெரியவே செய்யும். நுண்ணுணர்வுள்ளவர் அதைச் சுலபமாக உணர்ந்து அறிந்து கொள்வார்கள்.

ஆனால் மனப் பதிவுகள் ஊடாக அடையப்படும் முடிவுகள் சரியானவை என உறுதியாகச் சொல்லக் கூடியவை அல்லவே. அவை விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கக் கூடியவையும் அல்ல.

பொய்களை அல்லது பொய் பேசுகிறார்கள் என்பதைக் கண்டறிய விஞ்ஞான ரீதியான பரிசோதனைகள் உள்ளனவா? இருந்தால், சமகாலச் சம்பவங்கள் அவற்றுக்கான தேவையை அதிகரிக்கவே செய்கின்றன.

### பாலியல் பலாத்காரங்கள்

5 வயதேயான பச்சிளங் குழந்தைகள் முதல் 70 வயதான பாட்டிகள் மீதான பாலியல் குற்றங்கள் அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்

றன. இந்த வருடத்தின் முதல் 6 மாத காலத்திற்குள் மாத்திரம் 900 பாலியல் வல்லுறவுகள் நிகழ்ந்திருப்பதாகவும் அதில் 600 குழந்தைகள் மீதானவை எனவும் இலங்கைப் பொலிஸ் திணைக்களமே அறிவித்திருக்கிறது. அரசியல்வாதிகள், பாடசாலை அதிபர்கள், மதகுருமார்கள், நெருங்கிய உறவினர்கள் எனச் சமூகத்தில் மதிப்புடைய பலரும் கூட இத்தகைய குற்றச்செய்கைகளில் ஈடுபடுவதை ஊடகங்கள் மூலம் அறிகிறோம்.

இவர்களில் பலர் சத்தமின்றித் தப்பிவிடுகிறார்கள். அகப்பட்டவர்கள் குற்றம் சாட்டப்படுகிறார்கள், அவர்களிலும் பலர் போதிய சாட்சியங்கள் இன்றி விடுதலை ஆகிறார்கள். தண்டிக்கப்பட்டவர்களும் சற்றுக் காலத்தின் பின் விடுதலையாகி சமூகத்தில் இணைகிறார்கள். இவர்கள் மீண்டும் தப்புச் செய்யமாட்டார்கள் என்பது நிச்சயமில்லையே.

## பொலிகிராவ் டெஸ்ட்

இந்த விடயத்தில் பொலிகிராவ் டெஸ்ட் polygraph test பற்றி மேலை நாடுகளில் விவாதிக்கப்படுகிறது.

“பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்த பொய்யர்கள்..” அரசியல்வாதிகளாகவும் சட்டம் இயற்றுபவர்களாகவும் இருக்கும் எம்மைப் போன்ற மூன்றாம் உலக நாடுகளில் இது பற்றிய மூச்சே எழவில்லை. தங்களது கபட வாழ்விற்கு குழிபறிக்க இவர்கள் இடம் தருவார்களா?

உண்மைகளை வெளிக்கொணர பொலிகிராவ் டெஸ்ட் என்ற இப்பரிசோதனை உதவும் என நம்பப்படுகிறது. பாலியல் வல்லுறவு, பாலியல் பலாத்காரம் செய்தவர்கள் சிறையிலிருந்து விடுவிக்கப்படும் தருணத்தில் அவர்களுக்கு இந்தப் பரிசோதனை கட்டாயமாகச் செய்யப்பட வேண்டும் என்ற ஆலோசனை பிரித்தானிய அரசால் தீவிரமாகப் பரிசீலிக்கப்படுகிறது.

இதன் உதவியுடன் உண்மைகள் வெளிப்பட்டால் குற்றவாளிகள் மீண்டும் பாலியல் குற்றங்களைச் செய்யும் விகிதம் குறையும். அதன் மூலம் அப்பாவிப் பொதுமக்களுக்கு கூடிய பாதுகாப்பு கிடைக்கும் என நம்புகிறார்கள்.

## நம்பிக்கை தரும் ஆய்வுகள்

இதற்கு அடிப்படையாக இருப்பது East and West Midlands இல் செய்யப்பட்ட ஒரு ஆய்வு ஆகும். பொலிகிராவ் டெஸ்ட் செய்யப்பட்ட குற்றவாளிகள் அவ்வாறு செய்யப்படாதவர்களை விட இரு மடங்கு அதிகமாக மருத்துவ ரீதியாக கணக்கில் எடுக்கக்கூடிய (clinically significant disclosures - CSD ) தந்தார்கள் என அறியப்பட்டது.

அவ்வாறு மறைவெளிடுகளால் கிடைக்கும் புதிய தகவல்கள் அவர்களை

★ எவ்வாறு நிர்வகிக்க வேண்டும்,
★ சமூகத்தில் அவர்களை கண்காணிப்பது எப்படி?,
★ அவர்களால் எதிர்காலத்தில் வரக்கூடிய ஆபத்துகளை மதிப்பீடு செய்வது,
★ அல்லது அவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகளில் எவ்வாறான மாற்றங்களைச் செய்ய வேண்டும்

போன்ற விடயங்களைத் தீர்மானிப்பதற்கு நிறைய உதவும்.

உதாரணத்திற்கு வேறு பாலியல் குற்றவாளிகளுடன் உள்ள தொடர்புகள், குழந்தைகளை அணுகுவதற்கு அவர்களுக்கு உள்ள வாய்ப்புகள் போன்ற தகவல்கள் புதிய குற்றங்கள் இழைக்கப்படுவதைத் தடுக்க உதவும்.

## பொய்யறியும் சாதனமா?

இவ்வாறு மறைத்த தகவல்களை வெளிக்கொணர்வதற்கு பொலிகிராவ் டெஸ்ட் எவ்வாறு உதவுகிறது?

ஒருவர் பேசிக் கொண்டிருக்கும் போது இவர் பொய் சொல்கிறார் என்பதைக் கண்டுபிடிக்கும் திறன் இப்பரிசோதனைக்கு உள்ளது என்பதைவிட, தான் சொல்லும் பொய்களை இது கண்டறிந்துவிடும் என்ற குற்றவாளியின் நம்பிக்கையே கண்டறியப்படுவதற்குக் காரணமாகிறது.



வைத்தியக் கலாநிதி
எம்.கே. முருகானந்தன்

இருந்தபோதும், பொய்யறியும் சாதனங்கள் (lie detectors) என்ற பதம் பொலிகிராவ் டெஸ்ட்டிற்கு வழங்கப்படுவது தவறு எனலாம்.

அப்படியானால் இப் பரிசோதனை எதைச் செய்கிறது?

உள உடலியல் ரீதியாகத் தூண்டப்படுதல், சருமத்தில் கடத்தப்படுதல்,

சுவாசம், இரத்த அமுத்தம் போன்ற உடல் உளவியல் குறியீடுகளை (Psychophysiological indices) அளவிடுகிறது. அவ்வளவேதான்.

## அப்படியானால் தீர்மானத்திற்கு வருவது எப்படி?

நாம் பொய் சொல்லும்போது உணர்வு ரீதியாக அதிகம் தூண்டப்படுகிறோம் என நம்பப்படுகிறது. உணர்வு ரீதியாகச் தூண்டப்படும் போது (arousal) வெளிப்படும் அறிகுறிகளைக் கண்டறியும் ஆற்றல் உள்ள பொலிகிராவ் டெஸ்ட் இயக்குனர்கள், அதனை அடிப்படையாகக் கொண்டு ஒருவர் பொய் சொல்கிறாரா, இல்லையா எனத் தீர்மானிக்கிறார்கள்.

எனவே இதுவும் மனப்பதிவில் தங்கியுள்ள தீர்மானம்தான். அதாவது டெஸ்ட் இயக்குனர்கள் பல மாறுபாடான நடைமுறைகளைக் கையாள்கிறார்கள். குற்றத்தின் தொடர்புடைய விடயம் பற்றிய கேள்விகளுக்கு விடையளிக்கும்போது தான் கண்டுபிடிக்கப்படலாம் என்ற பயத்தில் அதிகளவு அதிகம் தூண்டப்படுகிறார். ஆனால் அது சம்பந்தமில்லாத பொதுப்படையான கேள்விகளால்

பாதிப்படைவது குறைவு. இக் கருத்தை அடிப்படையாகக் கொண்ட தாகவே இருக்கிறது.

85%மான குற்றவாளிகளை பொலி கிராவ் டெஸ்ட் சரியாக அடையாளம் காணுவதாக சில ஆய்வுகள் தெரிவிக் கின்றன. முதற்பார்வையில் இந்த முடிவுகள் மிகவும் நம்பிக்கையான எண்ணத்தையே ஏற்படுத்தும்.

## மறை முடிவுகள்

இப்பரிசோதனையின் மற்றொரு பக்கம் அவநம்பிக்கையளிக்கிறது. 12% முதல் 47% வரையான குற்ற மற்றவர்களையும் இப் பரிசோதனை யானது பொய்யர்கள் என முடிவு கட்டியது. இது ஏற்றுக்கொள்ளவே முடியாதது. அநீதியானது.

குற்றமற்றவர்கள் தூண்டுதலுக்கு ஆளாகி பொய்யர்கள் என முடிவு கட்டப்பட்டது. ஏன் இதற்கும் பல் வேறு காரணங்கள் இருக்கலாம். தொடர்புடைய கேள்விகளால் குற்ற மற்றவர்கள் சலன மடைவது ஏன்?

"உதாரணமாக குற்றம் நடந்த தரு ணத்தில், அவர் வேறு நடவடிக்கை களுக்காக அவ்விடத்தில் இருந்திருக் கலாம். அது சட்ட ரீதியாக பிரச்சி னையற்றது என்ற போதும் அதனால் வெட்கப்பட்டிருக்கலாம். "எதுவித பிரச்சினையும் இல்லாத ஒரு அப் பாவி என்ற போதும் தன்னை இவர் கள் நம்பப் போவதில்லை என்ற பய மும் காரணமாயிருக்கலாம்.

இவற்றிலிருந்து தெரிவது என்ன? தான் பொய் சொல்வதைக் பொலி கிராவ் டெஸ்ட் கண்டுபிடித்துவிடும் என்ற அடிப்படை நம்பிக்கையே அவர்களைச் சலனப்படுத்துகிறது.

இதில் மற்றொரு ஆச்சரியமான விடயம் என்னவென்றால், பரிசோத னைக்குச் செய்வதற்கு முதல் அது பற்றிய விடயங்களை விளக்கும் நேரத்திலேயே மறைத்து வைத்த பல உண்மைகள் வெளிவந்தன என்பதே யாகும்.

## பொய்யான சாதனம்

சுட்டிகையான ஆய்வாளர் மற் றொரு பரிசோதனையும் செய்தார். பொலிகிராவ் டெஸ்ட்டிற்கான மெஷின் போன்ற போலியான உபகர ணத்தைப் பொருத்திவிட்டு கேள்வி களைத் தொடுத்தார். மறைத்து வைத்த உண்மைகள் கிடுகிடுவென வெளி வந்தன. உண்மையான மெஷினைத் தொடுத்தவர்களைவிட அதிகமாக உண்மைகளை வெளியிட்டனராம்.

இணையத்தில் இவை பற்றிய தக வல்கள் ஏற்கனவே நிறைய இருக்கின் றன. பாலியல் குற்றவாளிகளுக்கு பொலிகிராவ் டெஸ்ட் கட்டாயமாக் கப்பட்டால் இன்னும் பல தகவல்கள் வெளியாகும். குற்றவாளிகள் இணையத்திற்குள் நுழைந்தால் போதும், இப்பரிசோதனை எத்த கையது, அதன் போதாமைகள் என்ன என்பது போன்றவை வெட்ட வெளிச் சமாகிவிடும். அந்த டெஸ்ட் பற்றிய பீதி மறைந்துவிடும். துணிவோடு டெஸ்ட்டிற்குச் செல்வார்கள். பய மின்றிப் பொய் சொல்லும் துணிவு வந்துவிடும். அகப்பட மாட்டார்கள்.

## ஓரம்போ

இந்த டெஸ்டை ஓரங்கட்டி வெல் வதற்கான வழிமுறைகளும் உண்டு. இப்பரீட்சை எந்த அடிப்படையில் செய்யப்படுகிறது என்பதைப் புரிந்த கில்லாடிகள் பரீட்சித்துப் பார்த்து வெற்றி கண்டிருக்கிறார்கள்.

தொடர்புடைய விடயம் பற்றிய கேள்விகளுக்கு விடையளிக்கும் போது தமது உள உடலியல் பிரதி பலிப்புகளை அடக்கி வாசிக்கவும், பொதுப்படையான கேள்விகளுக்கு மிகைப்படுத்தியும் காட்டவும் தம க்குப் பயிற்சியளித்துத் தயார்படுத் தலாம்.தனக்குத்தானே ஏற்படுத்தக் கூடிய உடல் உள வலிகள் மிகைப் படுத்த உதவும்.

அதேநேரம் தியானம், யோகா சனம் போன்ற பயிற்சிகள் அமைதி காக்க உதவலாம்.

ஆன்மீக வழிமுறைகள் என நாம் நம்பும் தியானம், யோகாசனம் போன் றவை குற்றவாளிகள் தங்களைத் தாமே காப்பாற்ற உதவுகிறது என்பது பலருக்கும் ஜீரணிக்க முடியாத உண்மையான போதும், அதுதான் யதார்த்தத்தில் நடக்கிறது. குற்ற வாளிகள் பொலிஸ்காரனிடம் நல்ல பெயர் வாங்க அவற்றைச் செய்கிறார் கள். ஆன்மீகவாதிகள் இறைவனிடம் நல்ல பெயர் வாங்கச் செய்கிறார்கள். அவ்வளவுதான்!

ஆனால் உளஅமைதிக்கும், மன நோய்கள் தீரவும் அவை உத வுகின்றன என்பதையும் இங்கு சுட்டி க்காட்டுவது அவசியமாகிறது.

ஒரு உதாரணம். Floyd என்பவர் பொலிகிராவ் டெஸ்டின் அடிப்படை யில் தவறுதலாகக் குற்றவாளியாகக் காணப்பட்டார். இதனால் சினமடை ந்த அவர்,

சிறையில் இருந்த நேரத்தில் தன் னால் முடிந்தளவிற்கு இப்பரிசோ தனை பற்றிய தகவல்களை தேடிக் கண்டுபிடித்து, தான் பெற்ற அறிவின் அடிப்படையில் அதை வெல்ல முயன்றார். தன்னோடு இருந்த பல கைதிகளுக்கு அந்த அறிவைக் கொண்டு பயிற்சியளித்தார். வெறும் 15 நிமிடநேர பயிற்சி மட்டுமே கொடுத்தபோதும் 23 பேரால் அப்பரீட்சையில் வெல்ல முடிந்தது. 4 பேரால் மட்டுமே முடியவில்லை.

இத்தகைய அறிவைப் பயன்படுத்தி குற்றவாளிகளும், பாலியல் வன் முறையில் ஈடுபடுவோரும் பரிசோத னையில் தப்பி அப்பாவி முகம் பூண்டு மறைவில் குற்றமிழைக்க முடியும். இதனால்தான் சர்ச்சைகள் கிளம்பியுள்ளன.


"பொய்களைக் கண்டு பிடிக்கும்சு என நம்பப்படும் இந்தப் பரிசோதனை எதிர்காலத்தில் "அகப்படாமல் பொய் சொல்லக் கற்றுக் கொள்ளவும் உதவலாம்'' என்பதையிட்டு கவனம் எடுக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது.

"பொய் சொல்லப் போறேன். பொய் சொல்லப் போறேன்.''

அவ்வாறு சிரித்துப் பாடி சந்தேகம் எழாதபடி திட்டமிட்டுப் பொய் சொல்பவர்களைக் கண்டு பிடிக்கும் சாதனங்கள் ஏதாவது புதிதாக வரும் வரை காத்திருப்போம்.

## கடைசிப் பக்கம்

# மொழிபெயர்ப்பும் இலக்கிய துஷ்பிரயோகமும்



மு.பொன்னம்பலம்

மொழிபெயர்ப்பு என்பது ஒரு தனிக்கலை. இது ஒரு தனிக்கலை மட்டுமல்ல தனிப்பெருந் துறையாகவும் இயங்குகிறது எனலாம். மொழிபெயர்ப்பின்றேல் அறிவுப் பரிமாற்றம் என்பதே ஸ்தம்பிதம் அடைகிறது. மேற்குலகின் விஞ்ஞானம், தொழில்நுட்பவியலின் வளர்ச்சி, கீழைத்தேய மொழிகளுக்கு – இத் துறையில் வளர்ச்சியடையாத நாடுகளில் பேசப்படும் மொழிகளுக்கு – பெரும் சவாலாக உள்ளது என்பது முக்கிய கணிப்புக்குரியது.

கீழைத்தேய மொழிகளில் மிகவும் வளர்ச்சியடைந்ததாகக் கருதப்படும் செம்மொழி என்ற அந்தஸ்தைப் பெற்ற ஒன்றாகவும் கருதப்படும் தமிழ்கூட மேற்கூறப்பட்ட சவாலுக்கு எதிராக நிமிர்ந்து நிற்கக்கூடியதாக இல்லை என்பது வருத்தத்திற்குரியதே. மருத்துவம், பௌதிகம், இரசாயனம், தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் தமிழ் இன்னும் ஆரம்ப நிலையைக் கூட எட்டவில்லை என்பது இத்துறை சார்ந்தோர் கூற்றாகும். ஆயினும் தனக்கான வேர்ச்சொற்களின் வளம் கொண்ட மொழியான தமிழ் இத்தடைகளை வென்று முன்னேறலாம். தற்போது ஈழத்தில் "பௌதிகம்" என்பதை தமிழகத்தில் இயற்பியல் என்கிறார்கள். நாம் "இரசாயனம்" என்றால் தமிழகத்தில் வேதியல் என்கிறார்கள். இது மாற்று வலய காலத்துக்குரிய (TRANSITION) அடையாளம் என்பது சொல்லாமலே புலப்படும். இக்குறைபாடுகளை மேவிக்கொண்டு தமிழ் வளர வேண்டுமானால் இத்துறை சார்ந்தோரின் கடும் உழைப்பை தமிழ் வேண்டி நிற்கிறது.

இதேநேரத்தில் நாம் மெச்சும் வகையில் கலை இலக்கியம், கவின் கலை, நவீன புனைவியல், மெய்யியல் ஆகியவற்றில் தமிழ் பெரும் பாய்ச்சலை நிகழ்த்திக் கொண்டிருக்கிறது என்றால் மிகையாகாது. ஏன், FRITJOF CAPRA வின் புகழ்வாய்ந்த THE TAO OF PHYSIC'S என்ற நூல்கூட சிறப்பாக "இயற்பியலின் தாவோ" என்ற பெயரில் மொழி பெயர்க்கப்பட்டு வெளிவந்திருக்கிறது என்பது பெரும் சாதனையே. இதை மொழிபெயர்த்தவர் தமிழகத்தைச் சேர்ந்த பொன். சின்னதம்பி முருகேசன். இச்சந்தர்ப்பத்தில் இத்தகையதொரு சாதனையை முப்பது வருடங்களுக்கு முன்னர் ஏ.ஜே.கனகரட்னாவும் செய்துள்ளார் என்று சொல்வதும் மிகப் பொருத்தமானதாகும். மானிடவியல், அதன் தொன்மம் பற்றிய அரிய ஆய்வுகளை மேற்கொண்ட JOSEPH CAMPBELL எழுதிய THE HERO WITH A THOUSAND FACES என்ற நூலின் சாரத்தை இரத்தினச் சுருக்கமாக அவர் செய்திருக்கிறார். இதைப் படிக்க விரும்புபவர்கள் ஏ.ஜே.அவர்களின் "மத்து" எனும் நூலில் காணலாம்.

இதேபோல் ஈழத்தமிழர்களால் எழுதப்பட்ட சிறந்த புனைவுகள் (சிறுகதைகள்) அவ்வப்போது சிறப்பான முறையில் மொழிபெயர்ப்புக்குள்ளாகி வந்ததானது தமிழகத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் அதிகம் என்றே கூறவேண்டும். இற்றைக்கு நாற்பது வருடங்களுக்கு முன்னர் அ.முத்துலிங்கத்தின் "பக்குவம்" என்ற சிறுகதை தினகரனில் வெளிவந்தபோது அது பலரால் பேசப்பட்ட ஒன்றாயிற்று. இத்தகைய பரவலான பாராட்டு என்கிற சூடாற முந்தியே இக்கதை MATURITY என்ற தலைப்பில் பேராசிரியர் சிவத்தம்பியால் மொழிபெயர்க்கப்பட்டு ஒப்சேவரில் (மாலைநேரப் பத்திரிகை)வெளிவந்தது. இதை அவர் சாஹிரா கல்லூரியில் படிப்பித்துக்கொண்டிருந்த காலத்தில் செய்தார் என்றே நினைக்கிறேன்.

இதற்கு முன்னரே ஏ.ஜே.கனகரட்னா தமிழில் இருந்து சில கதைகளை மொழிபெயர்க்கத் தொடங்கியிருந்தார். அத்தகையவற்றில் முக்கியமானவையாக சாந்தினி எழுதிய "நீறுபூத்த நெருப்பு" என்ற கதையை THE WONTED FIRE என்ற தலைப்பிலும் பொ. தம்பிராசன் (ICESல் நூலகராகக் கடமையாற்றுகிறார்) எழுதிய "பறை' என்ற சிறுகதையை THE FUNERAL PYRE என்ற தலைப்பிலும் டொமினிக் ஜீவாவின் "ஞானம்" என்ற சிறுகதையை MONARCH என்ற தலைப்பிலும் மொழிபெயர்த்திருந்தார். ஏ.ஜே.தனது இறுதிக் காலம் வரை இத்தகைய தனது மொழிபெயர்ப்புகள் மூலம் தமிழுக்கு பெரும் தொண்டாற்றி இருக்கிறார் என்பது பற்றி நாம் கூறத்தேவையில்லை. டொரோன்டோ பல்கலைக்கழகத்தில் கடமையாற்றும் ஆங்கிலப் பேராசிரியர் செல்வா கனகநாயகம் அவர்களால் பதிப்பித்து சில வருடங்களுக்கு முன் வெளிக்கொணரப்பட்ட LUTESONG AND LAMENT என்ற நூலில் ஈழத் தெழுத்தாளர்களின் முக்கியமான புனைவுகள் (கவிதை, சிறுகதை)

(51ஆம் பக்கம் பார்க்க)

# சர்வதேச தரத்தில்

## எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் வெளியீடாக மாதாந்தம் வெளிவருகிறது...



# KALAIKESARI கலைக்கேசரி

CULTURE • HERITAGE • TRADITION • EVENTS • FASHION • INTERVIEWS • ENTERTAINMENT

மாத இதழ்




சிறப்பு விலை 125/-

**உங்கள் பிரதிகளுக்கு அழையுங்கள்**

சுரைனி : 0759 685658 / 0117 322741 சஹாரா : 0728 497720 / 0117 322731

## Purchase your digital copy at

MAGZTER DIGITAL MAGAZINE STORE TAP. READ. ENJOY

http://www.magzter.com/LK/Express-Newspapers/Kalaikesari/Lifestyle/

நமது பாரம்பரிய பண்பாட்டு கலாசாரங்களை
தமிழ்கூறும் நல்லுலகிற்கு எடுத்துச் செல்லும் மாத சஞ்சிகை




All Models of Computer printer Ribbons




Electronic Typewriter Ribbons

Inkjet Cartridges, Inkjet Refills

Laser Printer Toners,




Digital Duplicating Inks, Black & Colour




Digital Stencil Master Rolls

Photocopy Papers, Roneo Papers

Toner for any copies




Computer Accessories & Papers




Fax Papers, Fax Ink Film Rolls & Cartridges

Paper, Board Packing Materials




All types of Office Stationery




RAINBOW STATIONERS (PVT) LTD.




# Rainbow Stationers (Pvt) Ltd.

**IMPORTERS, DEALERS IN PAPER & STATIONERY**

No. 18, Maliban Street, Colombo 11, Sri Lanka.

Voice : 2433906 (Hunting) 2433907, 2433908 Fax : +94 11 2433904

e-mail: rainbowst@sltnet.lk Website : www.rainbowsts.com

***Join the Largest Stationery House***


Printed and published by Express Newspapers (Ceylon)(Pvt)Ltd,at No.185,Grandpass road,Colombo -14, Sri Lanka.